பக்கங்கள்: 20
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆவணி 16, வெள்ளிக்கிழமை 01.09.2017 | கதிர் 299


வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு நாடுங்கள்
சன்சிகா நகைமாடம்
இல.114, பஸார் வீதி, வவுனியா.
தொலைபேசி: 024 222 4028

# இடைக்கால அறிக்கைக்கு அனைத்துத் தரப்புகளுமே யோசனைகள் சமர்ப்பிப்பு

## நேற்று இறுதிக் கால அவகாசம் முடிய முன்

கொழும்பு,செப்ரெம்பர் 01

**புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழிகாட்டல் குழுவின் இடைக்கால அறிக்கைக் குப் பின் இணைப்பாகச் சேர்க்கவேண்டிய தமது யோசனைகளை நேற்று மாலை இறுதிக் காலக்கெடு முடிவடைவதற்கு முன்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, மஹிந்த தலைமையி லான கூட்டு எதிரணி, ஜே.வி.பி., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி. ஆகிய ஐந்து தரப்புகளுமே சமர்ப்பித்துவிட்டன.**

அதனால் எதிர்வரும் 7ஆம் திகதி வியாழக்கிழமையன்று வழிகாட்டல் குழு அதன் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூடும் போது தற்போது தயாரிக்கப்பட்டிருக்கும் இடைக்கால அறிக்கையின் நகலுடன் இந்தக் கட்சிகள் சமர்ப்பித்துள்ள யோசனைகளையும் பின்னிணைப் பாகச் சேர்த்து இடைக்கால அறிக்கையின் இறுதி வடிவம் உறுதிசெய்யப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அன்றையதினம், இந்த அறிக்கையை அரசமைப்புப் பேரவையாகச் செயற்படும் நாடாளுமன்றத்திடம் எப்போது சமர்ப்பிப்பது என்பது குறித்தும் தீர்மானிக்கப்படும் பக்கம் 18

## தேர்தல் திருத்தச் சட்டமூலத்தில் ஒப்பமிட்டார் சபாநாயகர் கரு



கொழும்பு,செப்.01

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் திருத்தச் சட்டமூலத்தில் சபாநாயகர் கருஜயசூரிய நேற்றுக் கையொப்பமிட்டுள்ளார்.

நாடாளுமன்றில் வைத்து அவர் அந்த ஆவணத்தில் கையெழுத்திட்டார். மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற அமைச்சர் பைஸர் முஸ்தபா, நாடாளுமன்றச் செயலாளர் பக்கம் 18

## பிரேஸிலில் இருந்து ஜெகத் தப்பிச்சென்றார் என்பது உறுதி

'தி வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை தகவல்

வாஷிங்டன், செப்.01

பிரேஸில் நாட்டுக்கான இலங்கைத் தூதுவர் ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய மீது அந்த நாட்டில் போர்க்குற்ற வழக்கு தொடரப்பட்டமையை அடுத்து அந்த நாட்டை விட்டுத் தப்பிச் சென்றமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. அது தொடர்பாக 'தி வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை செய்தியொன்றையும் வெளியிட்டுள்ளது.

இலங்கையில் போர்க் குற்றத்தில் ஈடுபட்டார் என்ற குற்றத்தைச் சுமத்தி ஜகத் பக்கம் 18

## கொழும்பில் சுஷ்மா குழுவினர்



கொழும்பு, செப்.01

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் நேற்று மாலை கொழும்பை வந்தடைந்துள்ளார்.

அவரை விமான நிலையத்தில் நிதியமைச்சர் மங்கள சமரவீர, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து ஆகியோர் வரவேற்றனர்.

கொழும்பில் நேற்று ஆரம்பமான இந்தியப் பெருங்கடல் கருத்தரங்கில் பங்கேற்கவே அவர் இலங்கைக்கு வந்துள்ளார்.

இந்தியாவின் ரயில்வே துறை அமைச்சர் சுரேஸ் பிரபு, இந்திய வெளிவிவகாரச் செயலர் எஸ்.ஜெய்சங்கர் உள்ளிட்ட குழுவினரும், சுஷ்மா ஸ்வராஜுடன் கொழும்பு வந்துள்ளனர்.

இவர்கள் அலரிமாளிகையில் இன்றும் நாளை பக்கம் 18

## சுவாமிநாதனின் பொருத்து வீட்டுக்கு எதிரான தமது வழக்கை திரும்பப் பெற்றார் சுமந்திரன்!

புதிய மனுவைத் தாக்கல் செய்யும் உரித்துடன்

கொழும்பு,செப்.01

மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதனின் பொருத்து வீட்டுத் திட்டத்துக்கு எதிராக யாழ் மாவட்ட எம்.பியான எம்.ஏ.சுமந்திரன் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை மனுதாரர் மீளத் திருத்தித் தாக்கல் செய்யும் உரித்துடன் மீளப் பெறுவதற்கு உயர்நீதிமன்றம் நேற்று அனுமதியளித்தது.

உயர்நீதிமன்றத்தில் நீதியரசர்கள் சிசர டீ ஆப்ரூ, அனில் குணரத்ன, விஜித் மலலகொட ஆகியோரைக் கொண்ட ஆயத் தின் முன்னிலையில் இந்த மனு நேற்று பூர்வாங்கமாக பக்கம் 18




## நடுக்கடலில் ட்றோலருடன் மூழ்கிய நான்கு தமிழக மீனவர்கள் மீட்பு!

இலங்கைக் கடற்படையினர் துரித நடவடிக்கை

யாழ்ப்பாணம்,செப்.01

படகு விபத்துக்குள்ளானதால் நடுக்கடலில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் நால்வரை இலங்கைக் கடற்படையினர் துரிதமாகச் செயற்பட்டுக் காப்பாற்றியுள்ளனர். நேற்று அதிகாலை நெடுந்தீவுக்கு மேற்கே 8.5 கடல்மைல் தூரத்தில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்களின் ட்ரோலர் விபத்துக்குள்ளானதில் அது வேகமாக மூழ்கிக் கொண்டிருந்தது. பக்கம் 18

## மீள்குடியேற்றப் பகுதிகளுக்கும் நாளை முதல் தனியார் பஸ்சேவை

அச்சுவேலி நகரில் இருந்து

யாழ்ப்பாணம்,செப்.01

அச்சுவேலி தனியார் சேவை மீள்குடியேற்ற பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட வுள்ளது

யாழ்ப்பாணம் – அச்சுவேலி தனியார் பஸ் சேவை நாளை 2 ஆம் திகதியில் இருந்து மீள்குடியேற்றப் பகுதிகளுக்கும் தனது சேவையை விஸ்தரிக்கவுள்ளது என வலி.கிழக்கு தனியார் சிற்றூர்தி சேவைகள் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

கடந்த யுத்தகாலத்திற்கு முன்னர் வலி.கிழக்கு பகுதிகளூடாகவும் சிற்றூர்தி சேவை இடம்பெற்றது.

எனினும் பின்னர் அப் பக்கம் 18

# நாம் இந்தியாவுக்கு எதிரானவர்கள் அல்லர்; ஆனால் இந்தியா சொல்வதை எல்லாம் ஏற்பவர்களும் அல்லர்

## ஆஸி. தமிழர்கள் மத்தியில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் விளக்கம்



மெல்பேர்ண்,செப்.01

நாம் இந்தியாவுக்கு எதிரானவர்கள் அல்ல. ஆனால் இந்தியா சொல்வதை எல்லாவற்றையும் ஏற்பவர்களும் அல்லர்.

–இவ்வாறு அண்மையில், அவுஸ்ரேலியாவின் மெல்பேர்ண் நகரில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போது, இந்தியாவுடனான உறவு தொடர்பான வினாக்களுக்கு பதிலளித்த போது தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறினார்.

கஜேந்திரகுமாரிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் அவர் அளித்த பதில்களும் வருமாறு:-

*ஏன் எப்போதும் இந்தியாவுக்கு எதிரான ஒரு நிலைப்பாட்டிலேயே நீங்கள் இருக்கின்றீர்கள்?*

நாம் இந்தியாவுக்கு எதிரானவர் இல்லை. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இந்தியாவுக்கு எதிரான ஒரு தரப்பும் அல்ல. இந்தியா சொல்லுகின்ற எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ள வேண்டிய தேவையும் இல்லை. இந்தியா சொல்லுகின்ற எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ளாத படியால் நாங்கள் இந்தியாவுக்கு எதிரானவர்கள் என்றும் இல்லை. ஆனால், தமிழ் மக்களின் நலன்களுடன் தொடர்புபட்ட விடயங்களில் இந்தியா எடுக்கின்ற முடிவுகள் தமிழர்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்துகின்றன பக்கம் 18

# ஆசியாவின் எழில் நகராக கொழும்பை மாற்றவுள்ளோம்!

## அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூறுகிறார்!

கொழும்பு, செப். 01

ஆசியாவின்எழில்மிகு நகராக கொழும்பை மாற்றவுள்ளோம் என பெரு நகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பின் குப்பைகளைக் கொண்டு உர உற்பத்தியை முன்னெடுத்து வருவதாகவும் விரைவில் கொழும்பு ஆசியாவின் அழகான நகரமாக மாற்றமடையும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம் பெற்ற நிகழ்வொன்றின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வரமாறு:-

கொழும்பின் குப்பைகள் மூலமாக கொழும்பிலுள்ள நீர் நிலைகளை பாதிக்கும் செயற்பாடுகளையும், கடல் வளங்களை அழிக்கும் நடவடிக்கைகளையே இதுவரை காலமாக நாம் மேற்கொண்டு வந்துள்ளோம்.

இதற்கு அரசாங்கம் மீது முழுமையாக பழி போட முடியாது. இதனை தீர்க்க முன்வந்த போது அதைத் தடுக்க பல்வேறு அரசியல் சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

கொழும்பில் மாதாந்தம் 600 தொன் குப்பைகள் சேர்க்கப்படுகின்றன. இந்த குப்பைகளைக் கொண்டு இரசாயன உரங்களை உற்பத்தி செய்யும் வேலைத்திட்டத்தை இப்போது நாம் ஆரம்பித்துள்ளோம். இந்தத் திட்டங்களின் மூலமாக எதிர்காலத்தில் குப்பை பிரச்சினைகளுக்குத்தீர்வு காண முடியும்.

விமர்சனங்களைக் கவனத்தில் கொண்டு எதையும் மாற்ற முடியாது. மாறாக சரியாக திட்டமிட வேண்டும். டெங்கு நோய் பரவலை நாம் தடுத்துள்ளோம். குப்பைகளை சரியாக கையாளும் நகர்வுகளை நாம் ஒவ்வொருவரும் முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.



# பிரபாகரன் இருந்தால் மஹிந்தவும் கோட்டாவும் வணங்கி மன்னிப்புக் கேட்கும் நிலை வந்திருக்கும்!

கொழும்பு, செப். 01

தற்போதைய அரசாங்கத்தின் பொறுப்பற்ற விதத்தை பார்க்கும் போது, மஹிந்தவும் கோட்டாபயவும் பிரபாகரனை வணங்கி மன்னிப்பு கேட்டிருக்க வேண்டிய நிலை வந்திருக்கும் என்று மஹிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப் பெரும தெரிவித்துள்ளார்.

கொழும்பில்நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முன்னாள் இராணுவத்தளபதி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுத் தொடர்பில் பிரேஸிலில் இருந்து இராணுவத் தலைமையகத்திற்கு மின்னஞ்சல் ஒன்று வந்துள்ளது.

இதில் இவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து தெளிவுபடுத்துமாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இந்த மின்னஞ்சலுக்கு பதில் அனுப்பும் போது, இந்த குற்றச்சாட்டுக்கள் குறித்து இதுவரை எமக்குத் தெரிவிக்கப்படவில்லை, எமது நாட்டில் இவ்வாறான யுத்த மீறல்கள் இடம்பெறவில்லை, எனப் பதில் அனுப்பப்பட்டுள்ளது.

இது சரியான பதிலா? இவ்வாறு தெரிவிப்பதா? பதவியில் இருப்பவர்கள் இவ்வாறு பதில் கூறுவதா? என கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும், தற்போது பிரபாகரன் உயிருடன் இருந்திருந்தால், மேலிடத்திலிருந்து உத்தரவு பிறப்பித்திருந்தால், நீதிமன்றத்தில் வைத்து மஹிந்த ராஜபக்ஷவையும், கோட்டபாய ராஜபக்ஷவையும் பிரபாகரனை வணங்கி மன்னிப்புக் கேட்குமாறு கூறியிருப்பார்கள் எனஎனக்குநினைக்கத்தோன்றுகின்றது எனக் குறிப்பிட்டுள்ளார்.

# இரணைதீவு காணி விடுவிப்பு தொடர்பில் நேற்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருடன் கலந்துரையாடல்!

## நேற்று பூநகரி கடற்படைத் தளத்தில்





கிளிநொச்சி, செப். 01

கிளிநொச்சியில் கடற்படையினர் வசமுள்ள மக்களின் பூர்வீக காணியான இரணைதீவு காணி விடுவிப்பின் முதற் கட்டமாக காணிகளை அடையாளப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ள கடற்படையினர் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பான கலந்துரையாடலொன்று நேற்று பூநகரி பிரதான கடற்படைத் தளத்தில் நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன, மீள்குடியேற்ற மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறீதரன் மற்றும் சாள்ஸ் நிர்மலநாதன் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் பாதுகாப்பு படையினருடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் போது முதலில் இரணைதீவு காணிகளை விடுவிக்க முடியாது என தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இந்தக் காணியை விடுவிப்பது தொடர்பில் பல்வேறு பாதுகாப்பு பிரச்சினைகள் உள்ளன என அவர்கள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரிடம் கூறியுள்ளனர்.

இருப்பினும் இரணைதீவு மக்களின் தற்போதைய நிலைமை தொடர்பில் தெளிவுபடுத்திய நிலையில், இரணைதீவு காணி விடுவிப்பின் முதற் கட்டமாக காணிகளை அடையாளப்படுத்தும் நடவடிக்கைக்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

மேலும், பிரதேச செயலாளர், நில அளவை திணைக்கள அதிகாரிகள் உட்பட பலரும் இரணைதீவிற்கு சென்று காணிகளை அடையாளப்படுத்தவுள்ளனஎனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

# ஜனாதிபதியின் அறிக்கை வெளிவராதமையால் எமது போராட்டத்தை தவிர்க்க முடியாது!

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவிப்பு

கொழும்பு, செப். 01

சைட்டம் தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு புதிய தீர்வுகள் உள்ளடக்கி, விசேட அறிக்கையொன்றை வெளியிடுவேன் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் அறிவித்திருந்தார். இதுவரையில் அதற்கான அறிவிப்பு எதனையும்ஜனாதிபதி விடுக்காமையால் தொழிற்சங்கப் போராட்டம் நடத்துவதை தவிர்க்கமுடியாது என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

மேலும் சைட்டம் தொடர்பில் அரசாங்கம் காட்டிவரும் அசட்டையான போக்கை கண்டித்து இரவு பகல் பாராது கொழும்பில் போராட்டம், பேரணிகள் நடத்தவும் திட்டமிட்டுள்ளோம் என அந்த அமைப்பின் செயலாளர் வைத்தியர் ஹரித அளுத்கே தெரிவித்துள்ளார்.

தொழில்சார் நிபுணர்களின் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பல வருடங்களாக சைட்டம் தொடர்பில் பல பேச்சுகளை நடத்தி வந்துள்ளோம். இந்த நிலையில் இறுதியாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது சைட்டம் தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு புதிய தீர்வுகள் உள்ளடக்கி, விசேட அறிக்கையொன்றை சமர்ப்பிப்பேன் என அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் இரண்டு நாள்கள் கடந்தும் அதற்கான எந்த அறிவிப்புகளும் விடுக்கப்படாதுள்ளமை அரசின் பொறுப்பற்ற செயற்பாட்டைத் தெளிவாகக் காட்டுகின்றது.

தற்போது நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள தேசிய இறைவரி சட்டமூலமும் வைத்தியர்களின் சுயாதீன செயற்பாட்டை கட்டுப்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

குறிப்பாக இலாபமீட்டாத வைத்தியசாலைகளின் செயற்பாட்டை கட்டுப்படுத்துவதற்கு இந்தச் சட்டமூலம் பெரிதும் உதவுகின்றன.

அதுமட்டுமல்லாது வைத்தியர்கள் பெற்றுக்கொள்ளும் சாதாரண வருமானத்துக்கும் நீண்டகால வருமான சேர்வைகளுக்கும் வரி அறவிடப்படவுள்ளது. இது பாரதூரமான செயற்பாடாகும்.

நாம் பல்வேறு கோரிக்கைகளை முன்னிலைப்படுத்துகின்ற போதும் காலத்துக்கு காலம் வைத்தியர்களின் சேவை மீதே இந்த அரசு அதிக கட்டுப்பாடுகளை விதிக்கின்றது. சைட்டம் தொடர்பில் அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிநிலைப்பாடுகளை கோரியிருந்தும் சுகாதார அமைச்சரின் விதண்டாவாதத்துக்கு ஏற்றவாறே இந்த அரசும் செயற்படுகின்றது.

எமது கோரிக்கைகள் நியாயமானவை என்பது முன்னாள் சுகாதார அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு நன்றாகவே தெரிந்தவிடயமாகும்.

ஆனால், சிலரின் தனிப்பட்ட நோக்கங்களுக்காக மக்களை ஏமாற்றுவது எந்த விதத்திலும் பொருத்தமான செயற்பாடாக அமையாது. இதன் காரணமாகவே கொழும்பு உள்ளிட்ட பிரதான நகரங்களை முன்னிலைப்படுத்தி, சைட்டம் எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir



# வாகனங்களை மீளளிப்பதற்கு பின்னடிக்கின்றார் டெனீஸ்வரன்

## அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கியமை தவறென வழக்குத் தாக்கல்

மன்னார், செப்.01

வடக்கு மாகாண சபையின் முன்னாள் போக்குவரத்து மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன், தான் வைத்திருக்கும் அரச வாகனங்களை மீளளிக்க பின்னடித்து வருகின்றார் என செய்திகள் வெளியாகியுள்ளன.

தன்னை அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கியமைக்கு எதிராக டெனீஸ்வரன் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ள நிலையிலேயே தம்மிடம் உள்ள வாகனங்களை மீளளிக்க கால அவகாசம் கோரியிருக்கின்றார் எனக் கூறப்படுகின்றது.

இதேவேளை, முன்னாள் அமைச்சர் டெனீஸ்வரன் தாக்கல் செய்த வழக்கு மாகாண சபையின் அதிகாரங்கள் தொடர்பாக வெளிப்படுத்தும் எனத் தெரியவருகின்றது. மத்திய அரசு மாகாண சபையின் காணி, பொலிஸ் அதிகாரங்களை முடக்கி வைத்துள்ளது.

இந்நிலையில், டெனீஸ்வரன் தாக்கல் செய்துள்ள வழக்கு விசாரணைகளின்போது மாகாண சபையின் சட்டங்கள், அதிகாரங்கள் தொடர்பான பல விடயங்கள் வெளிக்கொண்டுவரப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, முன்னாள் அமைச்சர் டெனீஸ்வரன் தாக்கல் செய்துள்ள மனுவில், தம்மை அமைச்சர் பதவியில் இருந்து வெளியேற்றியமைக்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்குமாறும், உரிய விசாரணைக்குப் பின்னர், அமைச்சுப் பதவியில் இருந்து வெளியேற்ற விடுத்த உத்தரவு முறைமை தவறானது எனப் பிரகடனப்படுத்துமாறும் கோரியுள்ளார்.

தமது அமைச்சுக்குரிய பொறுப்புக்களை தற்போது பகிர்ந்துகொண்டுள்ள முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன், அமைச்சர்களான அனந்தி சசிதரன், க.சிவநேசன் ஆகியோர் அந்தத் துறைகளுக்கான அமைச்சர்களாகச் செயற்படுவதற்கு இடைக்காலத் தடை விதிக்குமாறும் அவரது மனுவில் கோரப்பட்டுள்ளது.

இந்த மனுவில் வட மாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன், அமைச்சர்களான க.சர்வேஸ்வரன், அனந்தி சசிதரன், க.சிவநேசன், க.குணசீலன், முன்னாள் அமைச்சர் வைத்தியர் ப.சத்தியலிங்கம் மற்றும் ஆளுநர் ரெஜினோல்ட் கூரே ஆகியோர்எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகின்றது. (ம)





வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய சப்பறத் திருவிழா நேற்று இரவு இடம்பெற்றது. இதில் ஆயிரக் கணக்கான பக்கத்தர்கள் கலந்துகொண்டனர். இவ் ஆலய தேர்த்திருவிழா எதிர்வரும் 12ஆம் திகதி இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# நான் வயலிலும் வேலைசெய்தவாறு பாடசாலைக்கும் சென்று படித்தேன்

## எனது உடலில் விவசாய இரத்தம் ஓடுகின்றது: ஜனாதிபதி பெருமிதம்



மட்டக்களப்பு, செப்.01

'ஒரு விவசாயியின் மகன் என்ற வகையில் நான்வயலுக்கும்சென்றிருக்கின்றேன். அதேவேளை, பாடசாலைக்கும் சென்றேன். எனது உடலில் விவசாய இரத்தம் ஓடிக்கொண்டிருக்கின்றது'

– இவ்வாறு தெரிவித்தார், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

மட்டக்களப்பு – கரடியனாற்றில் நிர்மாணிக்கப்பட்டுள்ள விவசாய சேவைக்கால பயிற்சி நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்:–

கிழக்குமாகாணத்தின்அபிவிருத்திக்காகஅரசாங்கம் முக்கிய கவனம் செலுத்தியுள்ளது. ஜனாதிபதி செயலகம் ஊடாகவும், கிழக்கின் அபிவிருத்திக்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

திருகோணமலை போன்று மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள குளங்கள், வாவிகளைப் புனரமைப்பு செய்வதற்காக பெருமளவு நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளோம்.

திருகோணமலையில் வாவிகளைப் புனரமைப்பதற்கு இராணுவத்தினர் பயன்படுத்தப்பட்டு சிறப்பான முறையில், ஊழல் அற்றதாக அந்த வேலைத்திட்டங்கள் செய்யப்பட்டுள்ளன.

அதேபோன்று மட்டக்களப்பிலும் குளம் மற்றும் வாவிகளைப் புனரமைப்பதற்கு இராணுவத்தினரைப் பயன்படுத்துவதற்கு எண்ணியுள்ளேன்.

முக்கியமான பாரிய பொறுப்பை விவசாய அமைச்சிடம் ஒப்படைக்க நான் உத்தேசித்திருக்கின்றேன். நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் விவசாயத்துறையை மேம்படுத்துவதற்காக பாரிய திட்டம் ஒன்றை தயாரித்துக் கொண்டோம்.

நான் கனவான் வாழ்க்கையில் இருந்தவன் அல்லன். வயலிலும் நீரோடையிலும் ஓடி ஓடிப் பணியாற்றியுள்ளேன். விவசாயம் தொடர்பில் எனக்கு கூடிய விரும்பமும் நெருக்கமும் உள்ளது.

தேசிய பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்புவதில் சில சில குறைபாடுகள் காணப்பட்டன. தேசிய விவசாயத்தினை நவீனமயப்படுத்தவேண்டும். தேசிய பொருளாதார சபையினை ஆரம்பிப்பதற்கு நாங்கள் தீர்மானித்துள்ளோம்.

ஆசிய அபிவிருத்தி வங்கியும், உலக வங்கியும் நிதியுதவி வழங்குவதாக உறுதியளித்துள்ளன. இதனை சிறப்பாக முன்னெடுக்கலாம் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

ஐ.நா. சபையும், உலக உணவுத் திட்டமும் இத் திட்டத்தினை சிறப்பாக நடைமுறைப்படுத்துவதற்கு உதவுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். – என்றார். (ம)

# ரயில் தண்டவாளத்தில் வீழ்ந்த குடும்பஸ்தர் பரிதாபமாகப் பலி

## நேற்று அதிகாலை புங்கன்குளத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், செப்.01

ரயிலில் வந்த குடும்பஸ்தர் ஒருவர் இறங்கும்போது தவறி வீழ்ந்ததால் ரயில் சக்கரத்தில் நசிந்து உயிரிழந்தார். நேற்று அதிகாலை 5.00 மணியளவில் அரியாலை – புங்கன்குளம் ரயில் நிலையத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் அரியாலை ஆசீர்வாதப்பர் வீதியைச் சேர்ந்த ஆர்.அருள்நேசன் (வயது – 53) என்பவரே பலியானார். இவர் யாழ்ப்பாணத்தின் பிரபல தமிழ் ஆசிரியை மீராவின் கணவராவார்.

கொழும்பில் இருந்து ரயிலில் வந்த மேற்படி குடும்பஸ்தர், ரயில் யாழ்.புங்கன்குளம் ரயில் நிலையத்திற்கு வருகை தந்த நிலையில், நிறுத்தப்படுவதற்காக மெதுவாக நகர்ந்தது. அப்போது ஒரு கையில் பெரிய பொதி ஒன்றையும் மறு கையில் தண்ணீர்ப் போத்தல் ஒன்றையும் எடுத்துக்கொண்டு, ரயில் நகர்வதையும் பொருட்படுத்தாமல் இறங்கினார் எனக் கூறப்படுகின்றது.

அப்போது தவறுதலாக ரயில் தண்டவாளத்தில் வீழ்ந்த அவர், சக்கரங்களுக்குள் நசிந்து உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. அவரது சடலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது. சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

### நாம்...

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

**எந்த ஆட்சியிலும் வெளிவிவகார கொள்கை ஒன்றே**

இந்தக் கட்சி அரசியலை வைத்துக்கொண்டு ஒரு நாட்டினுடைய வெளிவிவகாரக்கொள்கையை, அதுவும், ஒரு அதிமுக்கியமான் வல்லரசின் வெளி விவகாரக் கொள்கையை நாம் ஒரு போதும் மதிப்பிடக் கூடாது. அவ்வாறு நாம் மதிப்பிட்டால், அதுவும் எமது ஒரு தவறு என்பதே என்னுடைய தாழ்மையான கருத்து.

*இந்தியாவில் இருப்பது பி.ஜே.பி. ஆட்சி. அது ஓர் இந்து மக்களின் கட்சி. ஈழத்தமிழர்களில் கிறிஸ்தவர்களும் இருந்தாலும், பெருமளவு மக்கள் இந்துக்கள். நாம் ஏன் பி.ஜே.பி. கட்சியுடன் ஒன்றிப் போய், அதனை எமது ஒரு பலமாக ஆக்கக் கூடாது?*

தமிழீழம், மதம் சார்ந்த ஒரு தேசமாக இருக்க முடியாது என்பதே எங்களுடைய அசைக்க முடியாத நிலைப்பாடு. நம்பிக்கை. இன்றைக்கு தமிழீழத்தில் ஓர் இந்துத்துவ திணிப்பு நடைபெற்றுக்கொண்டி ருக்கின்றது. நான் பொறுப்போடு உங்களுக்கு கூறுகின்றேன் – தமிழ்த் தேசத்தை அது சிதைக்கும். நாங்கள் அதை முற்றுமுழுதாக எதிர்ப்போம். இந்து மதத்துக்கு எதிர்ப்பு இல்லை; சைவ சமயத்துக்கு எதிர்ப்பு இல்லை; கிறிஸ்தவ மக்களுக்கும் ஒரு பிரச்சினையும் இல்லை. ஆனால் நான் மிகத் தெளிவாகக் கூறுகின்றேன் இன்றைக்கு தமிழீழத்தில் ஓர் இந்துத்துவத் திணிப்பு நடைபெற்றுக் கொண்டி ருக்கின்றது. அதை நாங்கள் கடுமையாக எதிர்ப்போம். அவ்வளவுதான்.

# சட்டமா அதிபர் திணைக்களத்தை கட்டுக்குள் வைத்திருந்தார் மஹிந்தர்

## வரலாற்றில் இது மோசமான செயல் என்கிறார் புதிய நீதியமைச்சர்

கொழும்பு, செப்.01

'முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சட்டமாக அதிபர் திணைக் களத்தை தமது கட்டுப் பாட்டுக்குள் வைத்திருந்தார். இது வரலாற்றில் முன்னெப்போதும் நடந்திராத வகையில் நீதிமன்றம் நிறைவேற்று அதிகாரத்தின் கீழ் இயங்கியது'

–இவ்வாறு, புதிய நீதியமைச்சர் தலதா அத்துக்கோரள தெரிவித்தார். நேற்று சுப நேரத்தில் தனது பணிகளை ஆரம்பித்த பின்னர், மஹிந்தவின் ஆட்சிப் பரிபாலனத்தை அவர் கடுமையாகச் சாடினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்–

'நீதிமன்றத்தின் சுயாதீனத் தன்மையைப் பாதுகாத்து நல்லாட்சியை உருவாக்கும் பொறுப்பை உரிய முறையில் நிறைவேற்றவுள்ளேன்.

எமது நேர்மை காரணமாகவே ஊடகவியலாளர்களுக்கு சுதந்திரம் கிடைத்துள்ளது. அந்த வகையில், ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக பேசுவதற்கும் ஆர்ப்பாட்டம் செய்வதற்கும் தற்போது உரிமையுள்ளது.

நல்லாட்சியில் நாட்டு மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். நாட்டில் நீதிமன்றமும் நிறைவேற்று அதிகாரமும் இணைந்து செயல்பட்ட ஒரு காலம் காணப்பட்டது. அப்போது அதைப்பற்றியாரும்பேசவில்லை.

வரலாற்றில் என்றும் இல்லாத வகையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவின்தலைமையில் சட்டமா அதிபர் திணைக்களம் இயங்கியது. அப்போது யாரும் இதனைப் பற்றிக் கூறவில்லை.

இதற்கு முன்னர் நிறைவேற்று அதிகாரத்தின் கீழ் செயல்பட்ட சட்டமா அதிபர் திணைக்களத்தை ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் சுயாதீனமான நிறுவனமாக மாற்றியுள்ளனர்'. – எனப் பெருமையுடன் கூறினார். (ம)

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

# இது தேர்தல் காலாண்டு

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணி அரசியல் விஸ்வரூபம் எடுக்க வாய்ப்பளித்து விடுமோ என்று அஞ்சி கடந்த இரண்டரை ஆண்டுகளாகத் தேர்தல்களை நடத்தாமல் இழுத்தடித்து வந்த நல்லாட்சி அரசுக்கு அடுத்து வரும் மூன்று, நான்கு மாதங்களும் - இந்த வருட இறுதிக் காலாண்டு முழுவதும் - தொல்லை தரும் தேர்தல் காலமாக மாறப் போகின்றன என்பது போலவே தென்படுகின்றது.

அரசியல் களநிலைவரப் போக்குகள் அதனைத்தான் எடுத்துக் காட்டுகின்றன.

விரும்பியோ விரும்பாமலோ தேசிய ரீதியில் - இலங்கை முழுவதிலும் - உள்ளூராட்சித் தேர்தலையும், கிழக்கு, வட மத்தி, சப்ரகமுவ ஆகிய மாகாணங்களுக்கான தேர்தலையும், இந்த வருட இறுதிக்கு முன்னர் நடத்தி முடிக்க வேண்டிய கட்டாயம் அரசுக்கு நேர்ந்திருக்கிறது.

இந்தத் தேர்தல்களை தள்ளிப்போடுவதற்கு அரசு விரும்பினாலும் கூட அந்த விடயம் அரசின் கைகளைத் தாண்டிப் போய் விட்டது என்பதே உண்மை.

உள்ளூராட்சித் தேர்தல்கள் திருத்தச் சட்டம் பெரும் கால தாமதத்துக்குப் பின்னர் நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வரப்பட்டு அங்கு பெரும் இழுபறிக்கு மத்தியில் நிறைவேற்றப்பட்டது. நாடாளுமன்ற விவாத சமயத்தில் பல்வேறு திருத்தங்களும், திருத்தங்களுக்குத் திருத்தங்களும் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டன. அவற்றையெல்லாம் உள்ளடக்கியதாக இந்தச் சட்ட வரைவை நேர்சீர் செய்யக் காலதாமதமாகும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் உடனடியாக அந்தத் திருத்தங்களைச் செய்து எந்த நேரத்திலும் அந்தச் சட்ட நகலின் இறுதி வடிவில் ஒப்பமிடுவதற்கு சபாநாயகர் தயாராகி விட்டார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன. அப்படி அவர் கையெழுத்திட்டு 75 முதல் 90 நாள்களில் தேர்தலை நடத்தி முடிக்கலாம் என சுயாதீனமான தேர்தல் ஆணையமும் வெளிப்படையாகவும் தெளிவாகவும் அறிவித்துள்ளது என்பதால் பெரும்பாலும் அத்தேர்தல் இவ்வாண்டு டிசெம்பரில் நடப்பது உறுதியாகிவிட்டது.

இதே போன்ற நிலைமைதான் மாகாணசபைகள் தேர்தல் விடயத்திலும்.

மேற்படி மூன்று மாகாண சபைகளின் பதவிக்காலமும் இந்த மாத முடிவுடன் காலாவதியாகின்றது. அடுத்த மாத முற்பகுதியில் அவற்றுக்குரிய தேர்தலுக்கான அறிவிப்பை வெளியிட்டு, அந்த நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்லவேண்டிய பொறுப்பு தேர்தல் ஆணையகத்துக்கு வந்துவிடும். சட்டரீதியாக அப்படி தேர்தல் ஆணையத்துக்கு அந்தப் பொறுப்பு வந்தால், அதன் பின்னர் அரசு அதில் தலையிட்டு, அதைத் தடுத்து நிறுத்துவது என்பது சாத்தியமற்றது.

அந்தத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு விடுக்கும் அதிகாரம் தேர்தல் ஆணையத்துக்கு வருவதற்கு முன்னர் அதைத் தடுத்து, அந்த மாகாண சபைத் தேர்தல்களை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு - குறைந்தபட்சம் ஓராண்டுக்காவது - தள்ளிப் போடும் எத்தனத்தை அரசுத் தரப்பு ஆரம்பித்தது.

மாகாணசபை தேர்தல்களை ஒழுங்குபடுத்துதல் என்ற பீடிகையோடு இருபதாவது அரசமைப்புத் திருத்தம் மூலம் அதை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டது. அதற்கான ஏற்பாடுகளும் மும்முரமாகச் செய்யப்பட்டன.

ஆனால் அந்த முயற்சி பிசுபிசுத்துப் போயிருப்பதாகவே தெரிகிறது.

பதவிக்காலம் முடிவுறும் மூன்று மாகாணசபைகளுக்குமான தேர்தல்களை நடத்தும் பொறுப்பும் அதிகாரமும் அடுத்த மாத முற்பகுதியில் தேர்தல் திணைக்களத்தின் கைகளில் வீழ்வதற்கு முன்னர் தற்போதைய அரசமைப்புக்கு இருபதாவது திருத்தத்தைக் கொண்டுவருவதன் மூலம் அந்தத் தேர்தல்களைத் தள்ளிப்போடும் அரசின் முயற்சி பெரும்பாலும் சரிவரப்போவதில்லை என்பது இப்போது தெளிவாகிவிட்டது.

இந்த இருபதாவது திருத்தம், மாகாணசபைகள் சம்பந்தமானது என்பதால் அது தொடர்பில் எல்லா மாகாண சபைகளினதும் கருத்துகளும் செவிமடுக்கப்பட்டு, இணக்கம் பெறப்பட வேண்டியது அவசியமாகும். இலங்கையின் ஒன்பது மாகாண சபைகளில் மிக அதிகமானவை அந்தத் திருத்தத்தை நிராகரிக்கும் முடிவில் தீர்க்கமாக உள்ளன என்பது தெளிவாகி வருகிறது. இந்தப் பின்புலத்தில் இந்தத் திருத்தத்தை மேற்கொள்வதற்கு குறைந்தபட்ச தேவையான நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு என்ற தேவையைக் கூட நல்லாட்சி அரசு திரட்டுவது சாத்தியமற்றது என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

போதாக்குறைக்கு இந்த உத்தேச திருத்தம் தொடர்பில் உயர்நீதிமன்றப் பரிந்துரை எவ்வாறு அமையுமென்ற சந்தேகமும் பல தரப்புகளினாலும் கிளப்பப்படுகிறது.

பல்வேறு மாகாண சபைகளும் இந்த இருபதாவது திருத்தத்திற்கு எதிராகச் சீற்றம் கொண்டு நிற்கையில் இந்தத் திருத்தத்தை நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவுடன் நிறைவேற்றுவதுடன் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் மக்களின் அனுமதியும் அதற்கு அவசியம் என்று தீர்ப்பளித்துவிட்டால் விடயம் கோவிந்தாதான்.

அப்படி ஒரு தீர்ப்பு உயர் நீதிமன்றத்திடமிருந்து வருமானால், அடுத்த மாத முற்பகுதியில் மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்துவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் அதிகாரம் தேர்தல் திணைக்களத்துக்கு செல்வதற்கு முன்னர் அந்த இருபதாவது திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு வாய்ப்பில்லாமல் போய்விடும்.

இத்தகைய சூழல்கள், நெருக்கடிகள் ஆகியவற்றின் பின்புலத்தில், இந்த மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தல்கள் உடனடியாக நடைபெறுகின்றமையை அரசு தடுத்து நிறுத்துவது பெரும்பாலும் துர்பலமே.

ஆகவே, வருட இறுதிக்குள் உள்ளூராட்சித் தேர்தலும், அதற்கு முன்னர் மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தலும் நடைபெறுவதும் தவிர்க்க முடியாத கட்டாயமாகி வருகின்றது.

ஆக, இந்த வருட இறுதிக் காலாண்டு இந்த நல்லாட்சி அரசுக்கும், மஹிந்தர் தலைமையிலான கூட்டு எதிரணிக்கும் அவற்றின் ஆதரவுத் தளத்தை பரீட்சிக்கும் அமிலச் சோதனைக்கான தேர்தல் காலாண்டாகப் போகின்றது என்றே தோன்றுகின்றது.

# மாவீரர்களின் பெற்றோருக்கு உலருணவு வழங்கப்பட்டது



முல்லைத்தீவு, செப்.01

முல்லைத்தீவு கைவேலிப் பகுதியில் மாவீரர்களின் பெற்றோருக்கு நேற்று உலருணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. டென்மார்க் அன்னையர் அறக்கட்டளையகத்தின் நிதி உதவியில் முன்னாள் போராளிகளின் ஏற்பாட்டில் இந்த உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன.

வெளிநாட்டில் உள்ள தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் இந்த செயற்திட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுக்கத் தாங்கள் தீர்மானித்துள்ளனர் எனவும் அதற்காக மாவீரர்களின் பெற்றோரின் விவ ரங்கள் பதிவு செய்யப்பட்டு வருவதாகவும் முன்னான் போராளியான செல்வச்சந்திரன் தெரிவித்தார். (ம)

# கஞ்சாவுடன் கிளிநொச்சி வாசி கைது!

வவுனியா, செப். 01

வவுனியா மத்திய பேருந்து நிலையத்தில் கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக் காலை 5.45 மணியளவில் இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சியிலிருந்து வவுனியாவிற்கு எடுத்துச் செல்லப்பட்ட 2 கிலோகிராம் கேரளக் கஞ்சாவை வவுனியா மத்திய பேருந்து நிலையத்தில் நபரொருவர் வைத்திருந்த நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் கிளிநொச்சியைச் சேர்ந்த 39 வயதுடைய குடும்பஸ்தர் ஆவார்.

விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர் என வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, அண்மைய நாள்களில் வவுனியா பேருந்து நிலையத்தில் தொடர்ச்சியாக கேரளக் கஞ்சா பிடிபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-100)

# இலங்கைப் படையினரின் தூபிக்கு அமெரிக்கத் தூதுக்குழு அஞ்சலி!



கொழும்பு,செப். 01

பத்தரமுல்லையில் அமைந்துள்ள முப்படையினரின் நினைவுத்தூபிக்கு அமெரிக்க இராணுவத் தூதுக்குழுவினர் நேற்றுமுன்தினம் அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

அண்மையில் நிறைவுற்ற கொழும்புப் பாதுகாப்பு மாநாடு - 2017 இல் பங்குகொள்வதற்காக ஆஸ்திரேலியாவிற்கான அமெரிக்க இராணுவ பசுபிக் கட்டளையின் வடக்கு துணைக் கட்டளைத் தளபதியுமான மேஜர் ஜெனரல் ரோஜர் ஜே நோபல் தலைமையில் வருகை தந்த 5 உறுப்பினர்களைக் கொண்ட குழுவினரே முப்படையினரின் நினைவுத்தூபிக்கு அஞ்சலி செலுத்தினர்.

இராணுவத் தூதுக் குழுவினரோடு நினைவுத்தூபிக்குச் சென்ற இலங்கைக்கான அமெரிக்க தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். (க)

# கடற்படைத் தலைமையகத்திற்கு பிரித்தானியத் தூதுவர் விஜயம்!



கொழும்பு,செப். 01

இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவர் ஜேம்ஸ் டவுரிஸ் வட மத்திய கடற்படை கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் மெர்ரில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துள்ளார்.

வட மத்திய கடற்படை தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் பிரித்தானியத் தூதுவர் மன்னாருக்கான விஜயத்தின்போது கடற்படை தலைமையகத்தில் கடற்படைத் மரபுகளுக்கமைய மரியாதை செலுத்தப்பட்டது.

இருவருக்கிடையில் சிநேகபூர்வ கலந்துரையாடல்கள் இடம்பெற்றன, இந்த நிகழ்வை நினைவு கூரும் வகையில் நினைவுச் சின்னங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

மேலும் தலைமன்னார் கடற்படை முகாமில் அமைந்துள்ள பழைய ரயில்பாதை மற்றும் கலங்கரை விளக்கம் என்பவற்றையும் அவர் இந்த விஜயத்தின் போது பார்வையிட்டார். (க)

## நாளை

02.09.2017
சனிக்கிழமை

நட்சத்திரம் : பூராடம் காலை 8.25 வரை
திதி : ஏகாதசி மு.ப 9.45 வரை
சுபநேரம் : 3.05 – 4.35 வரை
இராகுகாலம் : 9.05 – 10.35 வரை

# தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கும் முயற்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரஸும் மிகத் தீவிரம்!

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறுகிறார்



மன்னார், செப். 01

இந்த அரசு கொடுத்த வாக்குறிதிகளில் அபிவிருத்தித் திட்டங்களைப் பற்றியும் வாழ்வாதார உதவிகளைப் பற்றியும் நிறைய விடயங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் அரசியல் ரீதியான பிரச்சினைகள் இன்னும் நிறைய தீர்க்கப்பட இருக்கின்றன என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

எமது பிரதேச மக்களின் எதிர்கால சுபீட்ச வாழ்வுக்கு வழிகோல வேண்டிய தார்மீக பொறுப்புள்ள கட்சிகளின் அடிப்படையிலே தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய இந்த இரு கட்சிகளுக்கும் இருக்கின்றன என நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

மன்னார் பெரியமடுவில் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இலங்கை அரசின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சால் நிறைவேற்றப்பட்டு ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் செயற்படுத்தப்பட்ட பெரியமடு நீர் வழங்கல் திட்டத்தை நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப்ஹக்கீம் நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதி சுகீர் முரளிகரன், ஈயூ பிரதிநிதி செல்வி தியூசி மற்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன், எம்.எம். மஸ்தான், முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் முத்தலிப் பாறூக், உனைஸ் பாறூக் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இங்கு இந்த ஊரின் சார்பில் பேசும்பொழுது பெரியமடு மேற்கு, காயாநகர், சன்னார் மற்றும் ஈச்சளவக்கை ஆகிய கிராம பகுதிகளுக்கு இவ் நீர் வழங்கலை விஸ்தரிப்பதற்கு மேலதிக நிதி ஒதுக்கீடு செய்ய ப்பட வேண்டும் என இங்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இந்த விடயமாக இந்த விழாவில் அதிதிகளாக கலந்து கொண்டிருக்கும் வெளிநாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளிடம் நான் இவ்விடயத்தை அவர்களின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளேன்.

அத்துடன், எங்கள் அரச நிதி ஒதுக்கீட்டின் மூலம் ஏதாவது இந்த பிரதேசத்துக்கு பெற்றுக் கொடுக்க முடியுமா என்று ஆலோசித்து இதைச் செய்யலாம் என நாங்கள் எண்ணியுள்ளோம்.

என்னைப் பொறுத்தமட்டில் மாந்தை, மடு ஆகிய இரு பிரதேச செயலகப் பிரிவுகளுக்குள்ளும் போதிய நீர் மூலகங்கள் இருக்கின்றன. அதாவது, ஏறக்குறைய 40 இற்கு மேற்பட்ட பெரிய குளங்கள் அத்துடன் ஆறுகள் கூட இந்த பிரதேசப் பிரிவுகளுக்குள் இருக்கின்றன.

இந்த நிலையில், இந்த நீரை சுத்திகரிப்பதற்கான முயற்சியில் இந்தப் பகுதி மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக அதுவும் இந்த வறட்சி காலங்களில் கூட தங்கு தடையில்லாமல் நீரை வழங்கக்கூடிய பிரதேச செயலகப் பிரிவுகளாக இருப்பதற்கான காரணத்தால் இதற்கான வேண்டிய ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும்.

இதைவிட மிகவும் மோசமாக பாதிப்புக்கு உள்ளாகியிருக்கும் முசலி பிரதேசப் பிரிவில் நாங்கள் வியாடிக்குளத்திலிருந்து ஒரு பெரிய நீர் வழங்கல் திட்டத்தையும் அதே வேளையில் கல்லாற்றுக்கு குறுக்கே ஒரு நீர் தேக்கத்தை அமைத்து இங்கிருந்தும் அதிகளவு நீரைப் பெற்று மன்னார் தீவுப் பகுதியிலும் அங்கிருக்கும் குறைபாடுகளை நிவர்த்திப்பதற்காக எங்களால் நீரைக் கொண்டு செல்ல முடியும் என்பதையும் நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

எனவே, இந்தப் பிரதேசங்களில் இருக்கின்ற, அதிலும் இந்த வறட்சிக் காலத்தில் மிக மோசமாக பாதிப்படைந்திருக்கின்ற இந்த நிலைவரத்தை கருத் திற் கொண்டு யுனிசெவ் நிறுவனம் அடிப்பைப்பை (கேன்ட் பைப்) குறிப்பாக உங்கள் விவசாய தேவைக்காக இருபத்தைந்து பைப் தந்து உதவியுள்ளனர்.

இந்த நாட்டிலே முதன் முறையாகக் கடல் நீரைச் சுத்திகரித்து வழங்குகின்ற ஒரு நீர் வழங்கும் திட்டம் ஒன்றை யாழ். குடா நாட்டில் அறிமுகப் படுத்தியுள்ளோம்.

இது வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த முடியுமானால் இந்தத் திட்டத்தை மன்னார் மற்றும் கற்பிட்டி ஆகிய இடங்களிலும் கடல் நீரை சுத்திகரித்து வழங்குகின்ற செயற்றிட்டங்களை அறிமுகப்படுத்தலாம்.

ஆனால், இந்தத் திட்டத்தை பொறுத்தமட்டில் மன்னாருக்கு இவ் தேவை அவசியமற்றதாகவே இருக்கின்றது.

ஏனென்றால், இங்கு போதிய நீர் வழங்கல் பிரதேசமாக மன்னார் காணப்படுகின்றது. கட்டுக்கரைக்குளம் இவ்வாறான பெரிய நீர்த்தேக்கங்கள் கொண்ட பிரதேசம் என்ற காரணத்தால் இவை இங்கு தேவையற்றதாக இருப்பதாலும் அத்துடன் இவ்விடயத்தில் விவசாய திணைக்களத்துடன் மற்றும் விவாயிகளுடன் இருக்கும் முரண்பாடுகளைக் களைந்து கொள்ள வேண்டியும் உள்ளது.

ஏற்கனவே, இரணைமடுக் குளத்திலிருந்து யாழ். குடா நாட்டிற்கு தண்ணீர் கொண்டு செல்லுகின்ற விடயத்தில் இன்னும் இழுபறியில் இருந்து வருகின்றது.

இதை தீர்த்து வைப்பதற்கு நாங்கள் தாராளமான முதலீடுகளைச் செய்து மக்களின் சந்தேகங்களை தீர்ப்பதில் இன்னும் முடிவற்ற நிலையிலே இருக்கின்றோம்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள விவசாயிகள் யாழ். குடா நாட்டிலுள்ள மக்களுக்கு குடிதண்ணீரை கொண்டு செல்வதனால் தங்களுக்குள்ள விவசாயத்துக்குப் பாதிப்பு ஏற்படும் என்று அடிப்படை இல்லாத ஒரு பீதியை இன்னும் தங்களுக்குள் வைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இவர்களின் பிரச்சினையை தீர்ப்பதற்காக இரணைமடுக் குளத்தின் நீர் கொள்வனவை அதிகரிப்பதற்காக இரண்டு மீற்றர் உயரத்தை அதிகரித்து கொள்ள இருபது மில்லியன் டொலரை அதற்காகச் செலவழித்துள்ளோம். இப்படி செய்யப்பட்டபோதும் இந்த நிலை தொடர்ந்த வண்ணமே காணப்படுகின்றது.

இதனால், கடல் நீரை சுத்திகரிப்பதின் முயற்சியை நாங்கள் தீவிரப்படுத்தியுள்ளோம். ஆனால், கடல் நீரைச் சுத்திகரித்து வழங்குகின்ற போது இதற்கான கட்டணம் என்பது சாதாரண கட்டணத்தை விட கூடுதலாக இருக்கும்.

இந்தப் பிரச்சினை காரணமாகத்தான் கடல் நீரை சுத்திகரித்து வழங்குவது என்பது குறிப்பாக மழை இல்லாத நீர் பற்றாக் குறை காலங்களில் மாத்திரம் இதை பகுதி நேர வழங்குதல் மூலம் பொருளாதார ரீதியில் மக்களுக்குப் பயன் தரக்கூடியதாக இருக்கும். இதைப்பற்றி நாங்கள் தீவிரமாக சிந்தித்து நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

இந்த பிரதேச மக்கள் யுத்தத்தால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டவர்கள். இங்கு நிறைய பாதிப்புகள் இருக்கின்றன.

இந்த அரசு கொடுத்த வாக்குறுதிகளிலே அபிவிருத்தித் திட்டங்கள் அத்துடன் வாழ்வாதார உதவிகள் பற்றியும் நிறைய விடயங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தா லும் அரசியல் ரீதியான பிரச்சினைகள் இன்னும் நிறைய தீர்க்கப்பட இருக்கின்றன என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும்.

எமது பிரதேச மக்களின் எதிர்கால சுபீட்ச வாழ்வுக்கு வழிகோல வேண்டிய தார்மீக பொறுப்புள்ள கட்சிகளின் அடிப்படையிலே தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய இந்த இரு கட்சிகளுக்கும் இருக்கின்ற தார்மீகப் பொறுப்பு இங்கு ஏராளமான காணாமற்போனாருடைய பிரச்சினைகள். யுத்தத்தால் பாதிப்படைந்த மக்களின் பிரச்சினைகள்.

இவைகளை தீர்ப்பதற்காக ஐக்கிய நாடுகளின் மனித உரிமை சபையின் மூலம் நிர்மாணிக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளன.

அந்த பொறி முறைகள் இவற்றை எல்லாம் இந்த அரசு சர்வதேச சமூகத்துக்கு வாக்களித்த மாதிரி நாட்டின் சிறுபான்மை மக்களுடைய வாக்குகளோடும் அங்கீகாரத்தோடும் ஆட்சிக்கு வந்த இந்த அரசு இவற்றை நிறைவேற்றி கொடுப்பதிலும் அத்துடன் இனப்பிரச்சினைக்கான நிரந்திர தீர்வாக ஓர் அரசமைப்பின் மூலம் அந்த தீர்வு திருப்திகரமாக நிறைவேற்றுவதில் உறுதி செய்து கொள்வதில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் தீவிரமாக செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன எனவும் தெரிவித்தார்.

(க -112)

(மற்றுறொரு செய்தி 19 ஆம் பக்கத்தில்)

## அரசமைப்பு சபையில் விஜயதாஸ நீடிக்கமுடியுமா என சபாநாயகர் ஆராய்வு!

கொழும்பு, செப். 01

பதவியில் இருந்து விலகிய அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ இலங்கையின் அரசமைப்புச் சபையில் தொடர்ந்தும் நீடிக்க முடியுமா? என்பது தொடர்பில் ஆராயவுள்ளது என சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

அரசமைப்புச் சபைக்கான தமது பிரதிநிதியாக விஜயதாஸ 2015ஆம் ஆண்டு பிரதமரால் நியமிக்கப்பட்டார்

இதனைத் தவிர அந்தக் குழுவில் சபாநாயகர் கருஜெயசூரியவின் தலைமையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் ஆர். சம்பந்தன், சர்வோதய தலைவர் ஏ.ரி ஆரியரட்ண, ராதிகா குமாரசுவாமி, சிப்லி அஸீஸ், அமைச்சர் ஜோன் செனவிரட்ண, பாட்டலி சம்பிக்க ரணவக்க போன்றோர் உள்ளடங்கியுள்ளனர்.

இந்தநிலையில் அமைச்சு பதவியில் இருந்து விலகியுள்ள அவர், தொடர்ந்தும் அரசமைப்பு சபையில் அங்கம் வகிக்க முடியுமா? என்பது குறித்து உரிய அதிகாரிகளுடன் கலந்தாலோசிக்கவுள்ளேன் என சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

## அலோசியஸ் மீது சட்ட நடவடிக்கை எடுக்க சட்டமா அதிபர் திணைக்களம் உத்தரவு!

கொழும்பு, செப். 01

இலங்கைமத்தியவங்கியின் பெரும் நிதி மோசடி விவகாரத்தின் பிரதான சூத்திரதாரியென சந்தேகிக்கப்படும் அர்ஜூன் அலோசியஸ் மற்றும் அவரது பெர்பெச்சுவல் ட்ரெஷரிஸ் நிறுவனம் மீது ஆணைக்குழு நடவடிக்கை எடுக்க வேண்டும் என சட்டமா அதிபர் திணைக்களம் உத்தரவிட்டுள்ளது.

ஆணைக்குழுவில் முன்னிலையாகியிருந்த மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் தப்புல டீ லிவேரா தெரிவித்துள்ளார்.

பெர்பெச்சுவல் நிறுவனத்தின் உண்மையான தரவுகளை மாற்றி ஆணைக்குழுவுக்கு அவர் அனுப்ப முயற்சித்தமை பெரும் குற்றச்சாட்டு எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த 2015ஆம் ஆண்டு நடந்த பிணைமுறி மோசடி தொடர்பான கணினி பதிவுகளை அலோசியஸ் 2017ஆம் ஆண்டு ஜூலை மாதம் 06ஆம் திகதியன்றே மாற்றியிருக்கின்றார் என ஆணைக்குழுவின் புலனாய்வு பிரிவினர் கண்டுபிடித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை அவ்வாறு மாற்றப்பட்ட 25 தரவுகள் கண்டறியப்பட்டுள்ளன.

எனவே, இந்தத் தரவுகளின் அடிப்படையில் பெர்பெச்சுவல் ட்ரெஷரிஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி இதுவரை வழங்கியிருக்கும் சாட்சியங்கள் பொய்யானவை எனக் கருதப்பட வேண்டும் என ஜெனரல் தப்புல டீ லிவேரா ஆணைக்குழுவின் முன்னிலையில் வலியுறுத்தியுள்ளார். (க)

# சட்டவிரோதமான முறையில் வாகனேரியில் மணல் அகழ்வு!

மட்டக்களப்பு, செப். 01

மட்டக்களப்பு - வாகனேரி, முள்ளிவட்டவான் பகுதியில் சட்டவிரோதமாக மண் அகழப்பட்டு வெளி மாவட்டங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளருக்கு மண் அகழ்வில் ஈடுபடும் கும்பலால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

முள்ளிவட்டவான் பகுதியில் சட்டவிரோதமான முறையில் அகழப்படும் மண் டிரக்டர் மற்றும் டிப்பர்கள் மூலமாக வெளிமாவட்டங்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

இவ்வாறு சட்டவிரோதமாக அகழப்பட்டு வெளிமாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படும் மணல் பல லட்சம் ரூபாவிற்கு விற்கப்படுவதுடன், வேறு சில பகுதிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையிலேயே, அங்கு செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளருக்கு மண் அகழ்வில் ஈடுபடும் சிலரால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இதன்போது அவர்கள், குறித்த பிரதேசத்திற்கு செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளரை வழி மறித்து மிரட்டி தாக்க முயற்சித்துள்ளனர்.





**செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளருக்கு அச்சுறுத்தல்!**



அத்துடன், வீடியோ, கமரா மற்றும் தொலைபேசி போன்றவற்றை பலவந்தமான முறையில் பறித்து பல மணி நேரமாக கையகப்படுத்தி வைத்திருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், சேகரிக்கப்பட்ட காட்சிகளை வெளியிடக் கூடாது என அவர்கள் அச்சுறுத்தல் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக ஊடகவியலாளரால் வாழைச்சேனை பொலிஸாருக்கு முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளதுடன், வாக்கு மூலமும் வழங்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க)

## பிரதேச செயலாளரை நிரந்தரமாக நியமிக்குமாறு வேண்டுகோள்!

மட்டக்களப்பு, செப். 01

வாகரைப் பிரதேச செயலகத்துக்கு பிரதேச செயலாளர், உதவிப் பிரதேச செயலாளர் எவராவது ஒருவரை நிரந்தரமாக நியமிக்குமாறு கட்டுமுறிவு விவசாயிகள் சங்கச் செயலாளர் ரீ.ஜீ.குருகுலசிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச செயலகம் கடந்த 5 மாதங்களாக பிரதேச செயலாளரின்றி உதவிப் பிரதேச செயலாளரைக் கொண்டு இயங்கி வருகின்றது.

இதேவேளை, ஏறாவூர் நகர பிரதேச செயலகம் கடந்த சுமார் 4 மாதங்களாக பிரதேச செயலாளரின்றி பதில் பிரதேச செயலாளரின் கீழ் இயங்கி வருகின்றது.

மேலும், ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகம், வாகரை பிரதேச செயலகம், ஆகியவையும் கடந்த இரு மாதத்திற்கும் மேலாக பிரதேச செயலாளர்களின்றி உதவிப் பிரதேச செயலாளர்களின் கீழ் இயங்கி வருகின்றன எனவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

எவ்வாறாயினும் மேற்படி பிரதேச செயலகங்களுக்கு பிரதேச செயலாளர்கள் நியமிக்கப்பட வேண்டும் என அந்தந்தப் பிரதேசங்களிலுள்ள பொது நல அமைப்புக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன. இதேவேளை பிரதேச செயலாளர் இல்லாத மற்ற மூன்று பிரதேச செயலகங் களிலும் உதவிப் பிரதேச செயலாளர்கள் நிரந்தரமாக கடமை புரிந்து வருகின்ற போதிலும் வாகரைப் பிரதேச செயலகத்தில் வாரத்தில் 3 தினங்கள் மாத்திரமே உதவிப் பிரதேச செயலாளர் கடமையாற்றுகின்றார்.

இந்த பிரதேச செயலகத்தில் பதில் பிரதேச செயலாளரும் வாரத்தில் இரு தினங்கள் குறித்த மணித்தியாலங்கள் கடமையிலிருந்து வருகிறார்.

எனவே, குறைந்தபட்சம் உதவிப் பிரதேச செயலாளரையாவது நிரந்தரமாக நியமிக்குமாறு வாகரைப் பிரதேச மக்கள் சார்பாக வேண்டுகோள் விடுப்பதாக கட்டுமுறிவு விவசாயிகள் சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார்.





## மட்டு. விவசாயிகளுக்கு நெல் நாற்று இயந்திரங்கள்!

மட்டக்களப்பு, செப். 01

மட்டக்களப்பு மாவட்ட இளம் விவசாய தொழில் முயற்சியாளர்களுக்கு நெல் நாற்று இயந்திரம் வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி .எஸ். எம். சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தெரிவு செய்யப்பட 9 இளம் விவசாய தொழில் முயற்சியாளர்களுக்கு நெல் நாற்று இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

### ஒன்று கூடல் மண்டபம் அமைத்துத் தருவதாக

## பளுகாமம் தமிழ் மாணவிகளுக்கு வாக்குறுதி வழங்கினார் ஜனாதிபதி!

மட்டக்களப்பு, செப். 01

மட்டக்களப்புக்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் பழுகாமம் கண்டுமணி மகாவித்தியாலய மாணவிகள் கோரிக்கை ஒன்றை முன்வைத் துள்ளனர்.

தமது பாடசாலைக்கான ஒன்றுகூடல் மண்டபம் ஒன்றை அமைத்துத் தருமாறு பாடசாலை மாணவிகள் ஜனாதிபதியிடம் விண்ணப்பித்திருந்தார்கள்.

மாணவிகளின் இந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, உடனடியாக அவர்களுடைய பாடசாலையில் ஒன்றுகூடல் மண்டபத்தை அமைத்துத் தருவதாக வாக்குறுதி வழங்கியுள்ளார்.



இதையடுத்து பாடசாலை மாணவிகளின் கலை நிகழ்வுகளும், ஜனாதிபதியின் உரையும் நடைபெற்றன. அவர்கள் ஜனாதிபதியுடன் இணைந்து புகைப்படங்களையும் எடுத்துக் கொண்டனர்.



இதேவேளை, மட்டக்களப்பு - பதுளைவீதி கரடியனாறில் 81.4 மில்லியன் ரூபாயில் நிர்மாணிக்கப்பட்டுள்ள விவசாய சேவைக் கால பயிற்சி நிலையத்தைத் திறந்து வைப்பதற்காக ஜனாதிபதி இன்று மட்டக்களப்பிற்கு விஜயம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# 20 ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றியே தீருவோம்!

## அமைச்சரவை இணைப் பேச்சாளர் ராஜித திட்டவட்டம்



கொழும்பு, செப். 01
அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டமூலத்துக்கு மாகாண சபைகள் அங்கீகார மளிக்கா விடின் நாடாளுமன் றில் அதனை அரசு நிறைவேற் றும் என்று சுகாதார அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச் சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத் தில் நேற்றுமுன்தினம் நடை பெற்ற வாராந்த அமைச் சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டமூலம் அனைத்து மாகாண சபைகளில் தொடர்ச் சியாக தோற்கடிக்கப்பட்டவாறு உள்ளது. மாகாண சபைகளில் அதிகாரங்கள் அரசிடம் உள்ள போது குறித்த சட்டமூலம் ஏன் இவ்வாறு தோல்வியடை கின்றது.

ஒரே தினத்தில் தேர்தலை நடத்த வேண்டும் என்பது அனைவரும் ஒன்றிணைந்து எடுத்த தீர்மானமே.

உள்ளூராட்சிசபைத்தேர்தல் ஒரே தினத்தில் நடத்துவது போன்று மாகாண சபைத் தேர்தல் மற்றும் நாடாளுமன்ற, ஜனாதிபதித் தேர்தல்களை ஒரே தினத்தில் நடத்துவது குறித்து ஓர் இணக்கப்பாடு எட்டப்பட்டிருந்தது.

கொள்கை ரீதியாக எடுக்கப் பட்ட முடிவுகள் மாகாண சபை களால் நிராகரிக்கப்பட்டால் நாடாளுமன்றம் 20ஆவது திருத்தச்சட்டமூலத்தை நிறை வேற்றும் என்றும் அவர் தெரி வித்துள்ளார்.

இதேவேளை, பயங்கர வாதத்தைத் தோற்கடிக்கவே நாங்கள் யுத்தத்தை செய்தோம். ஆதாரங்கள் இல்லாமல் இரா ணுவத் தளபதிகள் மீது போர்க் குற்றங்களைச் சுமத்த முடி யாது. யுத்தத்தின் போது இடம் பெற்ற உயிரிழப்புகள் அனைத் தும் படுகொலை என்று எடுத் துக் கொள்ள முடியாது என்றும் அமைச்சர் ராஜித தெரிவித் துள்ளார்.

சர்வதேச நீதிமன்றில் முன் னாள் இராணுவத் தளபதியும், பிரேஸிலுக்கான தற்போதைய இலங்கை அரசின்தூதுவருமான ஜகத் ஜயசூரிய மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள போர்க் குற் றச்சாட்டு வழக்கு தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதில் வழங்கும் போதே அமைச்சர் மேற் கண்ட வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

விசேடமாக குற்றஞ்சாட் டப்பட்டுள்ள காணாமல் போனோர், மனிதப் படுகொலை, கொலை, சித்திரவதை, துஷ் பிரயோகம் உள்ளிட்ட காரணி கள் தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இலங்கை அரசு தெளிவாக சர்வதேசத்துக்கு எடுத்துரைத்துள்ளது.

ஆனால், ஆதாரங்கள் இல் லாமல் யுத்தத்தின் போது போர்க்குற்றங்கள் இடம் பெற் றன என்று இராணுவத் தளபதி கள் மீது பொய்யான குற்றச் சாட்டுகளை சுமத்த முடியாது.

யுத்தத்தின் போது இடம் பெற்ற அனைத்துக் குற்றச் சாட்டுகளும் கொலை என்று நினைக்கின்றனர். அரசு என்ற ரீதியில் அவ்வாறான நிலைப் பாட்டில் நாங்கள் இல்லை.

நாடு என்ற அடிப்படையில் தீர்மானம் எடுத்து தீவிரவாதத் தைத் தோற்கடிக்கவே நாங்கள் யுத்தத்துக்குச் சென்றோம். அதில் நாங்கள் வெற்றி கொண் டோம் எனவும் அவர் கூறியுள் ளார்.

## போராட்டங்கள் வெடிக்கும் என எச்சரிக்கை!

கொழும்பு, செப். 01
அடுத்த மாதம் பெரியளவில் போராட் டங்கள் வெடிக்கும் என அரசாங்க மருத் துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலா ளர் டொக்டர் ஹரித அலுத்கே எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மாலபே தனியார் மருத்துவக்கல்லூரிக்கு எதிராக நடைபெற்று வரும் போராட்டத் தில் பங்கேற்ற போது ஊடகவியலாளர் களிடம் அவர் இத னைக் குறிப்பிட்டுள் ளார்.

மாலபே தனி யார் மருத்துவக் கல் லூரியை ரத்து செய் யும் நோக்கில் அடுத்த மாதம் பெரியளவி லான போராட்டங் கள் முன்னெடுக் கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அர சாங்க மருத்துவ அதி காரிகள் சங்கத்தின் நிறைவேற்றுச் சபை நேற்று முற்பகல் கூடி யுள்ளது.

(க)

## ஜனாதிபதி மைத்திரியைச் சந்தித்தார் அமெ. உதவி இராஜாங்கச் செயலர்!





கொழும்பு, செப். 01
இலங்கைக்குவிஜயம் மேற்கொண்டுள்ள தெற்கு மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பதில் உதவிச் செயலர் அலிஸ் வெல்ஸ், நேற்றுமுன் தினம் மாலை ஜனாதி பதி மைத்திரிபால சிறி சேனவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

கொழும்பில் நேற்று ஆரம்பமான இந்தியப் பெருங்கடல் கருத்தரங் கில் பங்கேற்பதற்காக, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பதில் உதவிச் செயலர் அலிஸ் வெல்ஸ்நேற்றுமுன்தினம் கொழும்பு வந்து சேர்ந் தார்.

அவர் நேற்றுமுன் தினம் இலங்கைக்கான அமெரிக்கதூதுவர் அதுல் கெசாப்புடன் இணைந்து, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது கலந் துரையாடப்பட்ட விடயங் கள் பற்றிய தகவல்கள் ஏதும் வெளியிடப்பட வில்லை.

அதேவேளை, இலங்கை வந்துள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக் களத்தின் பதில் உதவிச் செயலர் அலிஸ் வெல்ஸ் இலங்கை அரச அதிகாரி கள், வர்த்தக மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதி கள் உள்ளிட்டோரையும் சந்திக்கத் திட்டமிட்டுள் ளார்.

## இராணுவச் சிப்பாய் தற்கொலை!

அரலகங்வில பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட தம்மின்ன இராணுவ முகாமில் கடமையாற்றி வந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் தற்கொலை செய்து கொண்டார்.

இந்த இராணுவச் சிப்பாய் தனது உத்தியோகபூர்வ துப்பாக்கியினால் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

பேராதனை ஹேஹியாதெனிய பிரதேசத்தைச் சேர்ந்த 22 வயதான டபிள்யூ.எம். தொடம்வெல என்னும் நபரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டார்.

எனினும், தற்கொலை செய்து கொண்டமைக்கான காரணம் இதுவரை வெளியாகவில்லை. உயிரிழந்த படைச் சிப்பாயின் சடலம் அரலகங்வில வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## சட்டவிரோதமான செயற்பாடுகளால் சேதமுற்றுள்ள புத்துவெட்டுவான் வீதி!



முல்லைத்தீவு - தேறாங்கண்டல் புத்து வெட்டுவான் வீதி சட்ட விரோத செயற்பாடுக ளால் மிக மோசமாக சேத மடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், புத்துவெட்டுவான், மரு தன்குளம், பழையமுறி கண்டி, ஐயங்கன்குளம், தேறாங்கண்டல் உள் ளிட்ட மிகவும் பழைமை வாய்ந்த விவசாயக் கிரா மங்களை இணைக்கும் பிரதான வீதியாகவும் காணப்படுகின்றது.

அத்துடன், ஏ-9 வீதியின் கொக்காவில் சந்தியிலிருந்து மாங் குளம், வெள்ளாங்குளம் வீதியின் கொத்தம்பியா குளம் சந்தியில் இணைக் கும் சுமார் 23 கிலோ மீற்றர் நீளமான குறித்த வீதியின் 10 கிலோமீற்றர் வீதி கடந்த 2013 ஆம் ஆண்டில் பல மில்லியன் ரூபா செலவில் புனரமைக் கப்பட்டுள்ளது.

இந்த வீதி உரிய முறையில் புனரமைக்கா மலும், மணல் அகழ்வு கள், கிரவல் அகழ்வுகள், மரக்கடத்தல்கள் என்பன இவ்வீதியூடாகவே வெளி யிடங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவதனால் இந்த வீதி மிக மோசமாக சேதமடைந்துகாணப்படு வதாக பிரதேச வாசிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இதனால் எந்தவித போக்குவரத்து வசதிகள் கூட இல்லாத இந்தப் பகுதி மக்கள் பயணிக்கும் வீதியானது 13 கிலோ மீற்றர் நீளமான ஒரு பகுதி புனரமைக்கப்படா மலும், ஏற்கனவே புனர மைக்கப்பட்ட 10 கிலோ மீற்றர்தூரம் சேதமடைந்த நிலையிலும் காணப்படு வதனால் இந்தப்பகுதி மக்கள் போக்குவரத்தில் பெரும்துன்பங்களை அனு பவித்து வருகின்றோம் எனத் தெரிவித்துள்ளனர்.

## பிரேசில் போர்க்குற்ற வழக்கை உன்னிப்பாக கவனிக்க ஜனாதிபதி உத்தரவு!

இலங்கையின் முன்னாள் இரா ணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜயசூரியவுக்கு எதிராக பிரேசிலில் தொடரப்பட்டுள்ள போர்க்குற்ற வழக்கு தொடர்பான விவகாரத்தை உன்னிப்பாகக் கவனியுங்கள் என்று சம்பந்தப்பட்ட அதிகாரி களுக்கு தாம் உத்தரவிடப் போகி றோம் என ஜனாதிபதி மைத்திரி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகங்களின் ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகிகளுடன் நடத்திய சந்திப் பின்போதே, ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன இந்தத் தகவலை வெளியிட்டார்.

இந்தச் சந்திப்பின்போது, பிரே சிலுக்கானதூதுவராக பணியாற்றிய ஜெனரல் ஜெகத் ஜயசூரியவுக்கு எதிராக பிரேசிலியாவில் தொடரப் பட்டுள்ள போர்க்குற்ற வழக்குத் தொடர்பாக, ஜனாதிபதியிடம் கேள் விகள் எழுப்பப்பட்டன.

அதற்குப் பதிலளித்த அவர், போர்க்குற்ற வழக்கை எதிர்கொள் வதில் இருந்து தப்பிப்பதற்காக ஜெனரல் ஜெயசூரிய, பிரேசிலில் இருந்துநாடுதிரும்பவில்லை. பிரேசி லில் தூதுவராகப் பணியாற்றிய அவ ரது பதவிக்காலம் முடிந்து விட்டது. எனவே அவர் நாடு திரும்பினார்.

எனினும், இந்த விவகாரத்தை உன்னிப்பாக கவனிக்குமாறு, சம் பந்தப்பட்ட அதிகாரிகளைத் தாம் கேட்டுக் கொள்ளப் போகிறேன் என்றும் அவர் தெரிவித்தார்.

# 20 வருடங்களாக உள்ளூராட்சி மன்றங்களில் ஆளணி உருவாக்கம் மேற்கொள்ளப்படவில்லை!

## அகில இலங்கை பொது ஊழியர் சங்கம் தெரிவிப்பு



கிளிநொச்சி, செப். 01

வடக்கில் இருபது வருடங்களாக ஊழியர்கள் ஆளணி உருவாக்கம் மேற்கொள்ளப்படவில்லை என்றும் இதனால் இருபது வருடங்களுக்கு முன் காணப்பட்ட சனத் தொகையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட ஆளணியினரே தற்போதும் பணியாற்றி வருகின்றனர் என்றும் அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த இருபது வருடங்களில் சனத் தொகை அதிகரித்திருக்கிறது, பிரதேச சபைகள் நகர சபைகளாக அங்கீகரிக்கப்படவில்லை என்றாலும் அந்த நிலைக்கு உயர்ந்திருக்கின்றன. தேவைகளும், சேவைகளும் அதிகரித்துள்ளன.

இவ்வாறு தேவைகளும், சேவைகளும் அதிகரித்த நிலையில் காணப்பட ஊழியர்களின் ஆளணி மட்டும் பழைய நிலையிலேயே உள்ளது. இதனால், இருக்கின்ற ஊழியர்கள் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர்.

மேலும், ஊழியர்களின் சம்பள முரண்பாடுகளுக்குத் தீர்வு இன்னும் எட்டப்படவில்லை, பதவி உயர்வுகள் வழங்கப்படவில்லை, பல வெற்றிடங்களுக்கு ஆளணி நிரப்பப்படவில்லை இந்த நிலைமை நீண்ட காலமாகத் தொடர்கிறது.

வட மாகாண உள்ளூராட்சி அமைச்சர் என்ற வகையில் முதலமைச்சரின் கவனத்திற்கு மேற்படி விடயம் தொடர்பில் பல தடவைகள் கொண்டு சென்ற போதும் அவரும் இது வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை வட மாகாண சபையின் ஆட்சிக்காலம் இன்னும் ஒரு வருடமும் ஒரு மாதமுமே. இந்தக் காலத்திற்குள் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பார்கள் என்ற நம்பிகை எமக்கு இல்லை.

இவ்வாறானதொரு நிலைமைக்கு மாகாண சபையின் வினைத்திறனற்ற செயற்பாடும், உள்ளூராட்சித் திணைக்களத்தின் செயற்திறனற்ற நிலைமையுமே காரணம்.

அத்தோடு, தற்போதைய நிலைமைக்கு ஏற்ப ஆளணி உருவாக்கம் செய்யப்பட்டு ஊழியர்கள் உள்வாங்கப்படுவார்களாக இருந்தால் சுமார் மூவாயிரம் பேருக்கு வடக்கில் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுக்க முடியும்.

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் ஊழியர்களின் நலன்கள் சார்ந்து செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

ஒரு தலைமைத்துவதின் கீழ் செயற்படுகின்றோம் எனவே அதனை குழப்பும் வகையில் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவாளர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

எங்களுடைய சங்கத்தின் கடிதத் தலைப்பை மோசடியாகப் பயன்படுத்தியுள்ளதோடு, சங்கத்தின் புதிய செயலாளரையும் தாக்கியுள்ளனர். இவர்களின் இவ்வாறான நடவடிக்கை தொடரும் பட்சத்தில் நாம் நீதிமன்றம் செல்வதற்கும் ஆலோசித்து வருகின்றோம் எனவும் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பத்திரிகையாளர் சந்திப்பில் அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் உப தலைவர் அ.அன்ரனி, நிர்வாக ஆலோசகர் செ. இராசையா, கிளிநொச்சி முல்லைத்தீவு மற்றும் வவுனியா இணைப்பாளர்களான ஆ.புண்ணியமூர்த்தி, சி. சற்குணராஜா, ந.தேவ கிருஷ்ணன், ஆ.சூரிய குமார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## தினசரி ராசி பலன் 01.09.2017

**2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆவணித்திங்கள் 16 ஆம் நாள் தசமித் திதி காலை 7.36 மணி வரை பின்னர் ஏகாதசி. நட்சத்திரம்- பூராடம் முழுவதும். ராகுகாலம்- பகல் 10.38 மணி முதல் 12.10 மணி வரை. சுபநேரம்- மாலை 06.05 மணி முதல் 07.34 மணி வரை.**

**இன்று திவசம் செய்ய வேண்டிய திதி. ஆவணி மாத வளர்பிறை ஏகாதசி. பிறந்த நட்சத்திர வழிபாடு: பூராடம்.**

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம் :** நன்மையான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். தேகாரோக்கியம் சிறப்பாக இருக்கும். வியாபாரத்தில் லாபம் கிடைக்கும். பெண் உத்தியோகத்தர்களுக்கு வரவேற்பு அதிகரிக்கும்.

**ரிஷபம்:** சஞ்சலமான நாள். மனம் ஒருவித கவலையால் சோர்வு அடையும். பணவரவு குறையும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு உண்டாகும். வீண் அலைச்சல் உண்டாகும்.

**மிதுனம் :** சம பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் ஏற்றமும் இறக்கமுமாக இருக்கும். வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். எடுக்கும் முயற்சிகள் தடைப்படும்.

**கடகம் :** யோகமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். எடுக்கும் முயற்சிகள் வெற்றியைத் தரும். பெண்களுக்குத் திருமண யோகம் உண்டாகும்.

**சிம்மம்:** சுபீட்சமான நாள். பணம் பல வழிகளாலும் வந்து சேரும். நீண்ட கால அபிலாசைகள் நிறைவேறும். திருமணம் விரைவில் நடந்தேறும். சகோதர வழியால் நன்மை கிடைக்கும்.

**கன்னி :** சலனம் மிகுந்த நாள். மனக்குழப்பம் யோசனை அதிகரிக்கும். பணம் பற்றாக்குறையாக இருக்கும். குடும்பத்தில் வீண் சச்சரவுகள் உண்டாகும்.

**துலாம் :** மத்திம பலன்கள் காணப்படும். பொருள் வரவு- மத்திமமாக இருக்கும். தேவையற்ற செலவுகளால் மனவேதனை உண்டாகும்.

**விருச்சிகம் :** அனுகூலமான நாள். பணவரவு திருப்தி தரும். எடுக்கும் முயற்சிகள் அனுகூலமாகும். வேலைப்பளு அதிகரிக்கும். தூரதேசப் பயணங்கள் சிலருக்கு அனுகூலமாகும்.

**தனுசு :** இன்பமான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். எண்ணிய காரியங்கள் கைகூடும். வீடு, வாகன வசதி பெருகும்.

**மகரம் :** குழப்பமான நாள். மனம் சஞ்சலமடையும். பணம் தட்டுப்பாடாக இருக்கும். செலவுகள் அதிகரிப்பால் கடன்பட நேரும். குடும்பத்தில் குழப்ப நிலை காணப்படும்.

**கும்பம் :** ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. தனவரவு அதிகரிக்கும். உடலில் புது உற்சாகமும் தைரியமும் உண்டாகும். வியாபாரம் விறுவிறுப்பாக நடக்கும்.

**மீனம் :** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பது நல்லது.

**சந்திராட்டமநாள்: கார்த்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1,2 இந்த நட்சத்திரங்களில் பிறந்தோர் இன்று சுபகருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.**

## பல்கலை கைலாசபதி அரங்கில் கதம்ப இசை நிகழ்வு நாளை!

யாழ்ப்பாணம்,செப்.1

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நுண்கலைத்துறை, ஜேர்மன் கோத்தே நிறுவனம் மற்றும் சுவிஸ் தூதரகம் இணைந்து ''செரண்டிப் மியூசிக் லாப்'' எனும் ஓர் இசை நிகழ்வை யாழ். பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் நாளை சனிக்கிழமை மாலை 6 மணிக்கு நடத்தவுள்ளன.

இலங்கை, சுவிஸ், ஜேர்மன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த மிகச் சிறந்த இசைக் கலைஞர்கள் கலந்துகொள்ளும் இந் நிகழ்வை இலவசமாக கண்டுகளிக்கலாம். (இ)

## ஹஜ் பெருநாள் தொழுகை யாழ். ஜின்னா மைதானத்தில்

நாளை சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு ஹஜ் பெருநாள் ஜும்மாவும், தொழுகையும் யாழ்ப்பாணம், ஜின்னா மைதானத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளன.

அனைத்துப் பள்ளிவாசல் நிர்வாகிகள் ஒன்று கூடி இந்தத் தீர்மானம் எடுத்துள்ள போதிலும், பெருநாள் தினத்தில் எதிர்பாராத வகையில் மழையேற்பட்டால் பெரிய பள்ளிவாசலில் ஆண்களுக்கும் மஸ்ஜித் முஹம்மதியாவில் (புதுப் பள்ளி) பெண்களுக்கும் தொழுகை நடத்துவது என்றும் முடிவாகியுள்ளது.

மைதானத்தில் நடைபெறும் ஹஜ் பெருநாள் ஜும்மாவுக்கான தண்ணீர், மின்சாரம், ஒலி, மைதான விரிப்பும் அனைத்து வசதிகளையும் ஒவ்வொரு பள்ளி வாசல் நிர்வாகிகளும் பொறுப்பேற்றுள்ளனர். அதேவேளை தவ்ஹீத் ஜமாத்தினரால் யாழ். கடற்கரை மைதானத்தில் பெருநாள் ஜும்மாவும் நடைபெறவுள்ளது. (இ-19)

## ஹஜ் பெருநாள் கண்காட்சி

யாழ்ப்பாணம்,செப்.1

யாழ். கியூடெக் கரிதாஸ் ஜே/86 முதியோர் சங்கத்தால் ஹஜ்பெருநாள் விழாவும் உணவு கண்காட்சியும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். மன் ப உல் உலூம் மதுரஸா மண்டபத்தில் நடைபெறும்.

சர்வமத மக்களின் சக வாழ்வை மேம்படுத்தும் வகையில் ஹஜ் பெருநாள் சிற்றூண்டிகளை காட்சிக்கு வைப்பதுடன் உணவு பரிமாறலும் இடம்பெறவுள்ளன. ஜே/86 முதியோர் சங்கத்தினர் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளனர்.

அத்துடன், கடந்த வாரம் நடைபெற்ற சித்திரப் போட்டியில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பரிசும் வழங்கப்படும். (இ-19)

## சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம்



யாழ்ப்பாணம் நல்லூர் செட்டித்தெருவைச் சேர்ந்த யாழ்ப்பாணம் மாநகர சபையில் பொதுசன தொடர்பு உத்தியோகத்தராகவும், தகவல்வழங்கும்அலுவலராகவும் கடமையாற்றும் சண்முகம் லோகசிவம் கடந்த 31 ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதிவான் இ. சசிதரன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

இவர் நல்லூர் தெற்கு கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவராகவும், யாழ் பல நோக்கு கூட்டுறவு சங்க கிளை இல.12 இன் கிளைக்குழுத் தலைவராகவும், நல்லூர் முருகன் சன சமூக நிலைய கணக்காய்வாளராகவும், ஈச்சமோட்டை ஸ்ரீ ஞானவைரவர் கோவில் நிர்வாக சபை உறுப்பினராகவும், யாழ்ப்பாணம் மாநகர சபை சைவசமய விவகாரக்குழு உறுப்பினராகவும் சேவையாற்றி வருகிறார்.

கொட்டடி சனசமூக நிலையமும், கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கமும் இணைந்து ''சமூக திலகம்'' பட்டம் வழங்கி கௌரவித்ததுடன் ஒரு சிறந்த சமூக சேவையாளராகவும் சேவையாற்றி பாராட்டுக்களைப் பெற்று வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

வழிமூலம்- sputnik news
மொழியாக்கம் - நித்தியபாரதி



## ‘நல்லிணக்கப் பணி’யை ஆரம்பித்துள்ள

# மருத்துவக் கப்பல்: ‘சீனாவின் கடற்படை இராஜதந்திரமா?’

கடற்படையின் மருத்து வக்கப்பலான Peace Ark தற்போது தனது ஆறாவது ‘நல்லிணக்கப் பணியை’ அபிவிருத்திய டைந்து வரும் சில நாடுகளில் மேற் கொண்டு வருகிறது. குறிப்பாக இந்தப் பணியின் மூலம் அபிவிருத்தி யடைந்து வரும் நாடுகளில் வாழும் மக்களுக்கு இலவச மருத்துவ சேவை களை சீனக் கடற்படையின் மருத்து வக் குழுவினர் வழங்கி வருகின்ற னர்.

இந்நிலையில், சீனக் கடற்படை யின் மருத்துவ சேவை இவ்வாண்டு ஏன் அதிக கவனத்தை ஈர்த்துள்ளது என்பது தொடர்பாக ரஷ்யாவின் அரசியல் ஆய்வாளர் விளக்கியுள்ளார்.

இவ்வாண்டு சீனாவின் கப்பலான Peace Ark தனது 150 நாள் பயணத்தின் மூலம் எட்டு நாடுகளுக்குப் பயணம் செய்யவுள்ளது. எனினும் முன்னைய ஆண்டுகளை விட இவ்வாண்டு சீனாவின் மருத்துவக் கப்பல் சிறி லங்கா மற்றும் டிஜிபோட்டி ஆகிய இடங்களில் தரித்து நிற்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

சீனாவின் 21 ஆவது நூற்றாண்டின் கரையோரப் பட்டுப் பாதைத் திட் டத்தின் முக்கிய அமைவிடங்களாக சிறிலங்கா மற்றும் டிஜிபோட்டி ஆகிய இரண்டும் காணப்படுகின்றன. தவிர, ஓகஸ்ட் முதலாம் திகதி சீன இராணுவம் தனது முதலாவது வெளிநாட்டு கடற்படைத் தளத்தை டிஜிபோட்டி யில் திறந்தது என்பதும் இங்கு சுட் டிக்காட்டத்தக்கது.

‘‘சீனாவின் Peace Ark மருத்துவக் கப்பல் இராணுவ வசதிகளைக்



கொண்டிருப்பதற்கான சாத்தியம் குறைவாகவே உள்ளது. ஏனெனில் இக்கப்பல் பொதுத் துறைமுகம் ஒன்றிலேயே தரித்து நிற்கவுள்ளதுடன் பொதுமக்கள் இலகுவாக சேவை களைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடனேயே சீனக் கடற்படை தனது மருத்துவ சேவையை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

டிஜிபோட்டி யில் சீனா தனது கடற்படைத் தளத்தை நிறுவி ஒரு மாதத்திற்குள் மருத்துவ சேவையை வழங்குவதற்காக Peace Ark கப்பல் அனுப்பப்படுவது உலக நாகளுக்கு சீனா தனது சாதகமான பங்களிப்புக் களை வழங்க முன்வந்துள்ளது என் பது தொடர்பான சந்தேகமற்ற ஒரு சமிக்ஞையாகக் காணப்படுகிறது என ஐரோப்பிய சபையில் வெளிநாட்டு உறவுகள் தொடர்பான ஆசிய மற்றும் சீன நிகழ்ச்சித் திட்டத்திற்கான உதவி இயக்குநராகப் பணியாற்றும் மத்தியூ டுகாஸ்ரல் தெரிவித்துள்ளார்.

‘‘மனிதாபிமானப் பணிகளில் சீன மக்கள் இராணுவம் மிகவும் கரிச னையுடன் செயற்படுகின்ற ஒரு நம்பகமான பங்குதாரர் என்கின்ற நிலையைக் காண்பிப்பதற்கான ஒரு நகர்வாகவே Peace Ark மருத்துவப் பணி டிஜிபோட்டியில் மேற்கொள் ளப்படுகிறது’’ என வல்லுநர் மேலும் தெரிவித்தார்.

‘‘டிஜிபோட்டியில் சீனாவின் மருத்துவ சேவை வழங்கும் கப்பல் தரித்து நிற்பது சீனாவின் பூகோள குறிக்கோள்களை நிறைவேற்றுவதற் காக டிஜிபோட்டியில் வாழும் உள்ளூர் மக்களின் ஆதரவைப் பெற்றுக்கொள் வதற்காக சீனா தனது மென்சக்தியை முதலீடு செய்ய முயற்சிப்பதற்கான ஒரு நினைவூட்டலாகவே காணப்படு கிறது’’ என வல்லுநரான மத்தி யூடுகாஸ்ரல் மேலும் சுட்டிக்காட்டி யுள்ளார்.

மத்தியூ டுகாஸ்ரல் தெரிவித்தது போன்று சீனாவின் உண்மையான நோக்கம் இதுவன்று. மென் சக்தி அல்லது மென் முதலீடுகள் எப்போதும் உள்ளூர் மக்களின் வர்த்தகச் சூழல் அல்லது உள்ளூரில் ஆளும் அரசியல் சக்திகள் மீது அழுத்தம் கொடுப்பதற் காகவே சீனாவால் பயன்படுத்தப்பட்டுள் எது’’ என ரஷ்யாவின் பொருளாதார உயர் கற்கைப் பல்கலைக்கழகத்தில் கீழைத்தேயக் கற்கைத் துறையின் தலைவராக உள்ள அலெக்சி மஸ் லொவ் தெரிவித்துள்ளார்.

டிஜிபோட்டியில் சீனக் கடற்படை பிரசன்னமாகியுள்ளமை சீனாவின் ‘வன்’ சக்தியை நினைவுபடுத்துவதற் கான ஒரு சமிக்ஞையாகும். பல பத் தாண்டுகளாக, சீனா தனது ‘மென் சக்தியைப்’ பிரயோகிப்பதில் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்து வரு கிறது. ஆனால், சீனா இராணுவ ரீதியாக தனது சாதனைகளை நிலை நாட்டுவதற் கான இயலுமையைக் கொண்டிருக்க வில்லை என அமெரிக்க வல்லுநர்கள் உட்பட பலர் மிகக் கடுமை யாக விமர் சித்துள்ளனர்’ என அலெக்சி மொஸ் லொவ் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், சீனா தன்னுடன் ஒத் துழைக்க விரும்பும் அனைத்து நாடு களையும் தனது இராணுவக் குடையின் கீழ் ஒன்றிணைக்க வேண்டியதன் அவசியம் உள்ளதால் இதனைத் தனது முக்கிய பங்காளி நாடுகளுக்குக் காண்பிக்க விரும்புவதாக அலெக்சி மொஸ்லோவ் மேலும் குறிப்பிட்டுள் ளார்.

‘‘சீனாவின் கடல் சார் இராஜதந்திரம் சீனா தனது புதிய கரையோரப் பட்டுப் பாதைத் திட்டத்தை வெற்றிகரமாக அமுல்படுத்தும் வரை தொடரும்’’ என மத்தியூ டுகாஸ்ரல் சுட்டிக்காட்டியுள் ளார்.

ஏற்கனவே உள்ள கடல் வழிப் பாதைகளின் ஊடாக விரைவானதும் பாதுகாப்பானதுமான கடல் போக்கு வரத்துக்களை மேற்கொள்வதை உறுதிப்படுத்துவதே சீனாவின் திட்ட மாகும். ஆனால், இக்கடல் வழிப்பாதை கள் நெரிசல் மிக்கதாக இருக்கும். எனினும் துறைமுகக் கட்டுமானம், கடல் வழிப்பாதைகளை அமைத்தல் போன்றன உட்பட சீனா தனது திட் டத்தை நிறைவேற்றுவதற்கான நேரடி முதலீடுகளை மேற்கொண்டு வருகிறது என மத்தியூ டுகாஸ்ரல் தனது பத்தியில் எழுதியுள்ளார்.

சீனா இந்திய மாக்கடலிலும் மத் திய கிழக்கிலும் தனது கடற்படைத் தளங்களின் வலைப்பின்னலை விரிவுபடுத்துவதற்குத் திட்டமிடுவ தாக அலெக்சி மஸ்லோவ் குறிப் பிட்டுள்ளார்.

சீனா தனது திட்டத்தை நிறைவேற் றும் முதலாவது முயற்சியாகவே டிஜிபோட்டியில் தனது முதலாவது கடற்படைத் தளத்தை நிறுவியுள்ளதா கவும் வல்லுநர் குறிப்பிட்டுள்ளார். சீனாவின் கரையோரப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் சீனா தனது சரக்குக் கப்பல்களைப் பாதுகாப்பாகச் செலுத்துவதற்கும் இந் நகர்வு மிகவும் அவசியமானதாகும்.

சீனா தனது கடற்படை மருத்துவப் பணிகளை ஆற்றுவதன் மூலம் ஏனைய நாடுகள் சீனாவின் உதவி தமக்குத் தேவை என்கின்ற எண் ணத்தை உருவாக்குவதற்கும் பல் வேறு பிராந்தியங்களிலும் சீனாவின் உதவி நாடப்படுவதற்கும் சீனா தனது கடல் சார் அல்லது இராணுவக் கடல் சக்தியைப் பலப்படுத்துவதற்கும் விரும்புகிறது என வல்லுனர் அலெக்சி மஸ்லோவ் தெரிவித்துள்ளார்.

எது எவ்வாறிருப்பினும் சீனாவின் இந்த நகர்வு அமெரிக்காவுக்கும் சீனாவிற்கும் இடையிலான மிகப் பெரிய கடல் சார் முரண்பாட்டுக்கு எதிராக இடம்பெறுகிறது என வல் லுநர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சீனா தனது கடற்படைக்கு ஆதரவளிக்க முடியும் என்பது மிகவும் முக்கியமானதாகும். கடற்படையின் நடவடிக்கைகள் மற்றும் சீனா தனது கரையோரப் பாதுகாப்புக்கள் போன்ற வற்றுக்கு ஆதரவு வழங்கும் அதே வேளையில் அமெரிக்காவுக்கும் சாத் தியமான அளவு ஆதரவளிப்பது முக்கியமானதாகும். இதுவே சீனாவின் நீண்ட தூர நல்லிணக்கப் பணியின் பிரதான நோக்காகவும் உள்ளது என மஸ்லோவ் குறிப்பிட்டார். ★

டிஜிபோட்டியில் சீனக் கடற்படை பிர சன்னமாகியுள்ளமை சீனாவின் ‘வன்’ சக்தியை நினைவுபடுத்துவதற் கான ஒரு சமிக் ஞையாகும். பல பத்தாண்டு களாக, சீனா தனது ‘மென் சக்தியைப்’ பிரயோகிப்பதில் பல்வேறு சவால் களுக்கு முகங் கொடுத்து வருகிறது.



தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா




**அமெரிக்காவில் பாசிச வன்முறையின் அரசியல் மற்றும் சமூக வேர்கள்.**

வேர்ஜினியாவின் சார்லட்வில்லில் மூன்று வாரங்களுக்கு முன்பு வெடித்த நாஜி வன்முறை, அமெரிக்காவிலும் உலகெங்கிலும் மில்லியன் கணக்கான மக்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. நாஜி-சார்பு வெள்ளையின பேரினவாதிகள், எதிர்-போராட்டக்காரர்களைத் தாக்கி, 32 வயதான ஹீத்தர் ஹெயரைக் காட்டுமிராண்டித்தனமாகப் படுகொலை செய்த புகைப்படங்கள், சமூகரீதியிலும் அரசியல் ரீதியிலும் அமெரிக்க சமூகத்தின் அழுகிய நிலையை அம்பலப்படுத்துகிறது.



நாஜி குண்டர்கள் ஒரு பல்கலைக் கழக நகரம் முழுவதும் அட்டூழியத்தில் ஈடுபட்டு, மாணவர்கள் மற்றும் ஏனைய குடியிருப்போரைப் பீதியூட்டினர். அதேவேளையில் பொலிஸ் ஏளனச் சிரிப்போடு ஒதுங்கி நின்று தாக்குதல்தாரிகளுக்கு ஊக்கமூட்டியது.

உலகிற்கு தார்மீக பொறுப்புகளை உபதேசிக்க விரும்புகின்றதும். சட்டம் மற்றும் ஜனநாயக ஸ்திரப்பாட்டின் கலங்கரை விளக்கமாக தன்னை காட்டிக் கொள்ளுகின்றதுமான ஒரு நாடு. அடிமட்டத்திலேயே சுக்குநூறாக உடைந்து கொண்டிருக்கிறது.



சார்லட்வில் சம்பவங்கள் மீது ஜனநாயகக் கட்சி மற்றும் குடியரசுக் கட்சிகளின் அரசியல்வாதிகள் மற்றும் பெரு நிறுவன ஊடகங்கள் அந்த வன்முறை மீது உத்தியோகபூர்வமாக கைகளைப் பிசைந்து கொண்டு வெளிவேஷ கண்டனங்களை வெளியிட்டு வருவதற்கும் மற்றும் மில்லியன் கணக்கான சமானிய மக்களின் ஆழ்ந்த கோபத்திற்கும் இடையே பரந்த இடைவெளி உள்ளது.

அவர்களது அறிக்கைகளில் கபடத்தனத்தின் துர்நாற்றம் வீசுகிறது. சார்லட்வில் வன்முறை எதிலிருந்து எழுந்ததோ, அடியிலிருக்கும் அந்த சமூக மற்றும் அரசியல் நிலைமைகளைக் குறித்து எந்தவித ஆழ்ந்த ஆய்வும் அவர்களது சம்பிரதாயமான கண்டனங்களில் கிடையாது.

**''அவருக்கு பேச விரும்பாத, அந்த வெறுப்பு''**

அதற்குச் சரியான உதாரணம் திங்கள் என்று(14.08.2017) (அவருக்கு பேச விரும்பாத, அந்த வெறுப்பு என்ற தலைப்பில்) நியூயோர்க் டைம்ஸில் வெளியான தலையங்கமாகும். இது ஜனநாயகக் கட்சிக்காக பேசுகிறது. இதன் ஆசிரியர்கள், அந்த வன்முறைக்கு பொறுப்பான வெள்ளையின பேரினவாத குழுக்களைக் கண்டிக்காததற்காக ட்ரம்பை விமர்சித்தனர். ட்ரம்ப், நவீன ஜனாதிபதி பதவிக்கால வரலாற்றில், அவருக்கு சேவையாற்றுகின்ற வெறித்தனம் மற்றும் சகிப்புத் தன்மையற்ற அரக்கர்களுக்கு கட்டளையிட விருப்பமில்லாத ஒருவராக உள்ளார் என்றவர்கள் அறிவித்தனர்.

ஜனாதிபதி, அவரின் தோல்வியடைந்து வரும் ஜனாதிபதி பதவி காலத்தை மீட்டமைக்கும் பெரும்பிரயத்தன முயற்சியில்'' வெள்ளையின மேலாதிக்கவாதிகளை அரவணைத்துள்ளார் என்பதையும் அந்த ஆசிரியர்கள் சேர்த்துக் கொண்டனர்.

ட்ரம்ப் பதவியில் இல்லாது இருந்திருந்தால், அமெரிக்க வீதிகள் சகோதரத்துவ நேசத்தின் பண் பாடியிருக்கும் என்று டைம்ஸ் மறைமுகமாக குறிப்பிடுகிறது. ஆனால் ''தீய ட்ரம்ப்'' குறித்த வரலாற்று பொருள்விளக்கம் எதையும் விளங்கப்படுத்தவில்லை. வெள்ளை மாளிகையில் வீராப்பு பேசுகின்ற இந்த குண்டர், சார்லட்வில் வன்முறை போலவே, ஓர் ஆழ்ந்த மற்றும் கையாளவியலாத நெருக்கடியின் ஓர் அறிகுறியாவார்.



**பாசிசம் இதுவரையில் அமெரிக்காவில் ஒரு பெரிய இயக்கமாக இருந்ததில்லை.**

பாசிசவாதமானது, ஓர் அரசியல் மற்றும் சமூக நிகழ்வுப்போக்காக, முதலாளித்துவ அதீத நெருக்கடியின் விளைபொருளாகும். 1932 இல் ஜேர்மனியில் நாஜி இயக்க வளர்ச்சியை பகுத்தாராய்ந்து, ட்ரொட்ஸ்கி விவரிக்கையில், முதலாளித்துவ சர்வாதிகாரத்தின் 'வழமையான' பொலிஸ் மற்றும் இராணுவ வழிமுறைகளால், அவற்றின் நாடாளுமன்ற மூடுதிரைகளுடன் சேர்ந்து, இனியும் சமநிலையில் சமூகத்தை தக்க வைக்க முடியாதென ஆகும்போது, அத்தருணத்தில்'' ஆளும் வர்க்கம் பாசிசத்திற்கு திரும்புகிறது... பாசிசவாத முகமையைக் கொண்டு, வெறிபிடித்த குட்டி முதலாளித்துவத்தினது மற்றும் வர்க்க நிலை பிறழ்ந்த மற்றும் நெறிபிறழ்ந்த உதிரிப் பாட்டாளி வர்க்கத்தின் பிரிவுகளது பெருந்திரளானவர்களை முதலாளித்துவம் இயக்கத்திற்கு கொண்டு வருகிறது. எண்ணற்ற இந்த மனித உயிர்கள் அனைத்தினையும் இதே நிதி மூலதனமே கூட விரக்திக்கும் மற்றும் ஏழ்மைக்கும் இட்டுசென்றுள்ளது. என்றார். (அடுத்தது என்ன? ஜேர்மன் பாட்டாளி வர்க்கத்திற்கான அத்தியாவசிய கேள்வி'')

பாசிசம் இதுவரையில் அமெரிக்காவில் ஒரு பெரிய இயக்கமாக இருந்ததில்லை. கூட்டரசின் தளபதி Robert E. Lee இன் சிலை நீக்கப்படுவதை எதிர்க்க, அதிவலது அமைப்புகளின் தேசியளவிலான அணிதிரட்டல், வெகுசில நூறு மக்களை மட்டுமே ஈர்த்திருந்தது.

எவ்வாறிருப்பினும் மக்களின் பரந்த பிரிவினரிடையே அவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஆதரவே இருந்த போதினும், இந்த பிற்போக்குத்தனமான கூறுபாடுகள் வெள்ளை மாளிகை உட்பட அரசின் சக்திவாய்ந்த பிரிவுகளின் ஆதரவை அனுபவித்து வருகின்றன.

இவர்களுக்கு பில்லியனர்களான ஆதரவாளர்களின் நிதி உதவிகள் கிடைக்கின்றன. (ட்ரம்பின் பாசிசவாத தலைமை மூலோபாயவாதி ஸ்டீபன் பானன், தனியார் முதலீட்டு நிறுவன செயலதிகாரி ரோபர்ட் மெர்சருடன் நெருக்கமான உறவுகளைக் கொண்டுள்ளார்). மேலும் பொலிஸ் மற்றும் இராணுவ எந்திரத்தின் குறிப்பிடத்தக்க பிரிவுகளது ஊக்கமான அனுதாபமும் இவர்களுக்கு உள்ளது.



ட்ரம்ப் அவரது பிரசாரம் முழுவதிலும் மற்றும் அவர் பதவியில் உள்ள இந்த முதல் ஏழு மாதங்களிலும், அவரும் அவரது பாசிசவாத ஆலோசகர்களும், அதீத இராணுவவாதம் மற்றும் சமூக பிற்போக்குத்தன கொள்கைக்கு எதிரான எந்தவொரு மக்கள் எதிர்ப்பையும் வன்முறையான ரீதியில் ஒடுக்குவதற்காக, நாடாளுமன்றத்திற்கு-வெளியே ஓர் இயக்கத்தை அபிவிருத்தி செய்யும் பொருட்டு, பரந்த சமூக கோபம் மற்றும் அரசியல் நோக்குநிலை பிறழ்ச்சியை தங்களுக்கு சாதகமாக்கிக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் ஒரு தீர்க்கமான அரசியல் மூலோபாயத்தைப் பின்பற்றியுள்ளனர்.



# சுதந்திர வேட்கை

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.



82




## அத்தியாயம் - VI

## பிரேமதாச – விடுதலைப் புலிகள் பேச்சு

போர்க் கால சூழலில் தான் எதிரும் புதிருமான விசித்திர நிகழ்வுகள் இடம் பெறுவது உண்டு. வரலாற்றிலே கூட உருட்டுப் புரட்டுகள் நிகழ்வது இயல்பு. எனவே, இலங்கைத் தீவில் இருந்து தப்பியோடிய நாம், இலங்கைக்கே இப்போது திரும்பியிருந்தோம் என்பதும் இந்தத் தடவை முற்றிலும் மாறான சூழ்நிலையில் திரும்பியிருந்தோம் என்பதும் எவருக்கும் ஆச்சரியம் தருவதாக இருக்கக்கூடாது. இப்போது எமது தளம் தமிழீழம் அல்ல. சிங்கள தெற்கு ஆகும். ஒழுங்கைகளிலும் நெல் வயல்களிலும்நாம்வேட்டையாடப்படவில்லை; மாறாக கொழும்பில், ஐந்து நட்சத்திர உல்லாசப் பயணிகள் விடுதியின் சௌகரியங்களை சுகித்துக் கொண்டிருந்தோம். நண்பனாக இருந்து பகைவனாக மாறிய ஒருவருடன் அல்ல. பகைவனாக இருந்து நண்பனாக மாறிய ஒருவருடன் அலுவலில் ஈடுபட்டிருந்தோம். மேலும் போர் நோக்கத்துடன் அல்லாது சமாதான நோக்கத்துடனேயே வந்திருந்தோம்.

கொழும்பிலே நடைபெற இருந்த அமைதிப் பேச்சில் பங்கெடுக்க இருந்த விடுதலைப் புலிப் பிரதிநிதிகளை வான் வழியாகக் கொழும்பிற்கு கொண்டு வருதற் பொருட்டு சிறிலங்கா விமானப் படை பெல் உலங்கு வானூர்தியில் 1989 மே 3 ஆம் திகதி வன்னிக்குப் பறந்து கொண்டிருந்தபோது, இத்தகைய சிந்தனைகளே என் மனதில் நிழலாடிக் கொண்டிருந்தன. இந்திய ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியிருந்த தமிழீழத்தின் வான் எல்லைக்குள் கொழும்பி லிருந்து பறந்து கொண்டிருந்தோம். இன்னோர் உலங்கு வானூர்தியில், தெரிவு செய்யப்பட்ட கொழும்பு ஊடகவியலாளர் அணி ஒன்று எம்மோடு கூட வந்து கொண்டிருந்தது.

இந்திய விமானப் படைக்குச் சொந்தமான இரண்டு இராட்சத M124 உலங்கு வானூர்திப் போர்க்கலங்கள் எமது கலத்தை இடைமறித்து, பின்னர் ஓரளவு தூரத்தில் எம்மைப் பின் தொடர்ந்து வந்துகொண்டிருந்தன. இந்த முயற்சிக்காக சிறிலங்கா விமானப் படை இந்தியாவின் அனுமதியைக் கேட்கவில்லை என்பது எமக்குத் தெரியும். எனவே, எமது பயணத்தின் போது வேண்டுமென்று அங்கு வந்து நேரடியாக அவமதிப்பதே இந்தியர்களின் எண்ணமாக இருந்தது. சிறிலங்கா விமானப் படையைப் பொறுத்த வரையிலே, தமது பிரதேசத்தின் மீது பறப்பது தமது இறைமைஉரிமைஎன்றுகருதியமையால் அதன் தளபதிகள், தமிழீழ வான் எல்லைக்குள் தாம் செல்வதற்கு இந்தியரின் அனுமதியைப் பெறத் தேவையில்லை என்று முடிவெடுத்தனர். எனவே, கடுமையான ஆயுதம் தரித்த இந்திய உலங்கு வானூர்திகளிடையே எதிர்பாராத திடீர் அச்சுறுத்தல் கிடைத்ததும், சிறிலங்கா அதிகாரிகள் திகைத்துப் போனார்கள். ஆனால், இந்த மிரட்டல் ஊடுருவலைப் பொருட்படுத்தாது சிங்கள விமானிகள் அமைதியாகத் தமது பயணத்தைத் தொடர்ந்தார்கள். வன்னி வரைபடத்தை நுணுக்கமாக உசாவிய வண்ணம் தங்கள் இலக்கை நோக்கி அவர்கள் பறந்து கொண்டிருந்தார்கள்.

எமது பார்வையில் எமது வான் பயணத்தோடு இந்தியர்கள் வந்து செருகப் பார்த்தமை ஒரு பகைமையான செயலாகவே பட்டது. புலிகளுக்கும் பிரேமதாசாவுக்கும் இடையிலான இந்தத் தொடக்க நிலை உறவை இந்தியர்கள் அதிருப்தியோடும் ஐயுறவோடும் நோக்குகின்றமையை உணர்த்துவது போலவும் இருந்தது. பிரேமதாசாவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே அரும்ப முற்படும் இந்தப் பேச்சைத் தான் வரவேற்கின்றமை போலப் பகிரங்கமாகக் காட்டிக் கொண்டாலும் இலங்கையின் குழப்பமான அரசியலில் தனக்குப் பெரும் பங்கு இருக்கும் என்பதையும் தான் ஒரு பிரதேச வல்லரசு என்ற நிலையை வலியுறுத்தும் என்பதையும் இரு தரப்பினருக்கும் தனிப்பட்ட முறையில் இந்தியா செய்தி அனுப்புவது போல இந்தச் செயல் அமைந்தது.

இந்திய உலங்குவானூர்திகள் தங்கள் உள்நோக்கத்தைத் தெளிவாக உணர்த்திய பின் நீல வான வெப்ப மங்கலுக்குள் சென்று மறைந்தன. எமது பயணம் தொடர்ந்தது. வெய்யிலில் உலர்ந்த நெல் வயல்களைக் கடந்தும், வேயப்பட்ட மண் குடிசைகள் கொண்ட சிற்றூர்களைக் கடந்தும் நெடுங்கேணிக் காட்டில் உள்ள எம் இலக்கை நோக்கித் தொடர்ந்து பறந்தோம். வானத்தில் இருந்து பார்க்கும்போது கீழே அடர்த்தியான பசுமைக்காடு, ஆங்காங்கே ஏரிகள், சதுப்புநிலங்கள், திறந்த வெளிகள் இப்படிப் பலதும் சேர்ந்த ஒரு படுக்கை விரிப்பாக தரை காட்சியளித்தது. இந்த அடர்த்தியான பச்சைக் குடை விரிப்பின் கீழ் தங்கள் பதுங்கு குழிகளில் இருந்த படி நூற்றுக்கணக்கான எமது கெரில்லாப் போராளிகள் எமது உலங்குவானூர்திகள் மேலே வட்டம் அடிப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். எம்மவர்களை ஏற்ற வேண்டிய பகுதிக்குள் வந்துவிட்டோம்.

கொழும்பிலிருந்து நாம் புறப்படு முன், சிறிலங்கா இராணுவ அமைப்புடன் செய்துகொண்ட ஏற்பாட்டின்படி காட்டுக்குள் ஒரு வெட்ட வெளியில் எமது போராளிகள் ஒரு பெரிய வெள்ளைச் சிலுவை அடையாளம் தரையில் வரைய வேண்டும் என்றும், உலங்கு வானூர்தி ஓட்டிகளுக்குப் பாதுகாப்பான இறங்கு தளத்தை அது சுட்டிக்காட்டும் என்றும் ஏற்பாடாகியது. உலங்கு வானூர்திகள் மீண்டும் சுற்றிச் சுற்றி வந்தன. ஆனால், வெள்ளைச் சிலுவை அடையாளம் மட்டும்தெரியவில்லை. ஒருபகுதியிலிருந்து அடுத்த பகுதிக்குச் சென்று இறங்கு தளத்துக்கான அடையாளத்தை கீழே உள்ள காட்டில் தேடிக் கொண்டிருக்கும் போது, எரிபொருள் செலவாகிக் கொண்டிருந்தது. தேடல் தொடரத் தொடர போராளிகளைச் சந்திக்கப்போகிறோம் என்ற எமது துடிப்பு, வரவர மங்கத் தொடங்கியது. பரந்திருக்கும் காட்டுப் பரப்பைத் தேடிக் கொண்டே இருந்ததால் எரிபொருள் தீர்ந்துவிடப் போகிறதே என்ற ஆதங்கம். விமானிகள் தங்கள் இலக்கைத் தவற விட்டுவிட்டார்களா? எமது போராளிகள் தவறு இழைத்து விட்டார்களா? எதுவாக இருந்தாலும் பரவாயில்லை. எரிபொருள் இருக்கும் போது தரையிறங்கும் தளத்தைக் கண்டு பிடித்து விடவேண்டும் என்று தவித்தோம். முயற்சியை இனிக் கைவிட வேண்டும் என்று விமானி யோசிக்கும் போது எட்டத்தில் ஒரு சிவப்பு புள்ளியைக்கண்டோம். பெல் உலங்குவானூர்தி அதை நோக்கிச் செல்லும்போது, எமது கவனத்தை ஈர்க்க அதீத பிரயத்தனத்தோடு செங்கொடி ஒன்றை ஆட்டிக் கொண்டிருக்கும் ஓர் இளைஞராக அந்தச் செம்புள்ளி விரிந்தது. விரைவில் பச்சை மரங்களூடாக வெள்ளைச் சலுவைக் குறியும் தெரிந்தது. குறுகிய எல்லைக்குள் செயற்படும் வாக்கி - ரோக்கியை பாலா எடுத்து எண்களை அழுத்தினார். "ஹலோ, பாலா அண்ணா, நீங்கள் பேசுவது கேட்கிறது'' என்று குரல் அதில் கேட்டதும் பாலாவின் முகம் மலர்ந்தது.

உலங்கு வானூர்திகள் இரண்டும் மெதுவாகக் கீழே இறங்கத் தொடங்க, திறந்த இறங்கு தளத்தைச் சூழவுள்ள மரங்கள் பற்றைகளுக்குப் பின்னே நிற்கும் எமது போராளிகளின் முகங்கள் தெளிவாகத் தெரியத்தொடங்கின அந்தப் பகுதியை மேலோட்டமாகச் சுற்றிப் பார்த்ததும், இன்னமும் நாம் இந்தியாவுடனும் சிறிலங்காவுடனும் போராடிக் கொண்டிருப்பது நினைவுக்கு வந்தது. திடீர் இராணுவ நடவடிக்கையில் இந்தியப் படைகள் ஈடுபடலாம் என்ற எதிர்பார்ப்பில், அந்தப் பகுதியைப் பாதுகாப்பதற்காக நூற்றுக்கணக்கான பலத்த ஆயுதம் தரித்த போராளிகள் நிலைப்படுத்தப்பட்டிருந்தார்கள். உலங்குவானூர்திகளில் வந்திறங்குபவர்கள் தாம் எதிர்பார்த்த உண்மையான பயணிகளே என்று கவனமாக உறுதி செய்து கொண்ட எம் போராளிகள், காட்டு மறைவிலிருந்து தட்டுகளில் கேக் பிஸ்கெற் ஆகியவை ஏந்திக் கொண்டு வரவேற்க ஓடிவந்தார்கள். தூரக் காட்டின் நடுவிலும் தமிழ் மக்களின் காலாகால விருந்தோம்பல் பண்போடு ஊடகவியலாளருக்கும் விமானிகளுக்கும் சிற்றுண்டிகளும் குளிர்பானமும் இளநீரும் பரிமாறினார்கள். அதே சமயம், புதிதாக வந்தவர்களைப் பற்றி அறிய ஆர்வம் உடையவர்களாகவும் இருந்தார்கள். என்ன இருந்தாலும் பதினெட்டு மாதங்களாக காட்டு மறைவிடங்களில் இருந்த பின் முதற் தடவையாக நட்புறவோடு வருபவர்களை இவர்கள் சந்திக்கின்றார்கள். சிறிலங்கா உலங்குவானூர்திகளையும் விமானிகளையும் பார்ப்பதிலும் அவர்கள் ஆர்வமாக இருந்தார்கள். தமிழ்ப் பிரதேசத்துக்கு மேலாக நட்புறவான நோக்கத்தோடு இந்த வான்கலம் வருவதும் அவர்களுக்கு விசித்திரமாகவே பட்டது. இந்த பெல் உலங்குவானூர்திகள் பயங்கரத்தையும் மரணத்தையும் தமிழ் மக்களிடையே தோற்றுவிப்பன. எனவே, அதன் மட்டில் போராளிகள் கவனமாகவே இருக்க வேண்டும். இந்த உலங்குவானூர்தியில் பொருத்தப்பட்டிருந்த ஐம்பது கலிபர் இயந்திரத் துப்பாக்கிகளும் றொக்கெற் ஏவிகளும் பெருந்தொகையில் தமிழ் மக்களை வானிலிருந்து கொன்றும் ஊனமடையச் செய்தும் இருக்கின்றன. நூற்றுக்கணக்கான கட்டடங்களை வெறும் கற்குவியலாக்கியிருக்கின்றன. இன்னொரு விசித்திரம் என்ன என்றால் சிங்கள விமானிகளும் விடுதலைப் புலிப் போராளிகளும் தம்மிடையே நடந்ததை மறந்து ஒருவரை ஒருவர் குசலம் விசாரித்தமையாகும். இதற்கு நேர்மாறாக அண்மையிலே கூட ஒருவரை ஒருவர் கொல்லும் பொருட்டு துப்பாக்கி வேட்டுப் பரிமாற்றம் நடத்திய சம்பவங்களே இடம் பெற்றன.

(தொடரும்...)






யாழ். சின்னப்பள்ளி முஸ்லிம் மையவாடியின் சிரமதானம் அண்மையில் திலகம் கே.எம்.நிலாம்தலைமையில்நடைபெற்றபோது யாழ். முஸ்லிம் மக்கள் பலரும் கலந்து கொண்டனர். (இ-19)





சர்வதேச லயன்ஸ் கழகத்தின் 306 பி1 மாவட்டம் கடந்த மாத லயன்ஸ் ஆளுநராக தெரிவு செய்யப்பட்ட லயன் கமிலஸ் பெர்னாண் டோவை யாழ். மாவட்ட லயன்ஸ் கழகத்தினர் வரவேற்று கௌரவித்தனர். இந்த நிகழ்வு கடந்த ஞாயிறு மாலை யாழ். கே.கே.எஸ். வீதியிலுள்ள திவ்விய மஹால் மண்டபத்தில் நடைபெற்றது. (இ-19)




யாழ். கியூடெக் கரிதாஸ் சகவாழ்வு மன்றத்தினால் நடாத்தப்பட்ட யாழ். மன்பஉல் உலூம் மதுரஸாவில் அண் மையில் நடைபெற்ற சிறுவர் சித்திரைப் போட்டியில் பங்குபற்றிய மாணவர்களும் அவர்களின் சித்திரங்களையும் படங்களில் காணலாம். (இ-19)





மன்னார் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் தேசியக்கலைஞர் எஸ்.ஏ.உதயன் தலை மையில் மன்னார் நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் சைவக்கலை இலக்கிய மன்றத் தலைவர் செந்நாற் செல்வர் ஸ்ரீ தர்மகுமார சர்மா குருக்களும் சிறப்பு மற்றும் கௌரவ விருந் தினர்களாக 'மன்னா' பத்திரிகை ஆசிரியர் அருட்பணி தமிழ்நேசன் அடிகளார், மன்னார் கடற்தொழில் உதவிப் பணிப்பாளர் பெ.சகாய நாதன் மிராண்டா மன்னார் சிரேஷ்ட சட் டத்தரணிகளான எம்.எம்.சபு ருதீன், எஸ்.ஜெபநேசன் லோகு ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அத்துடன் இவ் நிகழ்வில் மன்னார் சைவக்கலை இலக்கிய மன்றத் தலைவர் ஸ்ரீ தர்மகுமார சர் மாவுக்கு செந்நாற் செல்வர்" என்ற கௌரவ பட்டம் வழங்கி மன்னார் தமிழ்ச்சங்கம் கௌரவித்தது.

இவ் நிகழ்வின் அனைத்து நிகழ்வு களையும் புலம்பெயர்ந்து வாழும் கலைஞர் ஆர்.பாலா தொகுத்து வழங்கியதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-112)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினைக்குத் தீர்வு; அரசின் முயற்சிகள் அனைத்துமே தோல்வியில்!

## சுவிஸில் இயங்கி வரும் மனித உரிமை அமைப்பில் இலங்கைக்கான பிரசார முகாமையாளர் யுவேஸ் அறிக்கை

கொழும்பு, செப். 01

உலகிலேயே இலங்கையானது அதிகூடிய வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரை கொண்டிருக்கும் நாடாகும்.

2016 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம், இலங்கை நாடாளுமன்றத்தில்காணாமல்போனோர் அலுவலகம் அமைப்பதற்கு ஒரு பிரேரணையை இலங்கை அரசு நிறைவேற்றியது.

எனினும், இந்த நாள் வரைக்கும் அது நிறுவப்படவில்லை. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின்வழக்குகளைவிசாரிக்க பணிக்கப்பட்ட எல்லா வகையிலுமான ஆணைக்குழுக்கள் இதுவரைக்கும் எந்தவொரு வழக்குகளையும் விசாரணை செய்து தீர்க்கவில்லை. அனைத்து விடயங்களிலும் தோல்வியே காணப்பட்டுள்ளது என சுவிற்சர்லாந்தில் இயங்கி வரும் மனித உரிமை அமைப்பின் இலங்கைக்கான பிரசார முகாமையாளர் யுவேஸ் போவி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

ஆரம்ப காலத்தில் இருந்தே, இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் உள்ள தெருக்களில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்காக இலங்கையில் தமிழ்பெண்களால் முன்னெடுக்கப்படுகின்ற எதிர்ப்புப் போராட்டம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது மற்றும் எங்கே இந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் இருக்கின்றனர், அவர்களின் தலைவிதி என்ன என்பன வற்றை முன்வைத்து எடுக்கப்படுவது ஒன்றாகும்.

ஓகஸ்ட் 30 ஆம் திகதியை, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சர்வதேச தினம், என பிரகடனம் செய்து, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான உண்மைகள், அவர்களுக்கான நீதி மற்றும் அவர்களுக்கு இழைக்கப்பட்ட இழப்புக்கான நல்லதொரு பதிலைபெறுதல் ஆகியவற்றை இந்த எதிர்ப்புப்போராட்டத்தின் கோரிக்கையாகக் கொண்டு கிட்டத்தட்ட 200 நாள்களுக்குத் தொடர தீர்மானித்துள்ளோம்.

இந்த பொன்னான நாளில், அச்சுறுத்தப்பட்டுள்ள மக்களுக்கான சங்கம் இலங்கைத் தமிழ் பெண்களின் எதிர்ப்பு போராட்டத்தை ஆதரித்தும் மற்றும் தமிழ்ப் பெண்களோடு ஒன்றிணைந்து பெர்லிலுள்ள காசினோ பிளாட்ஸ் நகரில் ஒரு மாபெரும் எதிர்ப்புப் போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது.

பல மாதங்களாக, இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் உள்ள ஐந்து கிராமங்களில் நூற்றுக்கணக்கான தமிழ் பெண்கள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்காக எதிர்ப்பு போராட்டங்களில் ஈடுபட்டு தங்களது உறவுகளுக்காகக் குரல் கொடுக்கின்றனர்.

இவர்களின்இந்தக்குரல்ஒலியானது சுடும் சூரியன் எதிர்த்து நின்றாலும், பாதை ஓரத்தின் அழுக்கு மற்றும் தூசு சிரமமாய் மாறினாலும் இரவின் இருட்டு இடராய் இருந்தாலும் இலங்கையின் பாதை ஓரங்களில் உறவுகளுக்காய் முழக்கமிடுகின்றனர்.

அவர்கள்வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் எங்கு மறைத்து வைக்கப்பட்டுள்ளனர்என்பது பற்றிய பதில்களைப் பெறுவதைத் தங்களின் கோரிக்கையாக முன்வைத்துள்ளனர்.

உலகிலேயே இலங்கையானது அதிகூடிய வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரை கொண்டிருக்கும் நாடாகும்.

யுத்தம் முடிவடைந்ததில் இருந்து அப்பாவி மக்களின் மரணத்துக்கும் மற்றும் இழப்பிற்கும் எந்தவொரு முடிவும் இன்னும் கிடைக்க வில்லை.

இலங்கை அரசு இன்று வரை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினை தொடர்பில் தீர்வுகாண எடுத்த எந்தவொரு முயற்சியிலும் தோல்வியையே கண்டுள்ளது. பொறுப்பான அமைப்புக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2016 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம், இலங்கை நாடாளுமன்றத்தில்காணாமல்போனோர் அலுவலகம் அமைப்பதற்கு ஒரு பிரேரணையை இலங்கை அரசு நிறைவேற்றியது. எனினும், இந்த நாள்வரைக்கும் அது நிறுவப்படவில்லை.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் வழக்குகளை விசாரிக்க பணிக்கப்பட்ட எல்லா வகையிலுமான ஆணைக்குழுக்கள் இது வரைக்கும் எந்தவொரு வழக்குகளையும் விசாரணை செய்து தீர்க்கவில்லை.

நாட்டின் செயலற்ற தன்மை காரணமாக நூற்றுக்கணக்கான தமிழ்ப் பெண்கள் தெருக்களில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். 2017 ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 26ஆம் திகதி, ஜனாதிபதி சிறிசேன, வலிந்து காணாமல் ஆக்கபட்டோர் தொடர்பாக நீதி கோரி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களைச் சந்தித்தார்.

அதன்போது இந்த எதிர்ப்பு போராடத்தில் ஈடுபடுவோர் சிலர், அவர்களின் கோரிக்கைகள் அடங்கிய விண்ணப்பத்தை இலங்கை அதிபரின் கைகளில் ஒப்படைத்தார்கள்.

இந்த சந்திப்பின் முடிவில், கால அளவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான மூன்று பட்டியல்களை பத்திரிகைகளில் வெளியீடு செய்வதற்கு இணக்கம் தெரிவித்தார். இவற்றுள் முதலாவது பட்டியல் இறுதி யுத்தத்தின் முடிவில் யாரெல்லாம் சரணடைந்தார்களோ மாற்றும் யாரெல்லாம் தடுப்புக் காவலில் அடைத்து வைக்கப்பட்டு உள்ளார்கள் என்பதை பற்றிய பெயர் பட்டியலாகும், இரண்டாவது பெயர் பட்டியல் யாரெல்லாம் இரகசிய தடுப்பு காவல் நிலையங்களில் தடுத்து வைக்கபட்டிருப்பவர்கள் பற்றியது, மற்றும் மூன்றாவது பெயர் பட்டியல் யாரெல்லாம் பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டு இருக்கின்றனரோ அவர்களைப் பற்றியது.

ஆனால், இன்றுவரையும் இலங்கை அதிபர் தன்னை சந்தித்து கோரிக்கைகளை சமர்ப்பித்த, இந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக நீதிகோரி எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு, தான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில் தோல்வியையே கண்டுள்ளார்.

அரசானது இப்போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்காக எதிர்ப்பு போராட்டங்களில் ஈடுபடுவோரின் கோரிக்கைகளைச் செயற்படுத்த வேண்டும், இதன் ஊடாக இலங்கையில் இன, மத மற்றும் மொழி என்பவற்றால் வேறுபட்டிருக்கும் மக்களுக்கிடையே நல்லிணக்கத்தைக் கொண்டுவரமுடியும் எனத் தெரிவித்துள்ளார்.

# மகாகும்பாபிஷேகம்

வேலணை, செப்.01

வேலணை வங்களாவடி விழாப்புலம் ஸ்ரீ காளிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலய புனராவர்த்தன பஞ்ச குண்ட பக்ஷ மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு கிரியைகள் நாளை சனிக்கிழமை காலை 5 மணிக்கு ஆரம்பமாகும். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணி முதல் மாலை 5 மணி வரை எண்ணெய்க் கபாப்பு சாத்துதல் இடம்பெறவுள்ளது. (இ)

# போர்க்குற்றச் செயல்களில் ஈடுபடவில்லை என்கிறார் முன்னாள் இராணுவத் தளபதி!

## அவர் எங்கிருக்கிறார் என்பதில் மர்மம்

கொழும்பு, செப். 01

தாம் போர்க் குற்றச் செயல்களில் ஈடுபடவில்லை என முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இறுதிக் கட்டப் போரின் போது தாம் போர்க் குற்றச்செயல்களில் ஈடுபடுமாறு உத்தரவிட்டதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார் என்று கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பிரேசிலுக்கான தூதுவராக கடமையாற்றிய ஜகத் ஜயசூரிய போர்க் குற்றச் செயல்களில் ஈடுபட்டார் எனத் தெரிவித்து, மனித உரிமை அமைப்புக்கள் தென் அமெரிக்க நாடுகளில் வழக்குத் தாக்கல் செய்துள்ளன.

வைத்தியசாலைகளில் மீது தாக்குதல் நடத்தியமை, சித்திரவதை கூடங்களை நடத்தியமை, கடத்தல்கள் காணாமற் போதல்கள் போன்றவற்றுக்கு ஜகத் ஜயசூரிய உத்தரவிட்டார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனினும், தாம் போர்க் குற்றச் செயல்களில் ஈடுபடவில்லை என ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

ஜகத்ஜயசூரிய தலைமறைவாகியுள்ளார் என்றும் அவரைக் காணவில்லை எனவும் ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் எங்கிருந்து எவ்வாறு தொடர்பு கொண்டு கொழும்பு ஊடகத்திற்குத் தகவல் வழங்கினார் என்பது பற்றிய விவரங்களை அந்த ஊடகம் வெளியிடவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# ஆலய உற்சவங்கள்

இருபாலை, செப்.01

இருபாலை கிழக்கு கேணிக்குளம்பதி லிங்க விநாயகர் ஆலய தேர்த்திருவிழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

★★★

கோப்பாய், செப்.01

கோப்பாய் வடக்கு கொழுவியம்பதி ஸ்ரீ சக்கராழ்வார் மகோற்சவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் அன்றைய தினம் மாலை 7 மணிக்கு உறியடி உற்சவமும் மறுநாள் புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (இ)

# ‘ஓ.ரி’ செய்யும் ஊழியர்களுக்கான கொடுப்பனவு 50 வீதத்தால் குறைப்பு!

## தொழில் அமைச்சு அதிரடி அறிவிப்பு

மேலதிக நேரத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் 50 சத வீதத்தால் குறைக்கப் படவுள்ளன.

ஊழியர்களுக்கு வழங்கப்படும் மேலதிக கொடுப்பனவுகள் மற்றும் இதர கொடுப்பனவுகள் 50 சத வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளன என்று தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

உள்ளக சுற்றறிக்கை மூலம் இந்த தகவல் நேற்று அமைச்சின் ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதில்தொழில்அமைச்சின் ஊழியர்களுக்கு மேலதிக கொடுப்பனவுகள் மற்றும் இதர கொடுப்பனவுகளைவழங்கபோது மானபணம்இல்லை. மேலதிக நேரத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கான கொடுப்பனவுகளைகுறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சின் இந்த நடவடிக்கை குறித்து ஊழியர்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

தேவையற்ற போக்குவரத்தும் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா என்பனவற்றுக்கு அதிகளவான பணம் செலவிடப்படுகிறது.

தேவையற்ற வகையில் வாரத்திற்கு சுமார் 10 கோடி ரூபா செலவிடப்படுகின்றன என்றும் எனினும் ஊழியர்களின் கொடுப்பனவுகள் முறையற்றவகையில் குறைக்கப் படுகின்றன எனவும் ஊழியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தொழில் அமைச்சில் இவ்வாறான சம்பவம் நடைபெறுவது இதுவே முதல்முறையாகும். போர் நடைபெற்ற காலத்தில் கூட இவ்வாறான கொடுப்பனவு குறைப்பு எதுவும் நடக்கவில்லைஎன அமைச்சின் ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். (க)

காலைக்கதிர் Kalaikkathir


## தமிழக அரசு பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் என வலியுறுத்தி

# ஜனாதிபதியிடம் மனு!

புதுடில்லி.செப்.1

தமிழக முதலமைச்சருக்கு எதிராக 19 எம்.எல்.ஏக்கள் ஆளுநரிடம் கடிதம் கொடுத்துள்ள நிலையில், எதிர்க்கட்சி தலைவர்கள் ஜனாதிபதியைச் சந்தித்து, சட்டசபையைக் கூட்டி பெரும்பான்மையை நிரூபிக்க உத்தரவிடும்படி கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமிக்கு அளித்த ஆதரவை விலக்கிக் கொள்வதாக தினகரன் ஆதரவு எம்.எல்.ஏக்கள் 19 பேர் ஆளுநரிடம் கடிதம் கொடுத்தனர்.அரசுபெரும்பான்மையை



நிரூபிக்க வேண்டும் என வலியுறுத்திய தி.மு.க. செயல் தலைவர் ஸ்டாலின் ஆளுநருக்குக் கடிதம் அனுப்பினார். ஆனால், ஆளுநர் நடவடிக்கை எடுக்க வில்லை.

இதையடுத்து, தி.மு.க., காங்கிரஸ், மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் தலைவர்கள் நேற்று டில்லியில் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்தை சந்தித்தனர்.

தி.மு.க சார்பில் எம்.பிக்கள் கனிமொழி, டி.கே.எஸ்.இளங்கோவன், திருச்சி சிவா, ஆர்.எஸ்.பாரதி, காங்கிரஸைச் சேர்ந்த ஆனந்த்சர்மா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் செயலாளர் சீதாராம் யெச்சூரி, இந்திய கம்யூனிஸ்ட் செயலாளர் டி.ராஜா ஆகியோர் ஜனாதிபதியிடம் மனு அளித்தனர்.

அந்த மனுவில், முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அரசு பெரும்பான்மையை நிரூபிக்க சட்டசபையை உடனே கூட்ட ஆளுநருக்கு உத்தரவிட வேண்டும் என்று கூறப்பட்டு இருந்தது.

சட்டசபையில் நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்துவது தொடர்பான வழக்குகள் மற்றும் தீர்ப்புகளையும் அவர்கள் தங்கள் மனுவில் மேற்கோள் காட்டி இருந்தனர். ஆளுநர் வித்யாசாகர் ராவ் மீதும் சரமாரியாக முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## மத்திய பிரதேசத்தில் இரு மாதங்களில் பன்றிக் காய்ச்சலால் 23 பேர் சாவு!

போபால்.செப்.01

மத்தியப்பிரதேச மாநிலத்தில் கடந்த இரண்டு மாதங்களில் பன்றிக்காய்ச்சல் பாதிப்பால் பலியானவர்களின் எண்ணிக்கை 23ஆக அதிகரித்துள்ளது.

மத்தியப்பிரதேச மாநிலத்தில் மொத்தம் உள்ள 51 மாவட்டங்களில் 14 மாவட்டங்களை ஏ1N1 எனப்படும் பன்றிக்காய்ச்சல் நோய்த்தொற்று தாக்கியுள்ளது. 2 பேர் இந்த நோய்த்தொற்றால் பலியாகி உள்ள நிலையில் கடந்த இரண்டு மாதங்களில் இந்த நோயினால் பலியானவர்கள் எண்ணிக்கை 23 ஆக உயர்ந்துள்ளது.

இதற்கிடையே, பன்றிக் காய்ச்சல் நோய்க்காக சிகிச்சை பெற்று வந்த ஒரு குழந்தையும், மேலும் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்ததையடுத்து இந்நோயின் தாக்கத்தில் பலியானோர் எண்ணிக்கை 23 ஆக உயர்ந்துள்ளது.

மேலும் 582 பேரிடம் நடத்தப்பட்ட பன்றிக்காய்ச்சல் சோதனையில் 113 பேருக்கு நோய்த்தொற்று இருக்கின்றமை உறுதி செய்யப்பட்டுள்ளது. (ப)

## தொழுநோயாளி வேடமிட்டு விவசாயிகள் போராட்டம்!



புதுடில்லி.செப்.1

டில்லியில் தமிழக விவசாயிகளின் போராட்டம் நேற்று முன்தினம் 46 ஆவது நாளாக நீடித்தது. இதையொட்டி விவசாயிகள் தொழு நோயாளிகள் போல வேடமிட்டு ஜந்தர் மந்தர்சாலை ஊர்வலமாகச் சென்றனர்.

டில்லியில் தமிழக விவசாயிகளின் போராட்டம் நேற்று முன் தினம் நடைபெற்றது. அப்போது கோரிக்கைகளை நிறைவேற்ற பிரதமரை வலியுறுத்தி கோஷங்களும் எழுப்பப்பட்டன.

இதுபற்றி போராட்டக்குழு தலைவர் அய்யாக்கண்ணு கூறுகையில், கோரிக்கைகள் ஏற்கப்படாததால் நாங்கள் ஜந்தர் மந்தரில் தொடர்ந்தும் போராட்டம் நடத்தி வருகிறோம்.

ஒரே இடத்தில் இருப்பதால் சுகாதாரச்சீர்கேடு உருவாகி தொழுநோய் பாதிப்பு ஏற்பட்டு விடும் என்பதை உணர்த்தும் வகையில் இந்த நூதன போராட்டம் நடத்தப்பட்டது என்றார். (ப)

### மும்பையில் கனமழையால்

## 3 மாடிக் குடியிருப்பு தகர்ந்து 10 பேர் பலி!



மும்பை.செப்.01

மும்பையில் சில தினங்களாக பெய்து வரும் கனமழையால் மூன்று மாடி குடியிருப்பு இடிந்து விபத்துக்குள்ளானதில் 10 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்; மேலும் 12 பேர் காயமடைந்திருக்கின்றனர் எனத் தகவல்கள் தெரி விக்கின்றன.

மராட்டிய மாநிலத்தில் மும்பை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் கடந்த சில தினங்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இந்நிலையில் மும்பை நகரின் பெண்டி பசார் பகுதியில் உள்ள மூன்று மாடிக் குடியிருப்பு கட்டடம் நேற்று அதிகாலை இடிந்து விழுந்தது. இதுகுறித்து மாநகராட்சி பேரிடர் மேலாண்மை குழுவினருக்கு தகவல் அளிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த பேரிடர் மேலாண்மை குழுவினர் மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

கட்டட இடிபாடுகளில் 30 இற்கும் மேற்பட்டோர் சிக்கி இருக்கின்றனர் எனக் கூறப்பட்ட நிலையில், 10 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. 12 பேர் காயங் களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், இடிபாடுகளில் சிக்கியுள்ளவர்களை மீட்கும் பணியில் தேசிய பேரிடர் மேலாண்மை குழு மற்றும் தீயணைப்புப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

## சத்திரசிகிச்சைக் கூடத்தில் மோதல்: மூச்சுத் திணறி குழந்தை உயிரிழப்பு!

ஜோத்பூர்.செப்.1

ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் நேற்று முன்தினம் பிரசவத்துக்காக கர்ப்பிணி பெண் ஒருவர் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அவருக்கு அறுசுவை சிகிச்சை மூலம் பிரசவத்துக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

குறிப்பிட்ட நேரத்துக்குள் அந்த பெண்ணுக்கு அறுவைச் சிகிச்சை நடந்தது. அப்போது அறுவை சிகிச்சையைத் தொடர்வது குறித்து திடீரென இரு மருத்துவர்களுக்கு இடையே வாய்த் தகராறு ஏற்பட்டது.

இதன் காரணமாக பிறந்த அடுத்த ஓரிரு நிமிடங்களில் மூச்சுத் திணறி குழந்தை உயிரிழந்தது. ஆனால் இதை மறைத்த மற்ற மருத்துவர்கள் குழந்தை இறந்து பிறந்ததாக தெரிவித்தனர்.இந்த நிலையில் சத்திர சிகிச்சைக் கூடத்தில் இரு மருத்துவர்



களும் சண்டை போட்டதையும், அதனால் மூச்சுத் திணறி குழந்தை இறந்ததையும் ஊழியர் ஒருவர் படம் பிடித்திருந்தார். அந்தக் காட்சி சமூக ஊடகங்களில் வைரலாக பரவியது.

இதையடுத்து ராஜஸ்தான் மாநில அரசு விசாரணை நடத்தியது. சத்திர சிகிச்சைக் கூடத்தில் சண்டையிட்ட இரண்டு மருத்துவர்களும் இடைநிறுத்தப்பட்டனர்.குழந்தை பலியானதற்கு மருத்துவர்கள்தான் காரணம் என்று தெரிய வந்ததால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir
வெள்ளிக்கிழமை 01.09.2017



# வடகொரியாவை எச்சரிக்க நடுவானில் ஏவுகணையை அழித்தது அமெரிக்கா!

வொஷிங்டன்.செப்.1

வடகொரியாவை எச்சரிக்கும்வகையில்அமெரிக்கா எதிரி நாட்டு ஏவுகணைகளை இடைமறித்து அழிக்கும் சோதனையை நேற்று முன் தினம் நடத்தியது.

தனது எதிரி நாடான தென் கொரியாவுக்கு அமெரிக்கா துணையாக இருப்பதால் வட கொரியா அமெரிக்காவுக்கு எதிராகச் செயற்பட்டு வருகிறது. அமெரிக்காவை மிரட்டும் வகையில் ஏவுகணை மற்றும் அணுகுண்டு சோதனைகளைத் தொடர்ந்து நடத்தி வருகிறது.

எனவே, வடகொரியாவுக்கு நெருக்கடி கொடுக்கும் வகையில் அமெரிக்கா பல்வேறு பொருளாதாரத் தடைகளை விதித்தது.

இதனால் கோபம் அடைந்த வடகொரியா, ஜப்பான் அருகே உள்ள அமெரிக்காவுக்குச் சொந்தமான குவாம் தீவைத் தாக்கப் போவதாக அறிவித்தது. இதனால் பெரும் பதற்றநிலை ஏற்பட்டது. பின்னர் இந்த திட்டத்தில் இருந்து வடகொரியா பின்வாங்கியது.





இந்தநிலையில், நேற்று முன்தினம் வடகொரியா பசுபிக் கடலை நோக்கி புதிய ஏவுகணை ஒன்றை வீசியது. ஜப்பான் நிலப்பரப்பு வழியாக இந்த ஏவுகணை சென்றது.

குவாம் தீவை தாக்கும் முன்னோட்டத்துக்காக இந்தச் சோதனை நடத்தப்பட்டதாக வடகொரியா அறிவித்துள்ளது. மேலும் இதுபோன்ற பல சோதனைகளை நடத்த போவதாகவும் வட கொரியா அறிவித்துள்ளது.

இதனால் வடகொரியாவை எச்சரிக்கும் வகையில் அமெரிக்கா எதிரி நாட்டு ஏவுகணைகளை இடைமறித்து அழிக்கும் சோதனையை நேற்று நடத்தியது.

ஹவாய் தீவில் இருந்து இந்த சோதனை நடத்தப்பட்டது. ஹவாய் தீவு அருகே நிறுத்தப்பட்டு இருந்த யூ.எஸ்.எஸ். ஜோன்போல் ஜோஸ் கப் பலில் இருந்து ஏவுகணையை அனுப்பினார்கள்.

அதே நேரத்தில் மற்றோர் ஏவுகணை தரை பகுதியில் இருந்து அனுப்பப்பட்டது.

தரை பகுதியில் இருந்து வந்த ஏவுகணையை கப்பலில் இருந்து சென்ற எஸ்.எம்.-6 ஏவுகணை நடுவானில் தாக்கி அழித்தது. வட கொரியா ஏவுகணைகளை அனுப்பினால் அதை நடுவானில் இடைமறித்து தாக்கி அழிக்கும் வகையில் இந்தச் சோதனை நடத்தப்பட்டது.


(ப)

## உலகத்தை ஆட்டிப் படைத்த 'ப்ளூ வேல் கேம்'; உத்தரவுகளை பிறப்பித்து வந்த சிறுமி கைது!

'ப்ளூ வேல்' விளையாட்டின் பின்னணியில் இருந்து தற்கொலை தொடர்பான உத்தரவுகளைப் பிறப்பித்து வந்த 17 வயது ரஷ்ய சிறுமியை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

குறித்த ரஷ்ய சிறுமி தான், உத்தரவுகளுக்கு கீழ்படியாவிட்டால் உறவினர்களையோ, அல்லது நெருக்கமானவர்களையோ கொன்றுவிடுவதாக ப்ளூ வேல் விளையாட்டை விளையாடி வந்தவர்களுக்கு மிரட்டல் விடுத்து வந்தார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மொஸ்கோ நகருக்கு அருகே 21 வயது இளைஞர் ஒருவரையும் இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் கைது செய்துள்ளனர்.



கைது செய்யப்பட்ட சிறுமியும் ஆரம்பத்தில் ப்ளூவேல் விளையாடியவர் என்றும், ஆனால் கடைசி கட்ட சவாலை தேர்ந்தெடுக்காமல், மற்றவர்களை தற்கொலைக்குத்தூண்டும் அட்மினாக செயற்படும் பணியை தேர்ந்தெடுத்தவர் என்றும் விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

குறித்த ப்ளூவேல் தற்கொலை விளையாட்டு இணையவழி ஊடாக ரஷ்யாவில் உள்ள ஒரு குழு மூலம் நெறிப்படுத்தப்பட்டு வந்துள்ளது. அதன் அட்மினாகவே அந்த 17 வயதுடைய ரஷ்ய சிறுமி செயல்படுகின்றார்.

இந்த ப்ளூவேல் விளையாட்டை விளையாடிய 10இற்கும் மேற்பட்டோர் இதுவரை உயிரிழந்துள்ளனர்.

ப்ளூவேல் விளையாட்டில் இலக்கை அடைவதற்கான 50 செயல்முறைகள் உள்ளன அதன் இறுதிக்கட்ட இலக்கை அடைவதற்கான செயல்முறை தற்கொலையாகும்.

(ப)

## 25 ஆண்டு பொறுத்தோம் இனி பேச்சு கிடையாது!

### எச்சரிக்கிறார் ட்ரம்ப்



வடகொரியாவுடன் இனி பேச்சு கிடையாது என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரித்துள்ளார். வட கொரியா தொடர்ந்து கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணை சோதனைகளை மேற்கொண்டு வருகிறது.

சமீபத்தில் கூட ஜப்பான்மீது ஏவுகணையை பறக்கவிட்டு, பசுபிக் பெருங்கடலில் விழச் செய்து சோதனை நடத்தியது.

இந்த ஏவுகணை அணுஆயுதங்களை எடுத்துச் சென்று தாக்கும் திறனுடையது என்றும், அதுமட்டுமின்றி இந்த ஏவுகணை சோதனை குவாம் தீவு மீது தாக்குதல் நடத்துவதற்காக சோதனை செய்யப்பட்டது என்றும் தகவல்கள் கூறப்பட்டன.

இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் டுவிட்டர் பக்கத்தில், வடகொரியாவிடம் இனி பேச்சு எல்லாம் கிடையாது என்றும் 25 ஆண்டுகள் பொறுத்துப் பார்த்து விட்டோம் இனியும் பொறுக்க முடியாது என்று கூறியுள்ளார்.

இதற்கு அமெரிக்க முன்னாள் வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் ஜோன் கிர்பி, பேச்சுநடத்த ஏராளமானவாய்ப்புகள்இருப்பதை நினைவில் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

## அணுகுண்டு வீச்சில் தப்பியவர் 88 வயதில் சாவு!

ஜப்பானில் 2ஆம் உலக போரின் போது அமெரிக்கா நடத்திய அணுகுண்டு வீச்சில் காயத்துடன் உயிர் தப்பிய 88 வயதான டானிகுச்சி என்பவர் உடல் நிலை பாதிப்புற்று நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

2ஆம் உலக போரின் போது ஜப்பானை ஒடுக்குவதற்காக அமெரிக்கா, ஹிரோசிமா, நாகசாகி ஆகிய இடங்களில் அணு குண்டுகளை வீசியது.

ஹிரோசிமாவில் குண்டு வீசி 3 நாட்கள் கழித்து 1945ஆம் ஆண்டு ஒகஸ்ட் 9ஆம் திகதி நாகசாகியில் அணுகுண்டை வீசியது. இதில், 70 ஆயிரம் பேர் உயிர் இழந்தனர். ஏராளமானோர் காயத்துடன் உயிர் தப்பினார்கள். இதில் தப்பியவர்களில் டானிகுச்சி என்பவரும் ஒருவர்.

அவருக்கு அப்போது 16 வயது. ஹிரோசிமா நகரில் குண்டு வீசப்பட்ட இடத்தில் இருந்து ஒரு கி.மீற்றர் தூரத்தில் அவர் இருந்தார்.



அப்போது குண்டு வீசப்பட்டதில் இவருக்கும் தீக் காயம் ஏற்பட்டது. அவரது முதுகுப் பகுதி மற்றும் இடது கை பகுதி வெந்து கடுமையாக பாதிக்கப்பட்டு இருந்தார்.

ஒரு தடவை இவருக்கு நோபல் பரிசு வழங்க வேண்டும் என்று சிபாரிசு செய்யப்பட்டு இருந்தது. 88 வயதான அவர் நேற்று முன்தினம் உடல் நலம் பாதிப்புற்ற நிலையில் உயிர் இழந்தார்.

கடைசியாக அவர் புற்று நோயால் பாதிக்கப்பட்டு இருந்தார். இந்த நோய்க்குக் கூட அணுகுண்டு வீச்சு தான் காரணமாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது.



# டாக்கா டெஸ்டுக்குப் பிறகு ஆஸி. நல்ல மரியாதை கொடுப்பார்கள்!

## சாஹிப் அல் ஹசன் தெரிவிப்பு

டாக்கா டெஸ்டில் 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியாவை வீழ்த்தியதன் மூலம், இனிமேல் எங்களுக்கு நல்ல மரியாதை கொடுப்பார்கள் என சாஹிப் அல் ஹசன் கூறியுள்ளார்.

பங்களாதேஷ் - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலானமுதல்டெஸ்ட்போட்டி டாக்காவில் நடைபெற்றது.

இதில் பங்களாதேஷ் 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியாவை வீழ்த்தியது. டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் ஆஸ்திரேலியாவை பங்களாதேஷ் வீழ்த்தியது இதுவே முதல் தடவையாகும்.

ஆஸ்திரேலியா வெற்றி குறித்து சாஹிப் அல் ஹசன் கூறுகையில், கிரிக்கெட்டில் ஆஸ்திரேலியா வீரர்கள் மிகச் சிறந்தவர்கள். அவர்களிடம் இருந்து நாங்கள் கற்றுக் கொண்டிருக்கிறோம். இந்த போட்டிக்குப் பிறகு அவர்கள் எங்கள் மீது அதிக மரியாதை காட்டுவார்கள்.

எங்களது சொந்த மண்ணில் எந்த அணியையும் வீழ்த்துவோம் என்று நாங்கள் நம்புகிறோம். கடந்த இரண்டு மூன்று வருடங்களாக இந்த நம்பிக்கை இருந்து வருகிறது. எங்களது ஆட்டத்தை ஏராளமானவர்கள் பார்த்திருக்க மாட்டார்கள். ஆனால், நாங்கள் எங்களுடைய வேலையை சிறப்பாகச் செய்து வருகிறோம். - என்றார்.

# உயர் மட்ட கிரிக்கெட் கழகங்களுக்கு மைதான பராமரிப்பு உபகரணங்கள்









இலங்கை கிரிக்கெட் நிறுவனம் உயர் மட்டத்திலுள்ள 10 கிரிக்கெட் கழகங்களுக்கு 50 லட்சம் ரூபா பெறுமதியான மைதானத்தை மேம்படுத்தும் மற்றும் பராமரிக்கும் உபகரணங்களை வழங்கியுள்ளது.

சிறிய ரக கை ட்ராக்டர்கள், ஆடுகளத்தை வெட்டி பதப்படுத்தும் உபகரணங்கள், எல்லைக் கயிறுகள் மற்றும் பல மைதான பராமரிப்பு உபகரணங்கள் போன்றவையே இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளன.

சிங்களீஸ் ஸ்போர்ட்ஸ் கழகம், ப்ளூம்பீல்ட் கிரிக்கெட் கழகம், கொழும்பு கிரிக்கெட் கழகம், நண்டூஸ்கிரிப்ட் கிரிக்கெட் கழகம், தமிழ் யூனியன் மற்றும் தடகள கிரிக்கெட் கழகம், சில்லா மேரியன்ஸ் கிரிக்கெட் கழகம், மோர்ஸ் கிரிக்கெட் கழகம், கொழும்பு கோல்ட்ஸ் கிரிக்கெட் கழகம், இராணுவ விளையாட்டுக் கழகம், பர்கர் பொழுதுபோக்கு கழகம், கடற்படை விளையாட்டுக் கழகம் பொலிஸ் ஸ்போர்ட்ஸ் கழகம், விமானப்படை விளையாட்டுக் கழகம், மற்றும் பாணந்துறை விளையாட்டுக் கழகம் ஆகியன தேர்ந்தெடுக்கப்பட்ட உயர் மட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இலங்கை கிரிக்கெட் நிறுவனம் இந்த உபகரணங்களை வழங்கியுள்ளது.

பாடசாலை கழகங்கள் மாவட்டம் மற்றும் மாகாணங்களில்கிரிக்கெட்விளையாட்டை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் 50 லட்சம் ரூபா செலவில் இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கே.ஸி.ஸி.ஸி. அணியை தோற்கடித்த ஹாட்லியற்ஸ்


(கங்கா)

றஜீவன் அரைச்சதம் அடித்து, 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றி சகல துறையிலும் ஜொலிக்க, பலம்மிக்க கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணியை 69 ஓட்டங்களுக்குள் சுருட்டி மாபெரும் வெற்றியை ஹாட்லியற்ஸ் அணி சுவைத்தது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் கடந்த 26 ஆம் திகதி நடைபெற்ற முதற்சுற்று ஆட்டத்தில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணியை (கே.ஸி.ஸி.ஸி) எதிர்த்து ஹாட்லியற்ஸ் அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்ற ஹாட்லியற்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. ஹாட்லியற்ஸ் அணிக்கு ஆரம்பம் சரியாக அமையவில்லை. 16 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளை இழந்து தவித்தது. எனினும் அதன் பின்னர் களம்புகுந்த றஜீவன் - பிரதீபன் ஜோடி அணியைத் தூக்கி நிறுத்தியது.

றஜீவன் அதிரடியாக ஆடி அரைச்சதம் கடந்தார். பின்வரிசை வீரர்களும் தங்கள் பங்குக்கு



கைகொடுக்க, ஹாட்லியற்ஸ் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 145 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் றஜீவன் 52 ஓட்டங்களையும், பிரசாத் 32 ஓட்டங்களையும், பிரதீபன் 25 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் கே.ஸி.ஸி.ஸி அணி சார்பாக, சாம்பவன் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

146 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலளித்தாடிய கே.ஸி.ஸி.ஸி அணிக்கு, ஆரம் பம் முதலே பெரும் அதிர்ச்சி காத்திருந்தது. அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து, 27 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளைப் பறிகொடுத்தது.

இந்தப் பரிதாபத்தை காப்பாற்ற பிரதீஸ் போராடிய போதும், அந்தப் போராட்டம் வெற்றியளிக்கவில்லை. முடிவில் கே.ஸி.ஸி.ஸி அணி, 14 ஓவர்களில் 69 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் பிரதீஸ் 23 ஓட்டங்களைப் பெற்றார். வேறு எந்த வீரர்களும் இரட்டை இலக்க ஓட்டங்களைப் பெறவில்லை. மூன்று வீரர்கள் ஓட்டம் எதனையும் பெறாமல் ஆட்டமிழந்தனர்.

பந்துவீச்சில் ஹாட்லியற்ஸ் அணி சார்பாக, றஜீவன் 2 ஓவர்கள் பந்துவீசி 9 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டுகளையும், சேயோன் 3 ஓவர்கள் பந்துவீசி 22 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டுகளையும், நிசாந்த் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

# 2023 ஆண்டு வரை விளையாடுவேன்!

## மலிங்க கூறுகிறார்

இலங்கை அணிக்காகதனது 40 வயது வரை விளையாட தயாராக இருக்கிறேன் என யோர்க்கர் மன்னன் மலிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் மலிங்கா. 34 வயதாகும் இவர் யோர்க்கர் பந்து வீசுவதில் வல்லவர். சமீப காலமாக இவரது உடற்தகுதி குறித்து விமர்சனம் எழுந்து வருகிறது.

4 ஆவது போட்டி குறித்து மலிங்க அளித்த பேட்டியில், 34 வயதாகும் நான் 40 வயது வரை, அதாவது 2023 வரை விளையாடத் தயாராக இருக்கிறேன் என்று கூறியுள்ளார்.

மேலும் இதுகுறித்து மலிங்க கூறுகையில்; 'நான் காயத்தில் இருந்த போது 19 மாதங்களாக விளையாடவில்லை. அதற்குப் பின் இரண்டு மூன்று தொடர்களில்



மட்டுமே விளையாடியுள்ளேன். தற்போது எனது உடல் நல்ல நிலைமைக்குத் திரும்பி விட்டதாக உணர்கிறேன்.

மீண்டும் உடற்தகுதி பெறுவதற்கான அனைத்து சிகிச்சைகளையும் மேற்கொண்டு வருகிறேன். தொடர்ந்து 10 ஓவர்கள் வீச முடியும் என்ற நிலையை எட்டியுள்ளேன். ஒவ்வொரு போட்டியிலும் விக்கெட் வீழ்த்த வேண்டும் என பதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன் என்றும் தெரிவித்துள்ளார்.

# பெரும் கவலையுடனும் சங்கடத்துடனும் பதவியை இராஜினாமாச் செய்தேன்!

அண்மைக் காலமாக இலங்கை அணி சந்தித்து வருகின்ற தொடர் தோல்விகளுக்கு கிரிக்கெட் அதிகாரிகள் மற்றும் கிரிக்கெட் ஆர்வலர்களால் தொடர்ந்து வெளியிடப்பட்டுவரும் எதிர்ப்பின் காரணமாக கவலைக்கும், மனச்சங்கடத்திற்கும் மத்தியில் கிரிக்கெட் தெரிவுக் குழு பதவிலிருந்து இராஜினாமாச் செய்தார் என சனத் ஜய சூரிய தலைமையிலான தெரிவிக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

சனத் ஜயசூரிய தலைமையிலான இலங்கை கிரிக்கெட் தெரிவுக் குழு தனது இராஜினாமா கடிதத்தை விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகரவிடம் நேற்று கையளித்திருந்தது. இந்நிலையில் குறித்த இராஜினாமாக் கடிதத்தில் அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

கடந்த காலங்களில் எமது அணி பெற்றுக்கொண்ட தொடர் தோல்விகளையடுத்து இலங்கை கிரிக்கெட்டின் தெரிவுக் குழு உறுப்பினர்களான எமக்கு எதிராக பல்வேறுபட்ட விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. எனவே இவை அனைத்தையும் கருத்திற்கொண்டு தற்போது நடைபெற்று வருகின்ற இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான முத்தரப்பு கிரிக்கெட் தொடரிற்குப் பிறகு உடன் அமுலுக்கு வரும் வகையில் தெரிவுக் குழு பதவிகளிலிருந்து விலகுவதற்கு தீர்மானித்தோம்.

வெவ்வேறு தரப்பினரால் தெரிவிக்கப்பட்டு வருகின்ற மிகவும் கீழ்த்தரமான, மோசமான விமர்சனங்களால் இலங்கை கிரிக்கெட்டின் நற்பெயருக்கு ஏற்படுகின்ற களங்கத்தை தவிர்த்துக் கொள்ளும் நோக்கிலும், இலங்கை கிரிக்கெட்டின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டும் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

கிரிக்கெட் விளையாட்டின் போது இடைக்கிடையே ஏற்படுகின்ற பின்னடைவுகளைப் பார்த்து ஒரு சிலரின் தூண்டுதல் காரணமாக போட்டிகளைக் காண வருகின்ற எமது ரசிகர்களுக்கு மத்தியில் ஆவேசத்தையும், ஆதங்கத்தையும் ஏற்படுத்துவதற்கு முயற்சித்து வருகின்றனர். இதனால் இலங்கை கிரிக்கெட்டின் எதிர்காலம் கேள்விக் குறியாக மாறிவிடுவதுடன், இலங்கை அணியில் இடம்பெற்றுள்ள வீரர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் தெரிவுக் குழுவினர் மனநிலையை பெரிதும் பாதிக்கின்ற விடயமாகவும் அது மாறிவிடும்.

அத்துடன், எமது நாட்டின் கிரிக்கெட் விளையாட்டின் உண்மையான சுயரூபத்தை சர்வதேசத்துக்கு மத்தியில் வெளிச்சம் இட்டு காட்டுவது மாத்திரமல்லாது ஒரு தவறான கருத்தையும் அவர்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கும் அது காரணமாக அமைந்துவிடும்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பல்லேகலை கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற ஒருநாள் போட்டியின் இறுதிதருணத்தில் போட்டியைக் காண வந்த ரசிகர்கள் நடந்துகொண்ட விதம் இலங்கை கிரிக்கெட் வரலாற்றில் நாம் சந்தித்த மிகவும் மோசமான சம்பவமாகும்.

ஒரு சிலரால் தூண்டிவிடப்பட்டு மேற்கொள்ளப்பட்ட இந்த அநாகரிக செயலினால் இலங்கை கிரிக்கெட் ரசிகர்களின் மனங்களில் குரோதத்தையும், ஆவேசத்தையும் ஏற்படுத்தி இலங்கை கிரிக்கெட்டின் அபிமானத்தை சீர்குலைப்பதற்கு முன்னர் எமது இராஜினாமாவை அறிவிக்க



**சனத் தெரிவிப்பு**



தீர்மானித்தோம். இதனால் எமது கிரிக்கெட் விளையாட்டு மாத்திரமல்லாது இந்நாட்டின் கலாசார பாரம்பரியம் மற்றும் கௌரவத்தைப் பாதுகாக்க முடியும் என நம்புகிறோம்.

கடந்த 15 வருடங்களாக எமது மனைவி, குழந்தைகள் மற்றும் குடும்பத்தார், சொந்த வியாபாரங்களை யெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு இலங்கை கிரிக்கெட்டின் வளர்ச்சிக்காக பல்வேறு தியாகங்களை மேற்கொண்டோம். இந்நாட்டுக்காக விளையாடிய வீரர்களாக எமது அனுபவங்களை வைத்துத்தான் ஒவ்வொரு முடிவுகளும் எடுக்கப்பட்டன.

அதிலும் குறிப்பாக கடந்த காலங்களில் இலங்கை அணியில் அடிக்கடி இடம்பெற்றிருந்த பல வீரர்களின் உபாதைகளால் அணித் தெரிவின்போது மிகப் பெரிய சவால்களை ஏற்படுத்தின. இதனால் பலம் வாய்ந்த எதிரணிகளுக்கு எதிராக விளையாடுகின்ற சிறந்த வீரர்களை தொடர்ந்து அணியில் தக்கவைத்துக் கொள்ள முடியாமல் போனது. ஆனால் எமக்கு வழங்கப்பட்ட பொறுப்பை இந்நாட்டுக்காகச் செய்கின்ற உன்னதமான சேவையாகக் கருதி அணியின் வெற்றிக்காக செயற்பட்டோம்.

எனவே, பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் மிகவும் கவலை மிக்க மனதுடனும், கண்ணீருடனும் தெரிவுக்குழு பணியிலிருந்து விலகிச் சென்றாலும், இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் முன்னெடுக்கவுள்ள அனைத்து செயற்றிட்டங்களுக்கும் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்க எதிர்பார்த்துள்ளோம்.

அத்துடன் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தற்போதைய செயற்றிட்டங்கள் வெற்றியைக் கொடுக்காவிட்டாலும், எதிர்வரும் காலங்களில் இவையனைத்துக்கும் சிறந்த பலன் கிடைக்கும். கிரிக்கெட் உலகில் பல சாதனைகளைப் படைத்த பழைய இலங்கை அணியை விரைவில் எதிர்பாக்கலாம் என்பதில் எந்தவொரு சந்தேகமும் இல்லை.

இந்நிலையில், தாம் விளையாடுகின்ற அனைத்து போட்டிகளிலும் 100 சதவீத பங்களிப்பை வழங்கி வருகின்ற இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு இத்தருணத்தில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களிடம் உள்ள திறமைகள் தொடர்பில் என்றுமே நம்பிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டும் என ரசிகர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

இறுதியாக, எமது பணிகளை சிறப்பாக முன்னெடுத்துச் செல்வதற்கு ஒத்துழைப்பு வழங்கிய இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் உள்ளிட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கும், விளையாட்டுத்துறை அமைச்சருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் இலங்கை உள்ள கிரிக்கெட்டின் உயிர் நாடியாக உள்ள எமது ரசிகர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன், இலங்கை கிரிக்கெட்டுக்கு தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

வெளியே பாய்வதற்கு முன்னால் அது எப்பொழுதும் இருட்டாகவே இருக்கும் (it's always darkest, before the dawn) என்பதை ஞாபகப்படுத்தி எமது இராஜினாமாக் கடிதத்தை இவ்வாறு முன்வைக்கின்றோம்;.

மேற்கண்டவாறே, தெரிவுக் குழுவின் இறுதிக் கடிதம் அமைந்திருந்தது.

இதில் பங்களாதேஷ், ஸிம்பாப்வே மற்றும் அயர்லாந்து அணிகளுடன் மாத்திரம் வெற்றிகொண்டதுடன், வரலாற்றில் முதல்தடவையாக ஸிம்பாப்வே அணிக்கெதிராக ஒருநாள் தொடரை இழந்து இலங்கை அவமானத்தையும் சந்தித்தது.

இதன்படி கடந்த 15 மாதங்களில் 31 ஒருநாள் போட்டிகளுக்காக 41 வீரர்கள் இலங்கை அணிக்கு பயன்படுத்தப்பட்டுள்ளனர். இதில் ரி-20 போட்டிகளுக்கு 30 வீரர்களும், டெஸ்ட் போட்டிகளுக்காக 24 வீரர்களும் பயன்படுத்தப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து கிரிக்கெட் சபையைக் கலைத்து இடைக்கால நிர்வாக சபையை உருவாக்கி புதிய தெரிவுக் குழுவை நியமிக்குமாறும் தெரிவித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் அணித் தலைவரும் உலகக் கிண்ணத்தை வென்று கொடுத்த அணியின் தலைவருமான அர்ஜுன ரணதுங்க விசேட கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ள நிலையில் சனத் ஜயசூரிய தலைமையிலான தெரிவுக் குழுவினரின் இராஜினாமா கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சனத் ஜயசூரிய தலைமையிலான தெரிவுக் குழுவில் அணி முகாமையாளர் அசன்க குருசிங்க, ரஞ்சித் மதுரசிங்க, எரிக் உபஷாந்த, ரொமேஷ் களுவித்தாரண ஆகியோர் இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத் தக்கது.

இதன் பிரகாரம் இந்திய கிரிக்கெட் அணியுடனான கிரிக்கெட் தொடர் முடிவுடன் இந்த இராஜினாமா அமுலுக்கு வரவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## கிரிக்கெட் சூதாட்டம்:

# பாக். வீரர் ஷர்ஜீல்கானுக்கு 5 ஆண்டுகளுக்குத் தடை!




ஸ்பாட் பிக்சிங் சூதாட்டத்தில் ஈடுபட்டார் என பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட வீரர் ஷர்ஜீல்கானுக்கு 5 ஆண்டுகள் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் சூப்பர் லீக் 20 ஓவர் கிரிக்கெட் போட்டி கடந்த பெப்ரவரி மாதத்தில் டுபாயில் நடந்தது. இந்தப் போட்டியின்போது ஸ்பாட் பிக்சிங் சூதாட்டத்தில் ஈடுபட்டார் என பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் துடுப்பாட்ட வீரர் ஷர்ஜீல் கான் இடைநீக்கம் செய்யப்பட்டதுடன், நாட்டுக் குத் திருப்பி அனுப்பப்பட்டார்.

இந்த சூதாட்ட விவகாரம் குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் ஊழல் தடுப்பு தீர்ப்பாயம் விசாரணை நடத்தியது. விசாரணை முடிவில் ஷர்ஜீல்கானுக்கு 5 ஆண்டுகள் விளையாட தடை விதித்து தீர்ப்பாயம் உத்தரவிட்டுள்ளது.

## நாம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) எனின் அதை நாங்கள் எதிர்க்க வேண்டும். ஆனால், அவ்வாறான எமது எதிர்ப்பு இந்தியாவுக்கு எதிரான விடயம் அல்ல.

**சம்பூரில் அனல் மின்நிலையம்**

இருந்தாலும், எமது அவ்வாறான எதிர்ப்புக்கள் இந்தியாவுக்கு எதிரானது போலத் தோன்றலாம். உதாரணமாக – சம்பூரில் இந்தியா ஓர் அனல்மின் நிலையத்தை நிறுவ இருந்தது. அனல் மின் நிலையம் என்றால் எப்படி இருக்கும் என்பது உங்களுக்குத் தெரியும். இந்தியாவிலேயே அனல்மின் நிலையங்கள் மூடப்படவேண்டும் என்று இந்திய மக்கள் போராட்டங்களை முன்னெடுக்கின்றார்கள். அதேபோல்தான், சம்பூரில் அனல்மின் நிலையம் அமைப்பதையும் நாங்கள் கடுமையாக எதிர்த்தோம்.

அது தொடர்பான போராட்டங்களில் நாமும் கலந்து கொண்டோம். போராட்டங்களை நாங்களே கூட ஒழுங்கமைத்தோம். ஆனால், இந்தியா ஏன் அந்த அனல்மின்நிலையத்தைசம்பூரில் நிறுவ விரும்பியது என்றால், சம்பூரில் தமக்கு ஓர் இருப்பு வைத்திருந்தால், ஒட்டுமொத்த மாகத் திருகோணமலைத்துறை முகத்தைத் தங்களது பிடிக்குள் வைத்திருக்கலாம் என்பதற்காகத்தான்.

**திருகோணமலை துறைமுகமும் சம்பூரும்**

சம்பூரில் இருப்புவைத்திருப்பவர்கள் எவரும் திருகோணமலைத் துறைமுகத்தை முடக்கக் கூடிய கேந்திர முக்கியத்துவம் சம்பூருக்கு இருக்கின்றது. முன்னர் – விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டில் சம்பூர் இருந்த போது – இதே கேந்திர முக்கியத்துவத்தின் காரணமாக – சம்பூர் பிரதேசத்திலிருந்து புலிகள் இயக்கத்தை எப்படியாவது அகற்றி விடவேண்டும் என்று, அமெரிக்க பாதுகாப்புத் துறைத் தலைமையகமான பென்டகன் கூட ஓர் அறிக்கையை 2003ஆம் ஆண்டு வெளியிட்டது. அதற்காகத்தான் சிறிலங்கா அரசாங்கம் ஓர் அணுமின் நிலையத்தை அங்கு நிறுவ வேண்டும் என்று கேட்டுக்கொண்டது. தான் அங்கு ஓர் இருப்பு வைத்திருக்க வேண்டும் என்று விரும்பிக் காத்திருந்த இந்தியா அந்த கோரிக்கைக்கு இணங்கியது. நாங்கள் அதை எதிர்த்தோம். இறுதியில் அந்த அனல்மின் நிலையம் கை விடப்பட்டது.

ஆனால், நாங்கள் இந்தியாவிடம் நாம் மிகத்தெளிவாகச் சொல்லியிருக்கின்றோம் – நீங்கள் ஏன் சம்பூரில் ஓர் இருப்பு வைத்திருக்க வேண்டும் என்று விரும்புகின்றீர்கள் என்று எங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால், அனல்மின் நிலையம் உருவாக்கப்படுவதையே நாங்கள் எதிர்க்கிறோமே தவிர, உங்களது இருப்பை நீங்கள் அங்கு வைத்திருப்பதையிட்டு எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்று தெளிவாகத் தெரிவித்திருக்கின்றோம்.

இந்த விடயத்தை சம்பூர் பிரதேசத்தைச் சேர்ந்த எமது மக்களுக்கும், நாங்களே மக்களை நேரில் சந்தித்து தெளிவாகக் கூறியிருக்கிறோம். அதற்குப் பிற்பாடு, சூரிய சக்தியில் மின்சாரம் உற்பத்தி செய்யும் ஆலை ஒன்றை இந்தியா அதே இடத்தில் வந்து அமைக்க விரும்பியது. அதற்கு நாங்கள் எந்தவித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை.

அதேபோல – பலாலி விமான நிலையத்தை ஒரு சர்வதேச விமான நிலையமாக மேம்படுத்துவதற்கும், அதனை தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கும் விரும்பிய இந்தியா, அதற்காக மிகவும் கஷ்டப்பட்டது. இந்த ஆட்சி இருக்கும்போதே அதனைச் செய்துவிடவேண்டும் என்று மிகவும் அவசரப்பட்டது. பலாலியை சர்வதேச விமான நிலையம் ஆக்கினால், இன்று இருக்கின்ற வலிகாமம் வடக்கு பிரதேசத்தின் பெருமளவான நிலத்தை சிறிலங்கா அரசு நிச்சயமாக ஆக்கிரமிக்கும்; ஏற்கனவே ஆக்கிரமித்திருப்பதையும் நியாயப்படுத்தும். இந்த நிலையில், யாழ்ப்பாணத்தில் இருக்கும் இந்தியத் துணைத் தூதுவர் நடராஜன் அவர்களை நாங்கள் சந்தித்து இந்த நிலைமையையும் எமது நிலைப்பாட்டையும் அவருக்குத் தெளிவு படுத்தினோம்:

**வன்னியில் நிலம் தாராளம்**

நீங்கள் தயவு செய்து பலாலியை விட்டு வன்னிப்பகுதியில் எங்கேயாவது ஒரு சர்வதேச விமான நிலையத்தைக் கட்டுங்கள். மக்கள் மிகவும் ஐதாகப் பரவி வாழும் வன்னிப் பிராந்தியத்தில் நிலம் தாராளமாக இருக்கின்றது. ஆனால், பலாலி பிரதேசத்தில் இடமேயில்லை. அரச காணிகள் அங்கு இல்லை. ஆகவே, தயவு செய்து, நீங்கள் பலாலியை விட்டுவிட்டு வன்னிக்குச் செல்லுங்கள் என்று சொன்னோம். அதற்கு அவர் சொன்னார், எங்களுக்கு பலாலி தான் வேண்டும்; ஏனெனில், பலாலி வேறு ஒரு தரப்பின் கைகளுக்குள் போய்விடுவதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. குறிப்பாகச் சீனா என்று.

அப்பொழுது நாங்கள் – சரி, அதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அப்படியாயின், 80களில் பலாலி விமான நிலையம் இருந்த காணியின் எல்லையை மீறி மேலதிக காணிகளை நீங்கள் கைப்பற்றாமல் இருந்தால்–நீங்கள் பலாலியில் சர்வதேச விமான நிலையம் உருவாக்குவதை நாம் எதிர்க்க மாட்டோம் என்று கூறினோம். அப்பொழுது, உண்மையான விமான நிலையத்தின் அசல் எல்லையில் இருந்து ஓர் அங்குலம் கூட மேலதிகமாக எடுக்கமாட்டோம் என்று துணைத்தூதுவரும் அவரோடிருந்த இதர அதிகாரிகளும் எமக்கு வாக்குறுதி தந்தார்கள். அதன்பிற்பாடு, பலாலி விமான நிலையத்தை இந்தியா தரமுயர்த்துவதற்கு எம்மிடமிருந்து எந்தப் பிரச்சினையுமே எழவில்லை.

ஒரு தரப்பை எதிர்ப்பது அல்லது ஆதரிப்பது என்பதனை, அந்தத் தரப்பின் அடிப்படை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நலன்கள் எவ்வாறாக எமது நலன்களுடன் தொடர்புபடுகின்றன என்பதை வைத்துத்தான் தீர்மானிக்க வேண்டும். அதை விடுத்துவிட்டு, இந்தியா ஒரு மாற்றுக் கருத்து வைத்திருக்கின்றது என்பதற்காகவும், இந்தியா எங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்ற ஒரு கோணத்தில் செயற்படுகின்றது என்பதற்காகவும் நாம் காட்டுகின்ற எதிர்ப்பை, ஏதோ நாம் இந்தியாவையே எதிர்க்கின்றோம் என்று யாரும் அர்த்தப்படுத்தினால், அதற்கு நாங்கள் பொறுப்பில்லை.

**தமிழ்மக்களின் நலன்களின் அடிப்படையிலேயே அணுகுவோம்**

ஒன்றில் நாங்கள் இந்தியாவை முழுமையாக எதிர்க்க வேண்டும் அல்லது முழுமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டோடு செயற்படுவதற்கு நாங்கள் தயாரில்லை. தமிழ் மக்களுடைய நலன்களின் அடிப்படையிலேயே அனைத்து விடயங்களையும் நாங்கள் அணுகுவோம். அந்த வகையில் – இந்தியா எடுக்கின்ற ஒரு முடிவு எமது இனத்தைப் பாதிக்கும் என்றால், நாங்கள் அந்த முடிவினை எதிர்ப்போம். அது இந்தியா என்றாலும் சரி, அல்லது வேறெந்த நாடாகிலும் சரி, நாங்கள் அந்த முடிவினை எதிர்ப்போம். அதே வேளையில், மாறாக, அவர்கள் எமது இனத்தின் நலன்களையும் உள்வாங்கித்தங்களுடையநலங்களைப் பேண முற்படுவார்களேயானால், அதற்கு நாங்கள் எங்களது முழு ஒத்துழைப்பையும் வழங்குவோம். அது இந்தியாவுக்கு நன்றாகத் தெரியும்.

*காங்கிரஸ் அரசாங்கமே புலிகளை அழித்தது; பாரதீய ஜனதாக் கட்சி (பி.ஜே.பி.) அரசாங்கம் புலிகள் விடயத்தில் கண்டும் காணாமலேயே இருந்தது. இப்போது பி.ஜே.பி. அரசாங்கம் ஆட்சியில் உள்ளது?*

பி.ஜே.பி. ஆட்சிக் காலத்தில் பிழைகள் நடக்காமல் இருந்திருக்கலாம், அல்லது காங்கிரஸ் காலத்தில பிழைகள் நடந்திருக்கலாம். ஆனால், வெளிவிவகார கொள்கை என்ற விடயத்தில், ஆட்சிக்கு யார் வந்தாலும் எந்த விதமான வித்தியாசமும் கிடையாது. அதில் நாங்கள் மிகவும் தெளிவாக இருக்க வேண்டும். எந்தவொரு சந்தர்ப்பத்திலுமே, காங்கிரஸ்தான் ஒரு விடயத்தைச்செய்தது என்றும், பி.ஜே.பி. யாக இருந்திருந்தால் அவ்வாறாகச்செய்திருக்காது என்றும் யாராலும் நிரூபிக்க முடியாது.

பக்கம் 03 »

## மீள்குடியேற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பகுதிகள் உயர் பாதுகாப்பு பகுதிகளாக அறிவிக்கப்பட்ட பின்னர் அப்பகுதிக்கான சேவைகள் இடை நிறுத்தப்பட்டிருந்தன.

இந்த நிலையிலேயே தற்போது அப்பகுதிக்கான சேவைகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ளதாக வலி.கிழக்கு தனியார் சிற்றூர்தி சங்கத் தலைவர் அறிவித்துள்ளார்.

இதன்படி மீள்சேவையில் ஈடு படவுள்ள பகுதிகள் வருமாறு:–

அச்சுவேலி பஸ் நிலையத்தில் இருந்து சந்நிதி வீதியூடாக காற்றாட்டி சந்தியூடாக வளலாய் வடக்கு பாம்வீச் சந்தி சென்று அங்கிருந்து வளலாய் பிள்ளையார் கோவிலடி ஊடாக தம்பாலை சந்தியூடாக அச்சுவேலி யாழ்ப்பாண சேவை இடம்பெறவுள்ளது.

இதேபோன்று அச்சுவேலியில் இருந்து ஒட்டகப்புலம் ஊடாக மக்கோனா பாடசாலையூடாக சுதந்திரபுரம் சந்தியூடாக வயாவிளான் பாடசாலை வரைக்கும் மூளாய்க்கான பாதை (773) தற்காலிகமாக மேற்குறித்த எல்லை வரைக்கும் சேவையை ஆரம்பிக்கின்றோம் எனச் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார்.

## இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) எனக் கூறப்பட்டது.

அரசமைப்புப் பேரவையாகவும் இயங்கும் நாடாளுமன்றத்தை இயன்ற விரைவில் கூட்டி, அதில் இந்த இடைக்கால அறிக்கையைச் சமர்ப்பிக்கவும் –

அதனடிப்படையில் புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான நாடாளுமன்ற நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தவும்–

அரசுத் தரப்பில் முடிவு செய்யப்பட்டிருப்பதாக அறிய வந்தது.

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நாயகம் தம்மிக்க தசநாயக்க, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் கமல் பத்மசிறி ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற திருத்தச் சட்டமூலம் கடந்த 20 ஆம் திகதி அமைச்சர் பைஸர் முஸ்தபாவினால் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

அந்தச் சட்டமூலம் கடந்த 25 ஆம் திகதி நாடாளுமன்றில் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) யும்நடக்கும் இந்தியப் பெருங்கடல் கருத்தரங்கில் பங்கேற்கவுள்ளனர்.

அதேவேளை, இந்தக் கருத்தரங்கில் பங்கேற்க சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணனும் நேற்று முன்தினம் மாலை கொழும்பு வந்துள்ளார்.

இதனிடையே, கொழும்பு வந்துள்ள இந் திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜை சந்திப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திட்டமிட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-க)

## சுவாமி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) விசாரிக்கப்பட்ட நிலையிலேயே இந்த அனுமதியை நீதிமன்றம் வழங்கியது.

இந்த மனு நேற்றுப் பிற்பகல் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது மனுதாரர் ஜனாதிபதிசட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் சார்பில் அவரே ஆஜரானார்.

எதிர் மனுதாரர்களுள் ஒருவரான அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் ஜெயசூரியாவும், அடுத்த எதிர்மனுதாரரான அர்சிலோ விட்டல் பிரான்ஸ் நிறுவனத்தின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜயரத்னவும் சட்டமா அதிபர் சார்பில் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் விரேகா சிறிவர்த்தனவும் முன்னிலையாகினர்.

எதிர்மனுதாரரான அமைச்சர் சுவாமிநாதனிடம் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றில் பத்திரம் ஒன்றைத் தாக்கல் செய்தார்.

மதிப்பீட்டு முகாமைத்துவத்துக்கான அமைச்சரவையின் உபகுழுவின் வழிகாட்டல்படியே இந்தப் பொருத்து வீடுகளை அமைக்கும் ஒப்பந்தம் அர்ச்சிலோவிட்டல் பிரான்ஸ் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது என அவர் சுட்டிக்காட்டினார்.

அதனால் இந்த வழக்கில் முழு அமைச்சரவையையுமே எதிர்மனுதாரராகச் சேர்க்க வேண்டிய தேவை தமக்கு எழுந்துள்ளது என்பதை ஒப்புக் கொண்ட மனுதாரர், அதனடிப்படையில் இந்த மனுவைத் திரும்பப்பெற்று புதிய வழக்கை – முழு அமைச்சரவையையும் எதிர்மனுதாரர் பட்டியலில் உள்ளடக்கி – தாக்கல் செய்வதற்குத் தமக்கு அனுமதி அளிக்கும்படி வேண்டினார்.

இது தொடர்பான சட்ட வாதங்களை செவிமடுத்த நீதியரசர்கள் இவ்விடயத்தை ஒட்டி மீண்டும் ஒரு புதிய வழக்கைத் தாக்கல் செய்யும் உரித்துடன் மனுதாரர் தமது தற்போதைய மனுவை விலக்கிக் கொள்ள அனுமதியளித்தனர். (உ)

## நடுக்கடலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அப்போது ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கைக் கடற்படையினர் அதனை அவதானித்து, அதி வேகப் படகு ஒன்றில் விரைந்து சென்று, மீன்பிடி ட்ரோலரில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்த நான்கு மீனவர்களையும் காப்பாற்றினர்.

அவர்களுக்கு உணவு, குடிதண்ணீர் என்பவற்றை வழங்கிய கடற்படையினர், உடனடியாக காங்கேசன்துறைக் கடற்படை முகாமுக்குக் கொண்டுசென்று முதலுதவிச் சிகிச்சைகளை வழங்கினர்.

அவர்களை மீண்டும் தமிழகத்திற்கு அனுப்பிவைப்பதற்காக இந்தியத் தூதரக உயர் அதிகாரிகளை கடற்படை அதிகாரிகள் தொடர்புகொண்டுள்ளனர் எனவும் நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, கடலில் மூழ்கிக்கொண்டிருந்த மீனவர்களின் ட்ரோலர் படகையும் தாங்கள் விரைந்து செயற்பட்டு மீட்டுள்ளனர் எனவும் கடற்படையினர் தெரிவித்தனர். (ம)

## பிரேஸிலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஜயசூரியவுக்கு எதிராக கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னர் பிரேஸில் நாட்டில் வழக்கு தொடரப்பட்டது.

இதனையடுத்து, அவர் நாட்டிலிருந்து வெளியேறியதாக தகவல்கள் வெளியாகின. எனினும், அவர் தமது பதவிக்காலம் முடிந்தே நாடு திரும்பியதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் வாஷிங்டன் போஸ்டின் கேட் குரோனின் ஃபாமான் என்ற செய்தியாளர், இந்த விடயத்தை ஆராய்ந்து அறிக்கையிட்டுள்ளார்.

அவரது செய்தியின்படி, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கை அங்கத்துவம் பெறாமை காரணமாக போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பாக இலங்கையில், உள்ளூர் விசாரணைகள் நடைபெறுமாக இருந்தால், அதன்மூலம் உரிய தண்டனைகள் வழங்கப்படமாட்டா.

எனவேதான், மனித உரிமைகள் செயற்பாட்டாளர் ஒருவர் பிரேஸில் நாட்டில் இந்த வழக்கைத் தாக்கல் செய்தார். பிரேஸிலின் சட்ட முறைமையின்படி தமது நாட்டுக்குள் வந்த ஒருவர் இனப் படுகொலை, சித்திரவதை போன்ற குற்றங்கள் தொடர்பில் குற்றவாளியாக காணப்பட்டால் அவருக்கு தண்டனை வழங்க முடியும்.

ஜகத் ஜயசூரியவை பொறுத்தவரையில் அவர் இராஜதந்திர சிறப்புரிமையைக் கொண்டிருக்கின்ற போதும், வழக்குத்தாக்கல் செய்யப்பட்டமையால் அவரின் இராஜதந்திர சிறப்புரிமையை விலக்கிக்கொள்ளுமாறு இலங்கை அரசாங்கத்திடம் கோரியிருக்க முடியும்.

இதன்போது, இலங்கை அரசாங்கமும் எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கலாம். எனவேதான், ஜகத் ஜயசூரிய பிரேஸிலை விட்டு வெளியேறியிருக்கலாம். – என வொஷிங்டன் போஸ்ட் குறிப்பிட்டுள்ளது.

லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஏதாவது ஒரு நாடு, இந்த வழக்கை விசாரணை செய்ய தீர்மானித்திருந்தால், ஜகத் ஜயசூரிய சர்வதேச பிடியாணைக்கு வாய்ப்பிருந்தது.

இந்த நிலையில்தான் அவர் பிரேஸிலிலிருந்து நாடு திரும்பியிருக்கலாம். – எனவும் அப்பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# மன்னார் ஈச்சளவக்கை, சன்னார், காயாநகர் மக்களுக்கு நீர் வழங்கல் திட்டத்தை விரைவில் அமுல்படுத்தவும்!

## சாள்ஸ் எம்.பி. கோரிக்கை விடுக்கிறார்



மன்னார், செப். 01

குடிதண்ணீருக்கு மிகவும் அவதியுறும் மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள ஈச்சளவக்கை, சன்னார், காயா நகர் பகுதி மக்களுக்கு நீர் வழங்கல் திட்டத்தை மேற் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கின்ற போதும் அவற்றை உடன் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பெரியமடுவில் ஐரோப்பிய யூனியனின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் வழங்கப்பட்ட நீர் வழங்கல் திட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே சாள்ஸ் எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஒரு மனிதனுடைய அத்தியாவசிய தேவைகளில் நீர் பிரதானமானது. ஆந்த நீர் எங்களுக்கு சாதாரணமாக கிடைக்கின்றபடியால் அந்த நீரின் மகத்துவம் எமக்குப் பெரிதாக விளங்குவதில்லை.

ஆனால், அந்த நீர் எமக்கு கிடைக்கப்பெறவில்லை என்ற சூழ்நிலை ஒன்று ஏற்படும்பட்சத்தில் அந்த நீரின் மகத்துவம் நம் எல்லோருக்கும் நன்கு தெரியும்.

நாம் உணவு இல்லாமல் சிறிது காலம் இருந்துவிடலாம் ஆனால், நீர் இல்லாமல் நாம் அந்த சிறிது காலம் இருப்பது கடினமானது.

ஆகவே, இந்த பெரியமடு பகுதி மக்களுக்கு நீரின் அவசியத்தை உணர்ந்து இன்று இந்த நீர் வழங்கல் திட்டத்தை ஆரம்பித்து வைத்துள்ள நீர் வழங்கல் அமைச்சுக்கும் இதனோடு இணைந்த தொண்டர் நிறுவனத்துக்கும் எமது மாவட்ட மக்கள் சார்பாக எனது நன்றியை தெரிவித்து நிற்கின்றேன்.

இதே நேரத்தில், அமைச்சர் குறிப்பிட்டமை போல இந்த பெரியமடுவுக்கும் விடத்தல் தீவுக்கும் இடைப்பட்ட நான்கு கிராமங்களுக்கு இந்த நீர் வழங்கல் திட்டம் கிடைக்கப் பெறாமல் இருந்து வருகின்றது.

அந்தப் பிரதேச மக்கள் நீண்ட காலமாக தங்களுக்கு குடிதண்ணீர் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இருந்தும் அமைச்சர் அவர்கள் தற்பொழுது உறுதி அளித்துள்ளார் இந்த நான்கு கிராமங்களின் குடிதண்ணீர் விநியோகத்துக்கு 9 கோடி ரூபா தேவைப்படுவதாகவும் இதற்கு அரசு ஒரு பகுதி நிதியையும் மிகுதி பணத்தை நிறுவனங்களிடமிருந்தே பெற்று இந்தத் திட்டத்தை விரைவில் பூர்த்தி செய்ய இருப்பதாக தெரிவித் துள்ளார். இந்த வகையில் அமைச்சருக்கு நான் எனது நன்றியை தெரிவித்து நிற்கின்றேன்.

ஈச்சளவக்கை, சன்னார் கிராமங்களின் பிரதிநிதிகள் இங்கு வந்திருக்கின்றார்கள் இவர்கள் தங்களுக்கு இரு பக்கங்களிலுமுள்ள விடத்தல்தீவு மற்றும் பெரியமடுவுக்கு குடிதண்ணீர் விநியோகம் வழங்கப்படுகின்றது ஆனால் எங்கள் கிராமங்களை ஊடறுத்துச் செல்லுகின்ற எங்கள் கிராமங்களுக்கு ஏன் இந்தத் திட்டத்தை அமுல்படுத்தாது இருக்கின்றனர் என்று என்னிடம் தொலைபேசியின்மூலம் தெரிவித்தனர்.

ஆகவே, அமைச்சர் இந்தப் பகுதிக்கு வருகிறார் தெரியவருகின்றது. ஆகவே நாங்கள் அவர் வரும் வழியை மறித்து அவரிடம் மகஜர் கையளிக்க இருக்கின்றோம் என தெரிவித்தனர்.

நான் அவர்களுக்கு தெரிவித்தது அப்படி செய்ய வேண்டாம் நீங்கள் இவ்விடத்துக்கு வாருங்கள் அமைச்சரிடம் மகஜர் கையளித்து அவருடன் உரையாடுவதற்கான ஏற்பாடுகளை ஒழுங்கு படுத்துகின்றேன் என்று தெரிவித்தேன்.

இருந்தபோதும் இவர்களின் விடயத்தில் அமைச்சர் மிகவும் அக்கறையுடன் இருக்கின்றார் என்பதை வட பிராந்திய பொது முகாமையாளர் மூலம் எனக்கு தெரியவந்தது.

சன்னார், ஈச்சளவக்கை, காயாநகர் அகிய இடங்களுக்கு இத்திட்டம் விரிவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவது தெரியவந்தது.

அதாவது, இந்தத் திட்டங்களுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளனவெனவும்இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதும் இந்தத் திட்டங்களும் உடன் தொடங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, அமைச்சர் இந்தக் கிராம மக்கள் சார்பாக நான் உங்களிடம் வேண்டுகிறேன், இந்தக் கிராம மக்களின் அத்தியாவசிய தேவையான குடிதண்ணீர் பிரச்சினையை நீங்கள் இந்த குடிதண்ணீர் திட்டத்தை விரைவில் பூர்த்தி செய்து கொடுப்பீர்கள் என நான் எதிர்பார்த்திருக்கின்றேன்.

இந்தப் பெரியமடு பிரதேசத்தில் மக்கள் இடம் பெயர்ந்து தற்பொழுது மீள்குடியேறி வருகின்றனர். ஆகவே, நீங்கள் குறிப்பிட்டமைபோல இந்த நாட்டில் சிறுபான்மை மக்கள் அதாவது தமிழ் முஸ்லிம் மக்கள் கௌரமாக வாழக்கூடிய அதிகார பரவலாக்கலைப் பெற்றுக் கொள்வது இந்த நல்ல சூழ்நிலையில் எதிர்க்கட்சி தலைவரும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவருமாகிய சம்பந்தன் ஐயாவும் முஸ்லிம் கட்சியின் தலைவராக இருக்கின்ற ரவூப் ஹக்கீமாகிய நீங்கள் இருவரும் நல்ல உறவைப் பேணுபவர்கள் ஆகவே இருவரும் இணைந்து வடக்குக் கிழக்கு தமிழ் பேசும் மக்கள் கௌரவத்துடன் வாழக் கூடிய நிலையை உருவாக்கிக் கொடுப்பீர்கள் எனவேண்டி நிற்கின்றேன் என்றும் அவர் தெரிவித் துள்ளார். (க- 112)

# நாளை மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 05 மணிவரை யாழ் பிரதேசத்தில் கரம்பன், மெலிஞ்சிமுனை ஆகிய பிரதேசங்களில் மின் சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

# நுண்கலை வகுப்பு நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்.01

இந்து கலாசாரத் திணைக்களத்தால் நடத்தப்படும் இலவச வாய்ப்பாடு, பண்ணிசை, வயலின், மிருதங்கம் போன்ற நுண்கலை வகுப்புக்கள் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் ஆரம்பமாகித் தொடர்ந்து சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும்.

இந்த நுண்கலை வகுப்புகளில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் நாளை சனிக்கிழமைக்கு முன்னர் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு இந்து கலாசாரத் திணைக்களத்தினர் அறிவித்துள்ளனர்.

# தண்டனையில் இருந்து தப்பிக்கும் நிலை முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்!

## சம்பந்தன் தெரிவிப்பு

பெரும் மனித உரிமை மீறல் குற்றங்களைப் புரிந்தோர் தண்டனையில் இருந்து தப்பிக்கும் நிலை இலங்கையில் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித்தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அனைத்துலக நாளை முன்னிட்டு, கொழும்பில் நேற்று முன்தினம் மாலை கவன வீர்ப்பும் பொதுகூட்டமும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

காணாமல் போதல்-இனி ஒருபோதும் வேண்டாம் என்ற தொனிப் பொருளில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில் அமைச்சர் மனோ கணேசன், எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், சிவில் சமூகப் பிரதிநிதிகளான நிமல்கா பெர்னாண்டோ, பாக்கிய சோதி சரவணமுத்து, பிரிட்டோபெர்னாண்டோ உட்படபலர்கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பட்டியலை அரசு வெளியிட வேண்டும் என்றும், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான பணியகத்தை உடனடியாகச் செயற்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

இந்தநிகழ்வில் பெரும் எண்ணிக்கையான, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பங்கேற்றிருந்தனர். (க)

# ‘மக்களுடன் நாம் மக்களுக்காக நாம்’ வேலைத்திட்டம்; அர்ப்பணிப்புடன் முன்னெடுத்துச் செல்லப்படவேண்டும்!

## ஈ.பி.டி.பி. செயலாளர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.01

‘மக்களுடன் நாம் மக்களுக்காக நாம்’ என்னும் வேலைத்திட்டத்தை அர்த்தபூர்வமாகவும் அர்ப்பணிப்புடனும் முன்னெடுத்துச்செல்லவேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித் துள்ளார்.

ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் வட்டார நிர்வாக செயலாளர்கள் மற்றும் உதவியாளர்களுடனான விசேட ஒன்றுகூடலில் சிறப்புரையாற்றுகையிலேயே டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாம் அரசியலில் மேலும் அதிகளவு பலப்படுகின்ற போதுதான் தமிழ் மக்களின் வேதனைகளையும் ஆறாவடுக்களையும் மட்டுமல்லாது அவர்களுக்கான தேவைகளையும் இனங்கண்டு தீர்வுகளை பெற்றுக்கொள்ள முடியும்.

காலாகாலமாக தமிழ் மக்கள் தமக்கான ஓர் அரசியல் தலைமையை சரியான வகையில் இனங்கண்டு கொள்ளாமையால் இற்றைவரை பல துயரங்களை சுமந்து வாழ வேண்டிய நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

தமிழ் மக்களது தலையெழுத்துக்கள் மாற்றப்பட வேண்டுமானால் சரியான அரசியல் தலைமைகளை மக்கள் இனங்கண்டு அவர்களைத் தெரிவுசெய்ய வேண்டும்.

அவ்வாறான ஒரு சூழ்நிலையை தமிழ் மக்கள் உருவாக்கும்போதுதான் அவர்கள் தமது அரசியலிலும் வாழ்வியலிலும் மேம்பாடு காணமுடியும்.

அதை உணர்ந்து கொண்டு மக்கள் எதிர்காலங்களில் செயற்படுவார்களேயானால் அவர்களது வாழ்வியலை எம்மால் பல்வேறு வழிகளிலும் மாற்றம் காண செய்யமுடியும் என்பதுடன் அரசியல் தீர்வுக்கான வழிமுறைகளையும் வெற்றிகொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த வட்டார நிர்வாக கட்டமைப்பு உருவாக்கப்பட்டதன் நோக்கம் தொடர்பாக கட்சியின் வட்டார நிர்வாக செயலாளர்களுக்கு தெளிவுபடுத்தியிருந்த டக்ளஸ் தேவானந்தா, எதிர்காலத்தில் எத்தகைய அரசியல் வழிமுறைகளூடாக மக்களுக்கான தேவைப்பாடுகளை முன்னெடுத்து, எடுத்துக் கொண்ட இலக்கின் பெறுபேற்றை அடைய முடியும் என்றும் எடுத்துரைத்துள்ளார். (க)

# இணுவில் கிழக்கில் இன்று மண்டபத் திறப்பு விழா

இணுவில், செப்.01

இணுவில் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் முருகேசு பொன்னம்பலம் ஞாபகார்த்த மண்டபத்திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இணுவில் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் ப.ராஜ்குமார் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக முருகேசு புஷ்பராசா தம்பதிகளும் சிறப்பு விருந்தினர்களாக யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், அகில இலங்கை இந்து மாமன்றத்தைச் சேர்ந்த சி.குணபாலன் மற்றும் யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்.பஞ்சலிங்கம், ஆகியோரும் கௌரவ விருந்தினராக கிராம அலுவலர் செல்வி.ச.இசைச் செல்வியும் கலந்து கொள்ளவுள்ளார்கள். (இ)

# தீபம் ஏற்றி காணாமல் ஆக்கப்பட்டோரை நினைவு கூர்ந்த அமெ. உதவி ராஜாங்கச் செயலர்!






தெற்கு மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான அமெரிக்காவின் பதில் உதவி இராஜாங்கச் செயலர் அலிஸ் வேல்ஸ் இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக நினைவுத் தீபம் ஏற்றினார்.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான சர்வதேச நாளை முன்னிட்டு, கொழும்பில் நேற்றுமுன் தினம் மாலை நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், அமைச்சர் மனோ கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பெருமளவில், இந்த நிகழ்வில் ஒன்று கூடியிருந்தனர்.

இந்த நிகழ்வில், இலங்கை வந்துள்ள தெற்கு மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான அமெரிக்காவின் பதில் உதவி இராஜாங்கச் செயலர் அலிஸ் வேல்ஸ், இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அதுல் கெசாப், ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி போல் கொட்பிறி உள்ளிட்ட வெளிநாட்டு இராஜதந்திரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நினைவாகத் தீபம் ஏற்றப்பட்டது. அமெரிக்காவின் பதில் உதவி இராஜாங்கச் செயலர், அமெரிக்க தூதுவர் உள்ளிட்டோரும் தீபங்களை ஏற்றி காணாமல் ஆக்கப்பட்டவர்களை நினைவு கூர்ந்தனர்.




# தேசிய காப்புறுதி தினத்தை முன்னிட்டு நினைவு முத்திரை



கொழும்பு, செப்.01

இன்று செப்ரெம்பர் முதலாம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள தேசிய காப்புறுதி தினத்தை முன்னிட்டு வெளியிடப்படும் நினைவு முத்திரை மற்றும் முதல் நாள் தபாலுறை, தபால் மற்றும் முஸ்லிம் மத அலுவல்கள் பிரதி அமைச்சர் துலிப் விஜயசேகரவினால் நேற்று முற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்பட்டது.

காப்புறுதி நிறுவனங்களின் வேண்டுகோளுக்கிணங்க செப்ரெம்பர் முதலாம் திகதியை தேசிய காப்புறுதி தினமாக பிரகடனப்படுத்துவதற்கு இலங்கை காப்புறுதிச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இலங்கை காப்புறுதிச் சபையின் தலைவி இந்ராணி சுகததாச மற்றும் அதன் பணிப்பாளர் நாயகம் தமயந்தி பெர்னாண்டோ உள்ளிட்ட குழுவினர் இந்த நிகழ்வில் இணைந்து கொண்டனர். (இ)

# குருநாகலிலிருந்து மன்னாருக்கு சர்வ மதத் தலைவர்கள் விஜயம்



(வாஸ் கூஞ்ஞ)

இனங்கள் மற்றும் மதங்களுக்கிடையில் உண்மையான புரிந்துணர்வும் ஒற்றுமையும் நிலைத்து நீடிப்பதற்கு மன்னார் கரித்தாஸ் – வாழ்வுதய அமைப்பின் இயக்குநர் அருட்பணி எம்.ஜெயபாலன் அடிகளார் சர்வமத தலைவர்களின் விஜயம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார். இதற்கமைய அண்மையில் குருநாகல் மறை மாவட்ட கரித்தாஸ் ஜென சத்த பணிப்பாளர் தலைமையில் அப்பகுதியிலிருந்து ஐந்து பௌத்த மத குருக்களும், நான்கு மௌலவிமாரும், ஒரு இந்துக் குருக்களும், மூன்று கத்தோலிக்க அருட்தந்தையர்களும், மூன்று கத்தோலிக்க அருட்சகோதரிகளும் இக் குழுவில் இருந்தனர்.

இக்குழுவினர் முதலில் மடு தியான இல்லத்துக்கு சென்றதுடன் அங்கு மடு பரிபாலகர் அருட்பணி எஸ். எமிலியானுஸ்பிள்ளை அடிகளாரால் வரவேற்கப்பட்டு ஒரு சந்திப்பும் இடம் பெற்றது. இச் சந்திப்பின் போது மடுத்திருத்தலத்தின் புனிதத்தன்மை தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

அதைத் தொடர்ந்து மறுநாள் இந்த சர்வமதத் தலைவர்கள் கொண்ட குழுவினர் மன்னார் நகருக்கு வருகை தந்ததுடன் மன்னார் வாழ்வுதயம் மண்டபத்தில் சர்வமத நல்லிணக்க சம்பந்தமான கலந்துரையாடலிலும் ஈடுபட்டதுடன் மன்னார் பெரியபள்ளிவாசல் மௌலவி எஸ். ஏ. அசீமைச் சந்தித்து உரையாடியதுடன் மன்னார் மாவட்டத்திலுள்ள இந்து, பௌத்தம், முஸ்லிம், கத்தோலிக்க முக்கிய மதத் தலங்களுக்கும் சென்று அங்குள்ள மதத்தலைவர்களையும் சந்தித்து உரையாடினர்.

இந்தக் குழுவினர் இரண்டு தினங்களாக மன்னார் மாவட்டத்திலுள்ள சர்வமதத் தலைவர்களை சந்தித்து இன ஒற்றுமைக்கு முன்னர் மதத்தலைவர்கள் மத்தியில் புரிந்துணர்வும் ஒற்றுமையும் நிலைநாட்ட வேண்டும் என்ற நோக்கிலே இந்த விஜயத்தை மேற்கொண்டனர் என எமது செய்தியாளரிடம் அவர்கள் தெரிவித்தனர். (இ–112)

# வவுனியா விவசாய பண்ணைக் கட்டடத் தொகுதி திறந்து வைப்பு!







வவுனியா, செப். 01

ஐரோப்பிய ஒன்றியத்தின் உணவு மற்றும் விவசாய ஸ்தாபனத்தின் நிதியின் கீழ் அமைக்கப்பட்ட வவுனியா விவசாய பண்ணைக் கட்டடத் தொகுதி நேற்று வடமாகாண சபை விவசாய அமைச்சர் க.சிவநேசனால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் வடமாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன், ஐரோப்பிய ஒன்றியத்தின் உணவு மற்றும் விவசாய ஸ்தாபனத்தின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான பிரதிநிதி லிபுசோகுபாவு, வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார் மற்றும் அதிகாரிகள், விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது ஐரோப்பிய ஒன்றியத்தின் உணவு மற்றும் விவசாய ஸ்தாபனத்தின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான பிரதிநிதியால் நெல் அறுவடை இயந்திரம், நெல் தரம் பிரிக்கும் இயந்திரம் மற்றும் அலுவலக உபகரணங்களும் விவசாயத் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டன. (க–100)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.09.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.